# ஞான மலர்



கலாபூஷணம் எஸ்.ஆர்.ஞானசுந்தரம்
நினைவான மலர் 2011-03-05



மண்ணில்
மைந்தனாய்
08.10.1921



வானுறை
தெய்வமாய்
04.02.2011

அமரர்

# எஸ்.ஆர். ஞானசுந்தரம்

அவர்கள்

திதி வெண்பா


ஆண்டு விகிர்தி தைசேர் பிரதமையில்
ஈண்டு சிறந்த பெருங்கலைஞர் - வேண்டுமுயர்
சீர்ஞான சுந்தரத்தார் தேசார் இறைவனடி
ஆர்வமுடனே அடைந்திட்டார்.



நானும் பங்கேற்ற நிகழ்வுகளில் சில...

# ஞானம் அவர்கள் விரும்பிப் படித்த திருப்பாடல்கள்

உ
சிவமயம்



# அமரர் அவர்கள் விரும்பிப் படிக்கும் – திருப்பாடல்கள்

திருச்சிற்றம்பலம்

திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனைமுகத்தானைக்
காதலால் கூப்புவர் தம்கை.

முருகனே செந்தி முதல்வனே மாயோன்
மருகனே ஈசன் மகனே - ஒருகை முகன்
தம்பியே நின்னுடைய தண்டைக்கால் எப்பொழுதும்
நம்பியே கை தொழுவேன் நான்

காக்கக் கடவிய நீ காவாதிருந்தக்கால்
ஆர்க்கும் பரமாம் அறுமுகவா - பூக்கும்
கடம்பா முருகா கதிர்வேலா நல்ல
இடங்காண் இரங்காய் இனி.

## திருப்புகழ்

### 1 ஆம் படைவீடு - திருப்பரங்குன்றம்

சந்த னந்தி மிர்ந்த ணைந்து குங்குமங் கடம்பிலங்கு
சண்பகஞ் செறிந்திலங்கு - திரள்தோளும்
தண்டையஞ்சிலம்பலம்ப வெண்டையஞ்சல் அஞ்சலென்று
சஞ்சிதஞ் சதங்கை கொஞ்ச - மயிலேறித்
திந்திமிந்தி மிந்திமிந்தி தந்தனந்தனந்தனென்று
சென்றசைந்து கந்து வந்து - க்ருபையோடே

சிந்தையங்குலம் புகுந்து சந்ததம் புகழ்ந்துணர்ந்து
செம்பதம் பணிந்திரென்று - மொழிவாயே
அந்தமந்தி கொண்டிலங்கை வெந்தழிந்திடும்பகண்டன்
அங்கமுங்குலைந்தரங்கொள் - பொடியாக
அம்பகும்பனும் கலங்க வெஞ்சினம் புரிந்து நின்று
அம்புகொண்டு வென்ற கொண்டல் - மருகோனே
இந்து வுங்கரந்தை தும்பை கொன்றையும் சலம்புனைந்தி
டும்பரன்ற னன்பில் வந்த - குமரேசா
இந்திரன் பதம் பெறண்டர் தம்பயங்கடிந்தபின்பு
எண் கணங்கமர்ந்திருந்த - பெருமாளே.

## 2 ஆம் படைவீடு - திருச்செந்தூர்

முந்துதமிழ் மாலை கோடிக்கோடி
சந்தமொடு நீடு பாடிப்பாடி
முஞ்சர் மனை வாசல் தேடித்தேடி - உழலாதே
முந்தைவினை யேவ ராமற் போக
மங்கையர்கள் காதல் தூரத்தேக
முந்தடிமை யேனை யாளத்தானு - முனைமீதே
திந்தி திமி தோதித் தீதித்தீதி
தந்ததன தானத் தானத் தான
செஞ்சணகு சேகு தாளத்தோடு நடமாடும்
செஞ்சிறிய கால் விசாலத் தோகை
துங்க அனுகூல பார்வைத் தீர
செம்பொன்மயில் மீதி லேயெப்போது வருவாயே
அந்தண் மறை வேள்வி காவற்கார
செந்தமிழ் சொல் பாவின் மாலைக்கார
அண்டருப கார சேவற்கார முடிமேலே
அஞ்சலி செய்வோர்கள் நேயக்கார
குன்றுருவ ஏவும் வேலைக்கார
அந்தம் வெகுவான ரூபக்கார - எழிலான
சிந்துரமின் மேவு போகக்கார
விந்தைகுற மாது வேளைக்கார
செஞ்சொலடி யார்கள் வாரக்கார - எதிரான
செஞ்சமரை மாயு மாயக்கார
துங்கரண சூர சூறைக்கார
செந்தில் நகர் வாழும் ஆண்மைக்கார பெருமாளே

### 3 ஆம் படை வீடு - பழனி

ஆறுமுகம் ஆறுமுகம் ஆறுமுகம் ஆறுமுகம்
ஆறுமுகம் ஆறுமுகம் - என்று பூதி
ஆக மணி மாதவர்கள் பாதமலர் சூடுமடி
யார்கள் பதமேதுணைய - தென்று நாளும்
ஏறுமயில் வாகனகு காசரவணாவெனது
ஈசஎன மானமுற - என்று மோதும்
ஏழைகள் வியாகுலமி தேதெனவினாவிலுனை
ஏவர்பு கழ்வார் மறையும் - என்சொலாதோ
நீறுபடு மாழைபொரு மேனியவ வேலவணி
நீலமயில் வாக உமை தந்தவேளே
நீசர்கள் தம்மோடெனது தீவினையெலாமடிய
நீடு தனி வேல் விடும - டங்கல் வேலா
சீறிவரு மாறவுண னாவியுணும் ஆனைமுக
தேவ துணைவாசிகரி - அண்டகூடம்
சேருமழகார் பழநி வாழ் குமரனேபிரம
தேவர் வர தா முருக - தம்பிரானே

### 4 ஆம் படை வீடு - சுவாமி மலை

நிறைமதி முகமெனும் - ஒளியாலே
நெறிவிழி கணையெனு - நிகராலே
உறவு கொள் மடவர்கள் - உறவாமோ
உனதிரு வடியினி - அருள்வாயே
மறை பயிலரிதிரு - மருகோனே
மருவல ரசுரர்கள் - குலகாலா
குறமகள் தனை மணம் - அருள்வோனே
குருமலை மருவிய - பெருமாளே

## 5 ஆம் படை வீடு - திருத்தணிகை (குன்றுதோறாடல்)

இரு மலு ரோக முயலகன் வாதம்
எரிகுண நாசி - ஷீடமே நீ
ரிழிவு விடாத தலைவலி சோகை
எழுகள மாலை - கிடையோடே
பெருவயிறீளை எரிகுலை சூலை
பெருவலி வேறும் - உள நோய்கள்
பிறவிகள் தோறும் எனை நலியாத
படியுனதாள்கள் - அருள்வாயே
வருமொரு கோடி அசுரர் பதாதி
மடிய அநேக இசைபாடி
வருமொரு கால வயிவராட
வடிசுடர் வேலை விடுவோனே
தரு நிழல் மீதில் உறை முகிலூர்தி
தருதிரு மாதின் - மணவாளா
சலமிடை பூமி நடுவினில் வீறு
தணிமலை மேவு பெருமாளே.

## 6 ஆவது படைவீடு

காரணமதாக வந்து - புவிமீதே
காலனணுகாதிசைந்து - கதிகாண
கரணனும் வேதன் முன்பு - தெரியாதே
ஞான நடமே புரிந்து - வருவாயே
ஆரமுத மான தந்தி - மணவாளா
ஆறுமுக மாறிரண்டு - விழியோனே
சூரர் சிறை மாளவென்ற - கதிர்வேலா
சோலை மலை மேவிநின்ற - பெருமாளே

உ

ஓம் சரவணபவ



# தேவராய சுவாமிகள் இயற்றிய

# கந்த சஷ்டி கவசம்

## காப்பு

### நேரிசை வெண்பா

துதிப்போர்க்கு வல்வினைபோம் துன்பம்போம் நெஞ்சிற்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் - கதித்தோங்கும்
நிஷ்டையும் கைகூடும் நிமலன்அருள் கந்தர்
சஷ்டி கவசந் தனை.

### குறள் வெண்பா

அமரர் இடர்தீர அமரம் புரிந்த

குமரன் அடிநெஞ்சே குறி.

### நிலைமண்டில ஆசிரியப்பா

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவும் செங்கதிர் வேலோன்
பாத மிரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட
மையல் நடஞ்செயும் மயில்வா கனனார்
கையில் வேலாலெனைக் காக்கவென் றுவந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா வெண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக

நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரஹண பவனார் சடுதியில் வருக
ரஹண பவச ரரரர ரரர
ரிஹண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரஹண வீரா! நமோ நம
நிபவ சரஹண நிறநிற நிறென
வசர ஹணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை யாளு மிளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையுங் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற் றென்முன் நித்தமு மொளிரும்
சண்முகன் நீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாஞ்சிவ குகன்தினம் வருக
ஆறுமுகமும் அணிமுடி யாறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகுகுண் டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமுந் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயி றுந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்தினம் பதித்த நற்சீ ராவும்
இருதொடை யழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க

செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுகுண டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடுடு டுடுடுடு டுடுடுடு டுடுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை யாளும் ஏரகச் செல்வ!
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்று
உன்திரு வடியை உறுதியென் றெண்ணும்
என்தலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வே லிரண்டும் கண்ணினைக் காக்க
விழிசெவி யிரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்ன மிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்தின வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க

சிற்றிடை யழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்குறி இரண்டும் அயில்வேல் காக்க
பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வடிவேல் காக்க
பணைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிர லடியிணை அருள்வேல் காக்க
கைக ளிரண்டும் கருணைவேல் காக்க
முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவ ளிருக்க
நாவிற் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பா னாடியை முனைவேல் காக்க
எப்பொழு தும்எனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க
ஏமத்தில் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்க தாக்க தடையறத் தாக்க
பார்க்க பார்க்க பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை யகல
வல்ல பூதம் வலாஷ்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழைக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராட் சதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசிகாட் டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலு மிருட்டிலும் எதிர்ப்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோ டனைவரும்

விட்டாங் காரரு மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டா ளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை யடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைக ளென்பும்
நகமும் மயிரும் நீண்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டியச் செருக்கும் ஒட்டியப் பாவையும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றான் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூதாளெனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட் டலறி மதிகெட் டோட
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுட னங்கம் கதறிடக் கட்டு
கட்டி யுருட்டு கால்கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு முழிகள் பிதுங்க
செக்கு செக்கு செதில்செதி லாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடுவிடு வேலை வெருண்டது வோட
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித்தொடர்ந் தோடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதுடன் இறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசயங் குன்மம் சொக்குச் சிரங்கு

குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தரணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீயெனக் கருள்வாய்
ஈரே ழுலகமும் எனக் குறவாக
ஆணும் பெண்ணும் அனைவரு மெனக்கா
மண்ணா ளரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன்றிரு நாமம்
சரஹண பவனே சைலொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொளி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வே லவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை அழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா
பழநிப் பதிவாழ் பால குமாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின்மா மலையுறும் செங்கல்வ ராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்னா விருக்க யானுனைப் பாட
எனைத்தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவசமாக
ஆடினேன் னாடினேன் ஆவினன் பூதியை
நேசமுடன் யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னருள் ஆக
அன்புடன் இரட்சி அன்னமும் சொன்னமும்
மெத்தமெத் தாக வேலா யுதனார்
சித்திபெற்று அடியேன் சிறப்புடன் வாழ்க

வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்கவென் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை அடியேன் எத்தனை செயினும்
பெற்றவன் நீகுரு பொறுப்பது உன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்ற வளாமே
பிள்ளையென்று அன்பாய்ப் பிரியம் அளித்து
மைந்தன்என் மீதுன் மனமகிழ்ந்து அருளித்
தஞ்சமென்று அடியார் தழைத்திட அருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசாரத்துடன் அங்கம் துலக்கி
நேச முடன்ஒரு நினைவது ஆகிக்
கந்தர் சஷ்டி கவசம் இதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்து நீறுஅணிய
அஷ்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்னர் எண்மர் அருளுவர்
மாற்றலர் எல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமதன் எனவும் நல்எழில் பெறுவர்
எந்த நாளும் ஈரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாம் கவசத்து அடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியாய்க் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிபொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்துஎனது உள்ளம் அஷ்ட லட்சுமிகளில்

வீரலட் சுமிக்கு விருந்துஉண வாகச்
சூரபத் மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க்கு உவந்துஅமுது அளித்த
குருபரன் பழநிக் குன்றினில் இருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத்து ஆட்கொள்ள எந்தன் உள்ளம்
மேவிய வடிவுறும் வேலவ போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
,டும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோர் அரசே
மயில்நட மிடுவோய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்.
சரணம் சரணம் சண்முகா சரணம்.

முற்றிற்று.



# ஞானம் அவர்களின்
# வாழ்க்கையின் பதிவுகள்

# ஒரே பார்வையில்...

## கிடைத்த கௌரவங்கள்

1. கலாபூஷணம்

   இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் (1999)

2. சமாதான நீதிவான்

   இலங்கை சனநாயக சோசலிச குடியரசு (2002)

3. சிவத்தமிழ் விருது

   தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானம் (2010)

4. கூட்டுறவுச் சேவையில் 25 வருடம் சேவையாற்றிய கூட்டுறவாளன்

   தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்

5. 'ஸ்வரஞான கலாபமணி'

   சர்வதேச இந்துமத குருபீடம் – 2002

6. 'கலை ஞான கேசரி'

   வடக்கு – அபிவிருத்தி புனர்வாழ்வு, புனரமைப்பு

   தமிழ் விவகாரங்கள் அமைச்சு 2001

7. சமூகத் தொண்டன்

   யாழ். மாவட்ட அரசாங்க செயலகம்

## அலங்கரித்த பதவிகள்

1. தலைவர்,

   இலங்கை இசைவேளாளர் சங்கம்

2. தலைவர்,

   பழை – வீமன்காமம் கிராமோதய சபை

3. உபதலைவர்,

   தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்

   கிளை 10

4. உப தலைவர்,

மாவை கொல்லங்கலட்டி கிராம அபிவிருத்திச் சங்கம்

5. செயலாளர்,

கம்பன் கலைக் கழகம்

6. செயலாளர்,

இலங்கை இசைவேளாளர் சங்கம்

7. செயலாளர்,

வீமன்காமம் மகா வித்தியாலய அபிவிருத்திச் சங்கம்

8. பொருளாளர்,

பலை – கூத்தியவத்தை கிராம அபிவிருத்திச் சங்கம்

9. பொருளாளர்,

கயரோகத் தடுப்பு செயற்பாட்டுக் கழகம்

வலி வடக்கு

10. பொருளாளர்,

பாவனையாளர் சங்கம், வலி. வடக்கு

11. செயற்குழு உறுப்பினர்,

இலங்கை தமிழரசுக் கட்சி, காங்கேசந்துறைக் கிளை

12. செயற்குழு உறுப்பினர்,

மாவை முருகன் திருப்பணிச் சபை

13. ஆசிரியர்,

'சிலம்பொலி' மாதாந்த சஞ்சிகை

14. ஆசிரியர்

'இசையாளன்' சஞ்சிகை

15. பத்திரிகை நிருபர்

உதயன், ஈழநாடு, தினபதி, சிந்தாமணி

16. ஆசிரியர்

துர்க்காதேவி, இசைப்பாடசாலை, தெல்லிப்பழை

ஞானத்தின் இசைப்பணி பற்றி ஆய்வுமேற்கொண்ட
யாழ். பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைப்பீடத்தின்
மாணவி செல்வி சுபாஜினி இராசேந்திரத்தின்

## ...ார்வையில் வாழ்க்கையின் பதிவுகள்....

ஈழத் திருநாட்டின் வட பகுதியில் மூர்த்தி, ஸ்தலம், தீர்த்தம் மூன்றும் ஒருங்கே ...மையப்பெற்ற மாவிட்டபுரத்தில் 1923 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 8 ஆம் திகதி ...சா. இராமநாதன் என்பவருக்கும் நாகம்மா என்பவருக்கும் மூத்த புதல்வனாக ஞானசுந்தரம் ...பிறந்தார்.

காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியில் கல்வியைத் தொடர்ந்த இவர் இளமையிலேயே நாகசுரக் கலை மீது கொண்ட பற்றுக் காரணமாக மாவிட்டபுரத்தைச் சேர்ந்த தனது உறவினர்களான பெரியதகப்பன் பக்கிரிசாமிப்பிள்ளை, சிறிய தகப்பன்மார்களான உருத்திராபதி, நடராஜா ஆகியோரிடம் நாகசுரக் கலையை முறைப்படி கற்று கலையுலகில் நுழைந்து கொண்டார். 14 வயதில் தனது தந்தையை இழந்தமை இவர் நாகசுரக் கலைக்குள் நுழையக் காரணமாயிற்று.

இவரது தந்தையார் இராமநாதன் சிறந்த தவில் இசை வித்துவானாகத் திகழ்ந்தார். அவரது பெரியதகப்பன் பக்கிரிசாமிப்பிள்ளை பிரபல நாதசுரவித்துவானாகவும் விளங்கினார். பக்கிரிசாமிப்பிள்ளை அவர்கள் நாடக நடிகர்களை இந்தியாவிலிருந்து அழைத்து வந்து நாடக அரங்குகளை நாவலர் சந்தியில் கொட்டகைகளை அமைத்துச் செய்தார். சிறிய தகப்பன் மார்களான உருத்திராபதி, நடராஜா ஆகியோர் பிரபல நாதசுர வித்துவானாகவும், இசை யாசிரியராகவும் நாடக இயக்குநராகவும் திகழ்ந்தனர்.

இவரது குடும்பத்தில் பெரியதகப்பன், சிறிய தகப்பன் அனைவருக்கும் எல்லாம் பெண் பிள்ளைகளாக இருந்தனர். அவற்றில் இவர்தான் ஆண் வாரிசாகத் திகழ்ந்தபடியால் அவர்கள் இவரை அவர்களே சிறுவயதிலிருந்து செல்லமாக மாறிமாறி வளர்த்தனர். இதன் காரணமாக அவர்களிடம் தான் நாதசுரப் பயிற்சியைப் பெற வாய்ப்பு ஏற்பட்டது.

இவரது பெரியதகப்பன் பக்கிரிசாமிப்பிள்ளை, சிறிய தகப்பன்மார்களான உருத்திராபதி, நடராஜா ஆகியோர் கூறியது தங்களது மூச்சு மாவை முருகனுக்கே உரியது எனக் கூறி மாவை முருகனுக்கே தனது நாதாஞ்சலியை அர்ப்பணித்து அங்கு ஆஸ்தான வித்துவானாகவும் விளங்கினர். இக்கலைஞர்களின் தொண்டினைப் பாராட்டி சிறந்த வித்துவானென அன்னார் களுக்கு இசைச் கலாரசிகர்கள் சார்பில் மாவை ஆதீன முதல்வர் பிரம்மஸ்ரீ சு. துரைச்சாமிக் குருக்கள் அவர்களால் தங்க நாதஸ்வரம் வழங்கப்பட்டது. அநேக ரசிகர்களால் தங்க மெடல்களும் வழங்கப்பட்டன.

இவரது தகப்பனார் இறந்த பிறகு பெரியதகப்பன், சிறியதகப்பன் அவர்களின் உதவியில் வாழ்ந்தார். பிறகு அவர்களும் காலமான பின்பு இவர் தனது குடும்பத்தை தானே பொறுப்பேற்றுச் செயற்பட்டு வந்தார். அந்தக் காலத்தில் தனக்கு நாகசுரப் பயிற்சியும் காணாது. இவர் தனது சுயமுயற்சியினால் குடும்பத்தை தளரவிடாது காப்பாற்றி வந்தார். அந்த நேரத்தில் வெளியாட்கள் இவருக்கு உதவி செய்து மனம் தளராது காப்பாற்றி வந்தார்கள். இவரது சகோதரர்கள் மூன்று ஆண்களும், ஒரு பெண்ணுமாக நான்கு சகோதரர்கள் உள்ளனர். அவர்களின் பெயர்களாக அமரர் சுப்புலட்சுமி, அமரர் சோமசுந்தரம், பாலகிருஷ்ணன் ஆகியோர் ஆவார். பாலகிருஷ்ணன் தவில் இசையில் சிறந்த வித்துவானாகத் திகழ்ந்தார். பாலகிருஷ்ணன் அவர்கள் பத்மநாதனுடன் இணைந்து தவில் வாசித்துப் பிரபல்யம் பெற்றவர் ஆவார்.

திரு. எஸ்.ஆர். ஞானசுந்தரம் அவர்கள் S.S.C வரை படித்திருந்தார். இவர் வட இலங்கை சங்கீதசபைப் பரீட்சையில் தரம் ஒன்று தொடக்கம் ஐந்தாம் தரப் பரீட்சையில் சித்தியடைந்தார் எனவும் ஐந்தாம் தரப் பரீட்சையில் P. சாம்பமூர்த்தி அவர்கள் மேற்பார்வை யாளராகவும் கடமையாற்றினார் எனவும் குறிப்பிட்டார். பின்னர் ஆறாந்தரம் பரீட்சை எழுது வதற்கு S.S.C பரீட்சைப் பெறுபேறு சமர்ப்பிக்கப்பட வேண்டும். ஆனால் இவர் S.S.C. படித்திருந்தும் S.S.C பரீட்சை எடுக்காதபடியால் தரம் ஆறு பரீட்சையும் எடுக்காமல் போனது இவருக்கு கிடைத்த துரதிஷ்டமே எனலாம்.

இவர் தம் சகோதரியான சுப்புலட்சுமிக்கு திருமணம் செய்து வைத்து. தம்பிமார்களுக்கும் திருமணம் செய்து வைத்து, அவர்களுக்கு வீடும் கட்டிக்கொடுத்து தனது சுயமுயற்சியினால் குடும்பத்தை கஷ்டமில்லாமல் காப்பாற்றி வந்துள்ளார். பின்னர் இவர் தன தொழிலை அபிவிருத்தி செய்வதற்காக சில காலம் இந்தியா சென்று அங்கு பயிற்சி பெற்றார். பின்னர் இன்னும் தன்னுடைய தொழிலை அபிவிருத்தி செய்யவேண்டும் என்ற நோக்கோடு இந்தியாவில் இருந்து திறமைமிக்க நாகசுர தவில் கலைஞர்களை அழைத்து தனது இசைச் சேவையை அபிவிருத்தி செய்து வந்தார். இதற்கு மக்களின் ஆதரவும் கிடைக்கப் பெற்றுள்ளது என்று கூறினார்.

முருகன் கருணையும் பெரியதகப்பன், சிறிய தகப்பன் அவர்களின் சிட்சையும், அன்பும் பாசமும், ஊக்கமும், குருநாதரின் ஆசியும், அருள்வாக்கும் தான் அவரை இந்நிலைக்கு உயர்த்தியது என்று அடிக்கடி அவர் கூறுவதுண்டு.

அந்தக் காலத்தில் குருகுலவாசம் எத்தனையோ இன்னல்களைத் தாண்டிப் பொறுமையுடன் இருந்தால்தான் பயன் அளிக்கும். இக்காலத்திலோ இசைப் பாடப் புத்தகங்களும் இசை வகுப்புக்களும் இருப்பதால் இன்றைய இசை மாணவர்களுக்குக் குருகுல வாசத்தில் நிகழும் இன்னல்கள் இல்லை எனலாம்.

இவருக்கு வாய்த்த இசைச் சூழலும், இவரது தனிநபர் ஆற்றலும் இவரை மிக விரைவிலேயே கவனிப்புக்குரிய ஒரு கலைஞர் ஆவதற்கான வாய்ப்பை உருவாக்கியது.

ஞானசுந்தரம் அவர்கள் 23 வயதில் மாவிட்டபுரம் சொந்த மாமனின் மகளான நாகேஸ்வரி என்பவரைத் திருமணம் செய்து கொண்டார். இவருக்கு மூன்று ஆண் குழந்தைகளும், நான்கு பெண் குழந்தைகளும் உள்ளனர். இவரின் ஆண்குழந்தைகளாக குகநாதன், இராமநாதன், ஜெகநாதன் ஆகியோர் ஆவார். பெண் குழந்தைகளாக சுதாதேவி, கலாதேவி ஜெயாதேவி, சீதாதேவி, ஆகியோர் ஆவர். இவரின் பிள்ளைகளில் குகநாதன் பத்திரிகைத் தொழில் புரிந்து வருகின்றார். அடுத்து இராமநாதன் தவில் வாசித்து வருகின்றார். அடுத்து ஜெகநாதன்

கிளிநொச்சியில் வசித்து வருகின்றார். சுதாதேவி இணுவிலில் குடும்பத்துடன் வசிக்கின்றார். கலாதேவி பிரான்ஸிலும், ஜெயாதேவி லண்டனிலும், சீதாதேவி கனடாவிலும் தங்கள் குடும்பத்துடன் வாழ்ந்து வருகின்றனர். அவர்களில் ஜெயாதேவி அங்குள்ள பத்திரிகைகள், சஞ்சிகைகளுக்கு கவிதைகள், கட்டுரைகள் எழுதி வருகின்றார்.

ஞானசுந்தரம் அவர்கள் நாகசுரக் கலையை அதன் தனித்துவத்தை இந்தியா சென்றும் கற்க விரும்பி தமிழ் நாட்டின் சிறந்த நாகசுரக் கலைஞனான திருச்சறை கிருஷ்ணமூர்த்தியை அணுகி நான்கு வருடங்கள் நாகசுரக் கலையை கற்றுக் கொண்டார்.

பின்னர் நாடு திரும்பிய அவர் தமிழ் நாட்டின் மூத்த சிறந்த தவில் வித்துவான்கள், இலங்கைக்கு - யாழ்ப்பாணத்துக்கு அழைத்து வந்து பல்வேறு இடங்களில் கச்சேரிகளை நடத்தினார். தவில் வித்துவான் மீனாட்சி சுந்தரம், நாகசுரவித்துவான் கண்ணப்பாபிள்ளை ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

இந்தக் காலத்தில் யாழ்ப்பாணத்தில் பிரபல்யமாக விளங்கிய அனைத்து நாகசுர, தவில் வித்துவான்களுடனும் தமிழகத்தில் இருந்து யாழ்ப்பாணம் வருகைதந்த நாகசுர வித்துவான் களுடனும் பல நூற்றுக்கணக்கான கோவில்களில் சேர்ந்து வாசிக்கும் சந்தர்ப்பங்கள் பல இவருக்கு ஏற்பட்டன. இவை எல்லாம் இவருக்கு நிறையப் பாடங்களைப் படித்துத் தந்தன எனலாம். இதன் மூலம் இவரது முன்னேற்றத்திற்கு ஏதுவாக இருந்தது.

சண்முகமூர்த்தி, திருவாரூர் இராஜரத்தினம், கண்ணப்பாபிள்ளை, ராமு சுப்பிரமணியம் மற்றும் பல கலைஞர்கள் இந்தியாவில் இருந்து யாழ்ப்பாணம் வந்து கச்சேரிகள் புரியத் தொடங்கிய காலத்தில் ஞானசுந்தரம் அவர்களது இணை நாகசுரமாக வாசிக்கத் தொடங்கினார்கள். இக்கால கட்டத்தில் தான் ஞானசுந்தரம் என்ற ஒரு தனியாளுமையை இசை ரசிகர்கள் பரவலாக இனங்காணத் தொடங்கியிருந்தனர்.

திருச்சறை கிருஷ்ணமூர்த்திப்பிள்ளை (நாகசுரம்), திருவிடைமருதூர் மகாலிங்கம் (தவில்), வலங்கைமான் சண்முகசுந்தரம் (தவில்), நாச்சிமார் கோவில் இராகவப்பிள்ளை உட்பட யாழ்ப்பாணக் கோயில்கள் பலவற்றிற்கும் வருகைதந்த பல இந்திய நாகசுர, தவில் கலைஞர்களோடு அவர் இணை சேர்ந்து வாசித்துள்ளார்.

இதேவேளை ஈழத்தில் உருவாகிய அனைத்து புகழ்மிக்க நாகசுர, தவில் வித்துவான்களோடும் ஞானசுந்தரம் இணைந்து வாசித்துள்ளார். அவர் அங்கம் வகித்தார். ஆரம்பக் குழு வித்துவான்கள் கண்ணப்பாபிள்ளை, ராமு சுப்பிரமணியம், சுப்பையயாகம்பர் என்பவர்களை உள்ளடக்கியதாகவும் ஆற்றலும், மேன்மையும் மிக்க குழுவாகவும் இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் திகழ்ந்தது.

தஞ்சாவூர் ஜில்லாவிலுள்ள திருப்புகழூர் என்ற ஊரே தமது மூதாதையரின் சொந்தவூர் எனக் குறிப்பிட்ட கலாபூஷணம் ஞானசுந்தரம், மாவைக்கந்தன் ஆலயத்தில் நாகசுர சேவையைச் செய்வதற்காக தமிழ் நாட்டில் இருந்து குடும்பமாக யாழ்ப்பாணத்தில் வந்து குடியேறியதாகவும் தெரிவித்தார். இதன் மூலம் மாவைக்கந்தன் ஆலயத்தின் நாகசுரக் கலைஞர் பரம்பரையில் நான்காவது தலைமுறையைப் பேணும் வாய்ப்பு தனக்குக் கிடைத்ததாகவும் அவர் தெரிவித்தார். மாவைக் கந்தன், நல்லூர்க் கந்தன், யாழ். சிவன் உட்பட குடாநாட்டின் பல்வேறு ஆலயங்களிலும் நாகசுரக் கலைஞர் ஞானசுந்தரம் நாதமழை பொழிந்திருக்கின்றார். மாவிட்டபுரம் கந்தசுவாமி மாவை முருகன் தேவஸ்தானத்தில் 45

ஆண்டுகளாக ஆஸ்தான வித்துவானாக இருக்கும் பாக்கியம் இவருக்கு கிடைத்தது என்று கூறியுள்ளார்.

நாகசுரம் என்னும் இசைக்கருவியின் பெருமையை உணர்ந்து கொண்ட ஞானசுந்தரம் அதனை வாசிக்கத் தொடங்கிய கணத்திலிருந்தே அதில் முழுக் கவனத்தையும் முழுத்திறனையும் மனவொருமையையும் மிகுந்த மரியாதையையும் செலுத்தினார். நாகசுரத்தை வாசிக்கத் தொடங்கிய சில வருடங்களிற்குள்ளேயே சிறந்த கச்சேரிகள் நடத்தக் கூடிய நாகசுர விற்பன்னரானார். இவரின் நாகசுரக் கச்சேரிகளை கேட்பதற்கு ஆயிரக்கணக்கில் மக்கள் கூடினார்கள்.

ஞானசுந்தரம் அவர்கள் இன்று 81 வயதைக் கடந்தும் இன்றும் நல்ல சுகதேகியாக, கலைஞனாக, சமூகத்தொண்டனாக சுறுசுறுப்புடன் இயங்கிக் கொண்டிருப்பவர். பிரபல நாதசுரக் கலைஞர் எஸ்.ஆர். ஞானசுந்தரம் என்றால் மிகையாகாது.

அவரது வயதுக்கும் செயற்பாடுகளுக்கும் தொடர்பே கிடையாது. அந்தளவுக்குஅவரது சுறுசுறுப்பான பேச்சும் நடவடிக்கைகளும் இப்போதும் துடிப்பாகவே அமைந்திருக்கின்றன. எஸ்.ஆர். ஞானசுந்தரம் ஒரு மூத்த நாகசுரக் கலைஞர் அதுமட்டுமன்றி இன்று நம்மத்தியில் வாழும் மூத்த பத்திரிகையாளரும் கூட. இவர் வயது முதிர்ந்த நிலையிலும் நாகசுரக் கலையை வளர்க்கவேண்டும் என்ற ஒரே சிந்தனையுடன் வாழும் கலை விரும்பியும் ஆவார்.

நாகசுரக் கலை தெய்வீகமானது. தெய்வத்தை மகிழ்விக்கக்கூடியது. அத்துடன் நியம நிஷ்டைகளுடன் செய்யவேண்டிய கலைகளில் ஒன்று. எந்தவொரு நாகசுரக் கலைஞன் நியம நிஷ்டைகளுடன் கலையைப் பின்பற்றுகின்றானோ அவனே சீரும் சிறப்புமிக்க வாழ்வைப் பெற்றுக் கொள்கின்றான். இவ்வாறு தனது நீண்டகால கலை அனுபவத்தை அடக்கத்தை வெளிப்படுத்தியிருக்கின்றார் மூத்த நாகசுரக் கலைஞர் மாவையூர் எஸ்.ஆர். ஞானசுந்தரம்.

மாதகல் நுணசை முருகமூர்த்தி ஆலயம், குப்பிளான் கற்கரை கற்பக விநாயகர் ஆலயம் ஆகியவற்றில் ஆதீன வித்துவானாகவும் விளங்கினார்.

வடலியடைப்பு நாகசுர வித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை, யாழ்ப்பாணம் நாகசுர வித்துவான் அம்புலிங்கம்பிள்ளை ஆகியோர் கலாபூஷணம் ஞானசுந்தரத்துடன் இணைந்து நாதமழை பொழிந்த மூத்த கலைஞர்களில் சிலராவர்.

நாகசுரக் கலையை விரும்பிக் கற்போரின் எண்ணிக்கை குறைந்து வருகிறது. எதிர்காலத்தில் நாகசுரக் கலைஞர்களைக் காண்பது மிகவும் அரிதாகவே இருக்கும் என்ற ஐயப்பாடும் உருவாகி வருவதை மறக்கமுடியாது.

நாகசுரக் கலையைக் கற்பதை விரும்பாத பெற்றோர்கள் பலர் தமது பிள்ளைகளை உயர் கல்வியைத் தொடர்வதிலும் உத்தியோகங்களைப் பெற்றுக் கொள்வதிலும் அதிக கவனம் செலுத்துமாறு வழிப்படுத்துகின்றனர்.

"இதற்குக் காரணமும் இல்லாமலில்லை. நாகசுரக் கலைஞர்களுக்கு வழங்கப்படும் ஊதியம் போதாது. அத்துடன் ஒவ்வோர் வருடமும் பங்குனி முதல் ஆவணி வரையிலான ஆறு மாதகாலமே ஆலயங்களில் உற்சவங்கள், திருமண வைபவங்கள் அதிகளவில் இடம் பெறுகின்றன. இதனால் ஏனைய மாதங்கள் தொழிலின்றி இருக்கும் நிலையும் உள்ளது. எனவே இத்தகைய நிலையை வளரும் சந்ததியினர் பெரிதும் விரும்பவில்லைப் போலும்" என்று நாகசுரக் கலை பற்றிய இன்றைய உலகக் கண்ணோட்டத்தை விவரித்தார் ஞானசுந்தரம்.

நாகசுரக் கலையை வளர்க்க இளம் தலைமுறையினர் முன்வர வேண்டுமெனக் குறிப்பிடும் அவர் இந்துசமயம் சார்ந்த அமைச்சர்கள், திணைக்களங்கள், இளம் கலைஞர்களை ஊக்குவிக்கும் வகையில் பல்வேறு திட்டங்களை முன்னெடுக்க வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

இலங்கை இசைவேளாளர் சங்கத்தில் சுமார் 40 வருட காலமாகத் தலைவராகவும், செயலாளராகவும் பதவிவகித்த கலாபூஷணம் ஞானசுந்தரம், அந்தச் சங்கத்தின் மூலமாகப் பல்வேறு ஆக்கபூர்வமான செயற்றிட்டங்களை முன்னெடுத்தும் உள்ளார்.

மாவிட்டபுரத்தில் நிறுவப்பட்ட நாகசுரப் பயிற்சிப் பாடசாலை, தெல்லிப்பழையில் நிறுவப்பட்ட பாடசாலை, இணுவிலில் நிறுவப்பட்ட பயிற்சிப் பாடசாலை என்பன நாகசுர இசைமணி எஸ்.ஆர். ஞானசுந்தரத்தின் பெருமுயற்சிகளால் தோற்றம் பெற்றவை.

மேற்படி மூன்று பாடசாலைகளும் இன்று செயலிழந்த நிலையில் இருப்பதை வேதனையுடன் சுட்டிக் காட்டினார். மேலே கூறப்பட்ட மூன்று பாடசாலைகளும் பல்வேறு மாணவர்களைப் பயிற்றுவித்து, நாகசுரக் கலையின் வளர்ச்சிக்குப் பங்காற்றியதை நினைவுகூர்ந்த ஞானசுந்தரம், கலைஞர்களின் மத்தியில் காணப்படும் 'வித்துவக் காய்ச்சல்' அகற்றப்பட வேண்டியது என்றும் மனந்திறந்து தெரிவித்தார்.

கலாபூஷணம் ஞானசுந்தரம் சிறந்த நாகசுரக் கலைஞர் மட்டுமல்ல, சிறந்த சமூக சேவையாளரும் கூட. மாவிட்டபுரத்தில் இயங்கிய கிராம அபிவிருத்திச் சங்கங்கள், சனசமூக நிலையங்கள் ஊடாக இவர் பல்வேறு சேவைகளை ஆற்றியுள்ளார். இவரது சமூக சேவையைப் புகழ்ந்து யாழ் முன்னாள் அரசாங்க அதிபர் லால் விஜயபாலா அவர்கள் கலாபூஷணம் ஞானசுந்தரத்துக்கு 'சமூகத் தொண்டன்' என்ற பட்டத்தை வழங்கினார்.

'இலங்கையின் அபிவிருத்திக்குக் கிராம முன்னேற்றச் சங்கங்கள் ஆற்றும் பணி' திரு. எஸ்.ஆர். ஞானசுந்தரம் அவர்கள் இலங்கை மன்றக் கல்லூரியினால் கொழும்பில் 1975 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 27, 28, 29, 30, 31 நவம்பர் 1 ஆகிய திகதிகளில் நடத்தப்பட்ட கருத்தரங்களில் மாவை கிராம முன்னேற்றச் சங்கம் சார்பில் பங்கு பற்றினார்.

"பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் தெல்லிப்பழை திரு.எஸ்.ஆர். ஞானசுந்தரம் அவர்கள் இலங்கை மன்றக் கல்லூரியினால் கொழும்பில் 27.11.1979 ஆந் திகதியிலிருந்து 30.11.1979 ஆந் திகதிவரை நடத்தப்பட்ட 'கிராம தேசிய அபிவிருத்திப் போக்கில்' கூட்டுறவுக் கருத்தரங்கில் பங்குபற்றினார்.

தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக்கிளை 10 இல் உபதலைவராகவும் இலங்கை இசைவேளாளர் சங்கம், கம்பன் கலைக்கழகம் ஆகியவற்றில் கௌரவ செயலாளராகவும், பனை கூத்தியவத்தை கி.அ. சங்கம், கயரோக தடுப்பு சங்க வலி. வடக்கு தெற்கு கிளை பாவனையாளர் சங்கம், வலி. வடக்கு என்பவற்றில் கௌரவ பொருளாளராக வும், வீமன்காமம் மகா வித்தியாலய அபிவிருத்திச் சங்கம், தமிழர் விடுதலைக் கூட்டணி, பழை வீமன்காமம் கிளை, மாவை முருகன் தேவஸ்தான திருச்சபையில் செயற்குழு உறுப்பினராக வும் கடமையாற்றினார்.

நாகசுரக் கலைஞரான ஞானசுந்தரம் 'தினபதி', 'ஈழநாடு', 'வீரகேசரி', 'உதயன்' ஆகிய பத்திரிகைகளுக்கான பிரதேசச் செய்தியாளராகவும் கடமையாற்றியுள்ளார்.

# சமயப் பெரியார்களின் நோக்கு

# முத்திரை பதித்த முருக பக்தன்

முருகனே செந்தில் முதல்வனே
மாயோன் மருகனே ஈசன் மகனே
ஒரு கை முகன் தம்பியே நின்னுடைய தண்டைக்கால்
எப்பொழுதும் நம்பியே கைதொழுவேன் நான்.

மாவைமுருகன் மீது அளவற்ற பக்தியும், ஒப்பற்ற நம்பிக்கையம் கொண்டு வாழ்ந்த அமரர் எஸ்.ஆர். ஞானசுந்தரம் அவர்களின் மறைவு குறித்து மாவை ஆதீனம் ஆழ்ந்த கவலை கொண்டுள்ளது.

அன்னாரின் நற்பண்புகளும், விடாமுயற்சியும் முன்வைத்த காலை பின்வைக்காத தன்னம்பிக்கையும் பெது நலநோக்கும் வியந்து போற்றுதற்குரியன. மாவைமுருகன் திருப்பணிச் சபையிலும் அவர் செயற்குழு உறுப்பினராக இருந்து ஆற்றிய பணிகள் எமது கண்முன்னே நிற்கின்றன.

பல்வேறு துறைகளிலும் பணிபுரிந்து அவற்றிலெல்லாம் முத்திரை பதித்த அன்னாரின் ஆத்மா மாவைமுருகனின் பாதார விந்தங்களைப் பற்றி மேலான பெருவாழ்வு பெற பிரார்த்திக்கின்றேன்.

S. இரத்தினசபாபதி சிவாச்சாரியார்
மாவையாதீனம்,
மாவிட்டபுரம்,
தெல்லிப்பழை.

# இறுதி மூச்சுவரை சமூகப் பணியாற்றியவர்

மூத்த பத்திரிகையாளர் அமரர் எஸ். ஆர். ஞானசுந்தரம் அவர்களின் மறைவு கலையுலகுக்கும் பத்திரிகை உலகுக்கும் ஈடுசெய்யமுடியாத பேரிழப்பாகும். அன்னார் ஒரு நாதஸ்வரக் கலைஞர் என்ற ரீதியில் அவருக்கும் எனக்கும் நீண்டகால நெருங்கிய பழக்கம் உண்டு. அவர் இளமைக்காலம் முதலாக எமது முதலாவது குருமஹா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞான சம்பந்த பரமாசார்ய சுவாமிகளிடம் மிகுந்த பக்தியும் ஈடுபாடும் கொண்டவர். அதன் காரணமாக அவர் அடிக்கடி ஆதீனத்துக்கு வருவதுண்டு. அவ்வேளைகளில் எனக்கும் பரிச்சயமாகிவிட்ட அமரர் அவர்கள் ஒரு சிறந்த பத்திரிகையாளரும் கூட.

தொண்ணூறு வயதிலும் தொண்டு செய்த இவர் ஊடகவியலில் தம்மை இணைத்துக் கொண்டு பத்திரிகைச் செய்தியாளராகக் கடமையாற்றி முழுமையாக அர்ப்பணித்த ஒருவராக விளங்கியமை சிறப்புக்குரியதே. அத்துடன் இசைவேளாளர் சங்கத் தலைவராகவும் பணி செய்த இவர் கலாபூஷணம், சமூகத் தொண்டன், ஸ்வரஞான கலாபமணி, கலைஞான கேசரி முதலிய விருதுகளையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இறுதி மூச்சுவரை சமூகத்துக்கு அரும் பணியாற்றி கடமையே கண்ணாகக் கருமமாற்றிய இவரது தொண்டுள்ளம் அளவிடற்கரியது. எப்போதும் சிரித்த முகத்துடன் வளைய வரும் இவர் பல நிறுவனங்களிலும் பல சபைகளிலும் செயலாளராகப் பதவி வகித்ததுமல்லாமல் அதன் வளர்ச்சிக்கும் உறுதுணை புரிந்துள்ளார். இவரையிழந்து தவிக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் தூய ஆத்மா நல்லைக் கந்தன் பாத கமலத்தில அமைதியுற்றுச் சாந்திபெறப் பிரார்த்திக்கின்றோம்.

கலியுகவரதன் மாவைக் கந்தனின் திருவருட்டிறத்தால் இவரது குடும்பத்தினர் அமைதிபெற்று வாழ உளமாரப் பிரார்த்தித்து அஞ்சலி செலுத்துகின்றோம்.

'என்றும் வேண்டும் இன்ப அன்பு'

ஆதீன குருமுதல்வர்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்
நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்,
இரண்டாவது குருமஹா சந்நிதானம்,
யாழ்ப்பாணம்.

## இன்முகத்துடன் வரவேற்கும் பண்பாளர்

புகழ்பூத்த நாதஸ்வர வித்துவானும், பழம்பெரும் பத்திரிகையாளருமாகிய ஸ்ரீமான் ஞானசுந்தரம் அவர்களின் பிரிவு குறித்து மிகுந்த வேதனையடைகிறேன். பாரம்பரியமான கலைக் குடும்பத்தில் பிறந்து கலையின்பமே நிலையின்பமாகக் கொண்டு தன் வாழ்வை அர்ப்பணித்த பெருங்கலைஞன்.

இளைய தலைமுறைக்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்கிய ஆசான். காதில் தோடும் விபூதிக் குறியும் பட்டு நாஷனல் உடுப்பும் சிரித்த முகமும் இப் பாரம்பரிய கலைஞனின் உன்னத அடையாளங்கள். எவரையும் இன்முகத்துடன் வரவேற்கும் பண்பு தனித்துவமானது.

**'உள்ளத்தால் பொய்யா தொழுகின் உலகத்தார்**
**உள்ளத்து ளெல்லாம் உளன்'**

என்ற வள்ளுவப் பெருந்தகையின் வார்த்தைக்கு அமைய மனத்தில் பொய் இல்லாமல் நேர்மையோடு வாழ்ந்த இப் பெரியாரை சகலரும் உயர்ந்த இடத்தில் வைத்து மதித்ததை சமூகம் நன்கு அறியும். அன்னை சிவத்தமிழ்ச்செல்வி அவர்கள் இக்கலைஞரது பண்பாட்டை எந்நாளும் பெருமையாகச் சொல்வார்கள். அவரது நினைவாக சிவத்தமிழ் விருது அமரர் ஞானசுந்தரம் அவர்களுக்கு வழங்கிக் கௌரவித்தோம்.

அன்னார் உயிருடன் இருக்கும்போது உயர்விருது கொடுத்துக் கௌரவித்த பெருமை துர்க்கா தேவி தேவஸ்தானத்துக்குக் கிடைத்தது. சமூக சேவையாளனாகப் பத்திரிகையாள னாகப் பெருங் கலைஞனாக இப்புவியில் வாழ்ந்த இப் பெருந்தகை இறை நிழல் நிறைவாக ஆறுதல் பெறப் பிரார்த்தித்து அமைகின்றேன்.

யாவர்க்குமாம் இன்னுரை தானே

ஆறு திருமுருகன்
**தலைவர்,**
**ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம்,**
**தெல்லிப்பழை.**

# பெரும் துயரடைந்தோம்

மாவிட்டபுரத்தை வசிப்பிடமாகக் கொண்ட நாதஸ்வர வித்துவான் இராமநாதன் ஞானசுந்தரத்தின் மறைவுச் செய்திகேட்டு பெரும் துயர் அடைந்தோம்.

"எமது தேவஸ்தானத்தோடும்" யாழ் மாவட்ட பிரசித்திபெற்ற தேவஸ்தானத்தில் எல்லாம் நடக்கின்ற நித்திய, நைமித்ய விழாக்களில் தனது மக்களோடு குழுவாக வந்து நாதகானம் இசைத்து, அம்பிகையின் திருவருளையும், அடியார்களின் நன்மதிப்பையும் பெற்ற கலைஞராகத் திகழ்ந்தார்.

அமரர் அவர்கள் சமயப்பணி, சமூகப்பணி, பத்திரிகைப் பணியில் எல்லாம் தன்னை ஈடுபடுத்தி ஊர்மக்களின் இன்னல்களைக் களைந்து ; நல்ல சமூகப் பணியில் ஈடுபடுத்திய பெரியோர்களின் நல்வாழ்த்துக்களைப் பெற்ற பெரியார் ஆவார்.

அன்னாரின் இழப்பால் துயருறும் குடும்பத்தார், உற்றார், உறவினர் அனைவருக்கும் ஆறுதல் கூறி, ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

சிவஸ்ரீ வா. அகிலேஸ்வரக் குருக்கள்
பிரதம சிவாச்சாரியார்
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.

பிடித்தாலும் பிடிக்காவிட்டாலும் புன்னகை உதிர்க்கத் தவறாதீர்கள்.

## காணக் கிடைக்காத கலைஞர்

அமரர் ஞானசுந்தரத்தை சிறுவயதிலிருந்து அறிந்தவன் என்ற வகையில் அவரது பண்புகள் அவர் ஆற்றிய பணிகள் அளப்பரியன. எமது ஆலயத்தில் மட்டுமன்றி தலைசிட்டி ஞான வைரவர் ஆலயம் மற்றும் இங்குள்ள ஆலயங்களில் இசைச்சேவை செய்தது மட்டுமல்ல ஆலய அபிவிருத்தி, முன்னேற்றம் ஆகியவற்றிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டு உழைத்தவர். கலைஞர்களில் இவரைப் போன்றவர்களைக் காண்பது அரிது. எல்லோரிடமும் இன்முகத்துடன் இனிதாகப் பேசி எல்லோரது மனதிலும் இடம்பிடித்த ஓர் மாமனிதரை இழந்துவிட்டோம். அவரது ஆத்மா மாவை முருகன் வீணியவரை அம்பாள் பாதார விந்தங்களில் சரணடைய பிரார்த்திக்கின்றேன்.

**வீணியவரை,**
*மாவிட்டபுரம், தெல்லிப்பழை.*

**இங்ஙனம்**
*பிரம்மஸ்ரீ அ. துரைச்சாமி ஐயர்*

## இசைவாணர்! இனிய பண்பாளர்!!

*இசையாண்டு இவ்வுலகில் இயன்ற பலசேவை*
*இசைவாக எவர்க்கும் இயற்றும் - இசைவாணர்*
*இனியபண் பாளர் எஸ்.ஆர். ஞானசுந்தர (ம்) வதனம்*
*இனி என்று காணும்இப் பார்!*

*கலாஞானி க. சிவலிங்கம்*

தகுதி இருந்தாலும் இல்லாவிட்டாலும் பாராட்டுதலைத் தவிர்க்காதீர்கள்.

# அமரர் ஞானசுந்தரம் ஞானப்பழம் ஆவார்

ஞானம் என்னும் சொற்பொருள் பலவகை ஞானங்களைத் தன்னுள் அடக்கும். கலைஞானம், இசை ஞானம், மெய்ஞ்ஞானம், விஞ்ஞானம், அஞ்ஞானம் என்பன அவற்றுள் சில. அந்த ஞானங்களுக்குள் எல்லாம் மெய்ஞ்ஞானமே முதன்மையானதும் தலைசிறந்ததுமாகும். பெற்றோர்கள் அறியாக் காலத்தே பிள்ளைக்கு ஞானசுந்தரம் என்று நாமமிட்டதும் ஈண்டு சிந்தனைக்குரியது.

மெய்ஞ்ஞானத்தை இறைஞானம் என்பர். வள்ளுவனாரும்
**'எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்**
**மெய்ப்பொருள் காண்ப தறிவு'** என்றார் என்க (423)

அறிவே மெய்ப்பொருள் என்பதை உறுதிப்படுத்தும் திருக்குறள் பொருள் இது:

**'அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவிலார்**
**என்னுடைய ரேனும் இலர்.'**

அறிவு - ஞானம். மெய்ப்பொருள் உணர்த்தலாகும். மெய்ப்பொருள் கடவுள். கடவுளை அல்லாதவை எல்லாம் பொய்ப்பொருள்.

மணிவாசகர் பெருந்தகையாரும், 'யானே பொய், என் நெஞ்சும் பொய், என் அன்பும் பொய், என்று விளக்கியருளினார்.

பெற்றோரும் பிள்ளைக்கு இட்ட பெயருக்குப் பொருந்த ஞானசுந்தரமும் பொய்யிற் கிடந்து புரளாது. இளமையிலேயே மெய்யை உணர்வதில் நாட்டங் கொண்டவராக விளங்கினார்.

மெய்யறிவில் நாட்ட முடையவர்களுக்கு மிக இன்றியமையாத நற்குணங்களாக வேண்டப்படுவன தன்னிடத்தில் அன்புடையனாதல், பிதா மாதாக்களைப் பேணுதல், பெரியோரைக் கனம் பண்ணுதல், நன்னடத்தை, நற்சிந்தனை, நற்செய்கையில் ஈடுபடல் போன்றவையாகும்.

அமரர் ஞானசுந்தரமும் அக்கொள்கையுடையவராதலினால் சற்சங்கம் எங்கு உண்டு என்று நாடி அங்கு செல்வார்.

அந்நாளில் ஏழாலை மேற்கில் சற்சங்கம் ஒன்று இயங்கி வந்தமையைச் சைவ சமயத்தில் அக்கறை காட்டிய அனைவரும் அறிவார்கள்.

சடைவரதர் சுவாமிகளைத் தலைவ்ராகக் கொண்டு, சற்சங்கம் செயற்பட்டு வந்தமை உலகப் பிரசித்தம். காலத்துக்குக் காலம் சாதுக்கள் சங்கத்தைக் கண்ணே போலக் காத்துவந்தவர்கள் ஏழாலையைச் சேர்ந்த சைவப் பெரியார்கள் ஐயம்பிள்ளை பொன்னையா, ஐ. பேரம்பலம், மு. ஞானப்பிரகாசம், மு. கந்தையா போன்ற சித்தாந்த வித்தகர்கள்.

நாலூரிலுமிருந்த நல்லுயிர்கள் கலந்து ஒன்றுகூடுமிடமாக ஏழாலை மேற்கில் சைவ மடாலயம் மதிப்பைப் பெற்றது. அக்கூட்டத்தில் அமரர் ஞானசுந்தரம், மாவிட்டபுரம் இராசா போன்ற இனிய சுபாவம் உள்ளவர்கள் தங்களையும் சேர்த்துக் கொண்டார்கள். மடாலயத்தில் கொண்டாடப்படும் அபிடேகம் திருவிழாக்களில் கான இசை வெள்ளமாகப் பொழிந்து பக்தி வெள்ளத்தில் பக்தர்களைப் பரவசத்தில் ஆழ்த்திய பெருமைக்குரியவராக இறுதி மூச்சுள்ளவரை சேவகம் செய்தவர் அமரர் எஸ்.ஆர். ஞானசுந்தரம் என்றால் அது மிகையாகாது. மடாலயம் உள்ளவரை ஞானசுந்தரத்தின் சேவை நிலைத்து நிற்கும்.

காந்தம் இரும்பினை ஈர்க்குமாப் போல் பக்தி உள்ளங்களால் ஈர்க்கப்படுவதற்கான பக்குவான்மாவான பக்குவத்தில் பரிமளித்தவர் ஞானசுந்தரம்.

**'இரும்பு தரு மனத்தேனை ஈர்த்து ஈர்த்து என்புருக்கிக் கரும்பு தரு சுவை எனக்குக் காட்டினை'** என்றார் மணிவாசகனார். ஏழாலை மேற்கில் உருவான சாதுக்கள் மடமும் அப்பணியையே மேற்கொண்டதன்றோ!

அமரர் எஸ்.ஆர் ஞானசுந்தரம் பழகப் பண்புள்ளவர். இனிய மலர்ந்த ஆரையும், வசீகரிக்கும் முகம், புன்முறுவல் பண்புள்ளம், இசைஞானம் மிக்கவர். காய் களைந்து கனியாக உரையாடுவார். ஆவர் பிறப்பிடம் மாவிட்டபுரம். வசிப்பிடம் இணுவில்.

அமரர்கள் இராமநாதன் நாகம்மா தம்பதியருக்குத் தனயன்.

அமரர் நாகேஸ்வரிக்கு அன்புக் கணவர்.

குகநாதன், கலாதேவி, சுதாதேவி, இராமநாதன், ஜெயாதேவி, ஜெகநாதன், சீதாதேவி என்போருக்குத் தந்தையாவார்.

பூட்டப்பிள்ளைகளைக் கண்டவர். தொண்ணூறாண்டு இப்புவியில் பலரும் மதிக்கப் பக்திநெறியில் வாழ்ந்தவர். தன்னால் ஆன தொண்டுகளைத் தக்கோர் மதிக்கத் தரணியில் வாழ்வாங்கு வாழ்ந்தவர்.

அன்னார் ஆற்றிய பணிகள் அளவிடற்கரியன. அவற்றுள் ஒரு சிலவற்றைப் பொறுக்கி எடுத்துப் புகழ்வேன்.

1954 ஆம் ஆண்டிலிருந்து இறுதிவரை இசை வேளாளர் சங்கத்தின் தலைவராகப் பணி ஆற்றினார்.

கலாபூஷணன், சமாதான நீதிவான், சிவத்தமிழ் விருதாளன், 25 ஆண்டு கூட்டுறவாளன். ஸ்வரஞான கலாபமணி, கலைஞான கேசரி, சமூகத்தொண்டன். நாகசுரவித்துவான், மூத்த ஊடகவியலாளன்.

90 ஆண்டு இந்த மண்ணில் நல்ல வண்ணம் வாழ்ந்தார். 04.02.2011 இல் மண்ணுலக வாழ்வை விடுத்து, விண்ணுலக வாழ்வை மேற்கொண்டார்.

பிரிவுத்துயர் யாரைத் தான் விடும்?

1008 அண்டங்களை 108 யுகம் ஆண்ட சூரபத்மன் மைந்தன் அக்கினிமுகாசுரன் மடிந்தமை கேட்டுப் புலம்புகின்றான்.

**'மூப்படையாத இளமைந்தர முடிந்தனையே! இடைவிடாது மைந்தரைப் பெறுவதற்காக மேலான தவத்தைச் செய்து வருபவர்களும் இன்னும் உள்ளார்களோ...!**

என்று அண்டத்தரசன் அங்கலாய்க்கின்றான்.

ஒல்லையூர்க் கிழான் மகன் பெருஞ்சாத்தனுடைய பெரும் பிரிவுத் துயர் ஆற்றாது குடவாயிற் கீரத்தனார் என்ற சான்றோர் முல்லைச் செடியை முன்வைத்து அல்லவா தம் துயர் தணிக்கத் தலைப்படுகின்றார்.

**'ஒல்லையூர் நாட்டிலுள்ள எல்லவரும் வலிய வேலுடைய சாத்தன் மாய்ந்த பின்பு அணியமாட்டார்கள். அதை அறியாமல் ஒல்லையூர் நாட்டில் முல்லையும் பூத்தாயோ...!**

**'......................ஆடவர்க் கடந்த**
**வல்வேற் சாத்தன் மாய்ந்த பின்றை**
**முல்லையும் பூத்தியோ வொல்லையூர் நாட்டே'** (புறம் - 242)

அதேபோல எஸ்.ஆர். ஞானசுந்தரம் அவர்கள் சிவபதம் எய்திய பின்பும், சகல சமூக சேவையில் வல்லவனாக வருவாரும் உளரோ என்றல்லவா கேட்கத் தோன்றுகின்றது.

ஆல்போல் தழைத்து, அறுகு போல் வேரூன்றி, விழுதுகள் போல் குடும்பப் பாரத்தைத் தாங்கவல்ல பூட்டன், பூட்டிகள் வரையாகப் பெறாமல் பெற்றெடுத்த அமரர் எஸ். ஆர். ஞான சுந்தரம் அவர்கள் பிரிவால் துயருறும் குடும்பத்தவர்கள், உற்றார், உறவினர்கள், மற்றாரும் நண்பர்கள் அனைவருடைய துயரங்களை நாமும் பகிர்ந்து கொள்வோம்.

வையத்துள் வாழ்வா அங்கு வாழ்ந்த அன்னாருடைய அன்பும் பண்புமாக நன்னெறி மானுடவர்க்குப் பொன்னே போல் வழிகாட்டுவதாக.

அன்னாருடைய ஆன்மா அமைதி அடைய பெருங்கருணைப் பேராளனுடைய திருவருளைச் சிந்தனை செய்து, வந்தனை செய்வோமாக.

**நமச்சிவாய வாஅழ்க நாதன்தாள் வாழ்க**
**இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க.**

வைத்திய கலாநிதி ஐ.பே. பத்மநாதன்
அறங்காவலர்
நாயன்மார் மடாலயம்,
ஏழாலை.

## தன்னடக்கச் சமூகத்தொண்டன்

'**தோ**ன்றிற் புகழுடன் தோன்றுக' என்பதற்கிணங்க புனிதப் பிறவியாகிய மனிதப் பிறவி எடுத்த புண்ணிய சீலரான அமரர் எஸ்.ஆர். ஞானசுந்தரம் அவர்களின் மறைவு எனக்கு மிகுந்த மனவேதனையைத் தருகின்றது.

எங்கு என்னைக் கண்டாலும் "தம்பி ! சுகமாக இருக்கின்றீரா? வில்லுப்பாட்டு நிகழ்ச்சி வருவதுண்டா? பிள்ளைகள் என்ன செய்கின்றார்கள்?" என்று அன்புடனே குசலம் விசாரிப்பார். அன்னார் காலமாகி விட்டார் என்ற செய்தி கேட்டதும் ஒரு கணம் ஸ்தம்பித்து நின்று விட்டேன்.

அவர் ஒரு பத்திரிகையாளராக இருந்தாலும் நாதஸ்வர வித்வானாகவும் பணி செய் தமை பாராட்டுக்குரியது. தன்னை அவ்வளவாக வெளிக்காட்டிக் கொள்ளாத தனித்துவமான இவர் ஒரு தன்னடக்க சமூகத் தொண்டன் எனில் மிகையாகாது. அன்னாரின் சாந்தமான பேச்சும் அமைதியான புன்னகை பூத்த முகமும் நெஞ்சைவிட்டு ஒருபோதும் அகலாது. அவருடைய காந்தக் கண்கள் அவர் ஒரு தனிப்பெரும் கலைஞர் என்பதைப் பறைசாற்றி நிற்கும்.

இவரை இழந்து தவிக்கும் சங்கீதக் கலையுலகும் பத்திரிகையுலகும் கண்ணீர் வடிக் கின்றது. சிறியேன் நீரிழிவு கிளினிக் செல்லும்போதெல்லாம் ஆஸ்பத்திரியில் இவரைச் சந்திப் பதுண்டு. கண்டவுடன் ஓடிவந்து கதைக்கின்ற ஓர் அன்புள்ளம் மறைந்து விட்டது. நாம் கொடுத்து வைத்தது அவ்வளவுதான். அன்னாரின் இழப்பு என்னாலேயே தாங்கமுடியவில்லை யெனில் குடும்ப உறுப்பினர்களின் நிலை சொல்லத் தேவையில்லை.

இவரது உடம்புதான் மறைந்ததே தவிர உருவம் மறையவில்லை. எமது அகக் கண்களிலே அன்னாரின் உருவம் படம் பிடித்தாற் போன்று பதிந்தேயிருக்கின்றது.

அமரரை இழந்து தவித்துத் துன்ப சாகரத்திலே மூழ்கியிருக்கும் குடும்பத்தினருக்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், அவரின் ஆத்மாவைக் கந்தனின் பொற்கமல பாதங்களில் அமைதியுற்றுச் சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றேன்.

**சிந்தனையில் எந்நாளும் சிறப்பான எண்ணங்களுடன்**
**சீர்திருத்தப் பணியாற்றும் ஒரு சிந்தனைப் பெட்டகமே!**
**உந்தனை நினைத்தவுடன் உள்ளமே தடுமாறுதையா!**
**ஊர் போற்றும் உத்தமராய் வாழ்ந்து மறைந்துவிட்டீரே!**
**கந்தனைக் கரங்குவித்தே காலமெல்லாம் வாழ்ந்திருந்தீர்**
**காலத்தின் கோலமே உம்மைப் பிரித்து விட்டதுவோ!**
**வந்தனை செய்தே மாவைக் கந்தனை வேண்டுகிறேன்**
**பாதாரவிந்தமதில் பெற்றிடுவீர் சாந்தியையே!**

*ஓம் சாந்தி!*

**நாச்சிமார் கோயிலடி,**
**யாழ்ப்பாணம்.**

**வில்லிசைக் கலைஞர், ஆன்மீக எழுத்தாளர்,**
*சிவநெறிக் கலாநிதி இராசையா ஸ்ரீதரன்.*

## குப்பிளான் கற்கரை விநாயகருக்கு 73 வருட சேவை செய்த பெருமகன்

எங்கள் திருக்கோயிலின் வரலாற்று ஒலிப்பேழை ஒன்று தவறிவிட்டது. மூன்று தலைமுறை காலவரலாற்றை வாயினிக்க இனிக்க சிரிப்போடு - இரசித்து இரசித்துக்கூறி மகிழ்ந்து மகிழ்வித்தவர் அமரர் S.R. ஞானசுந்தரம் ஐயா ஆவார். எங்கள் தேவஸ்தானத்தில் இசைப் பணியாற்றிய தன் தாய்வழிப் பேரன், தாய்மாமன் ஆகியோருடன் தன் பதின்மூன்றாவது வயதில் நாதஸ்வரம் தூக்கியதாகக் கூறிப் பெருமைப்படுவார். 2006 ஆம் ஆண்டு மார்கழித் திருவெம்பாவை வரை தொடர்ந்து 73 வருஷகாலம் இடையறாது பணிபுரிந்து வந்துள்ளார். இப்போது நாலாவது தலைமுறையாக இவர் மகன் திரு. ஞா. இராமநாதன் அவர்கள் பணியைத் தொடருகின்றார்.

இன்று எமது கலைஞர்களும், குருமாரும் ஓரிடத்தில் ஒருவருஷம் நிலைப்பதே பெரும் பாடாயிருக்க ஞானசுந்தரம் ஐயா 73 வருஷப் பணி மட்டிலன்றி நாலாந்தலைமுறையிலும் தொடரவிட்டிருப்பதில் உள்ள இரகசியத்தை யாமனைவரும் அறிவதில் நலமுண்மை கூறாமேயமையும் அவ்விரகசியமும் பலரறிந்துள்ளதே! அவரது ஒழுக்க விஷேடமே காரணம். நாதஸ்வர, தவில் கலைஞர்களுள் சிலர் கோயிலுக்கு வரும் கோலத்துக்கே ஐம்பது புள்ளி போடப்படுவதுண்டு ; மீதிதான் வாசிப்புக்குரியது. அதிலும் சம்பிரதாய சுத்தம் மிகமுக்கிய மானது. இராஜ வாத்தியமாகிய நாதஸ்வரத்தை வாத்தியாராகவிருந்து போதித்துப் பேர்பெற்ற மாவிட்டபுரம் ராஜாவின் பிரதமசீடர் ஞானசுந்தரம் ஐயா. குருவைப் போன்றே சீடரும் சம்பிரதாய சுத்தமான போதனைக்காரர் ; சாதனைக்காரர்.

எங்கள் தேவஸ்தானத்தின் புராதன அமைப்பு, குருமார்விபரங்கள், திருப்பணிகள், மணியகாரர் செயற்பாடுகள், பரிபாலன சபையின் உதயம், கும்பாபிஷேகங்கள், மகோற்சவங்கள் என்று பலவற்றையும் ஆண்டுவாரியாக எடுத்துக் கூறக்கூடிய ஒருவராக எஞ்சியிருந்தவரும் போய்விட்டார். பத்திரிகையாளராகவும் எழுத்தாளராகவும் விளங்கிய மகிமை ஞாபகக் கூர்மையில் நன்கு புலப்பட்டது. பல்கலைக்கழக மாணவியொருவரின் ஆய்வுக்காக எங்கள் கோயில் வரலாறு சேகரிக்க இவரை நாடியபோது அமரர்கள் திரு. த. ஐயாத்துரை, திருமதி க. சிவம் ரீச்சர் ஆகியோர் கூறிய தகவல்களை இவரும் ஆண்டு பிசகாமல் கூறக்கேட்டுப் பிரமித்தேன்.

மேலங்கியுடன் கோயிலுக்குள் நுழைதல், கோயிலுக்குள்ளே வெற்றிலை பாக்குக் குதப்புதல், கால் கழுவாது கோயிலுக்குள் நுழைதல், கோயிலுக்குள்ளோ புறத்திலோ சேட்டை சரசங்கள் புரிதல், அநாகரிகமாகச் சிரித்துப் பேசிச் சத்தமிடுதல் போன்ற குறைபாடுகள் இம்மியளவு மில்லாத ஒரேயொரு கலைஞன் ஞானசுந்தரம் ஐயா தான்!

**மண்ணில் நல்ல வண்ணம் வாழ்ந்தார் ;**
**குடும்பத்தை உயர்த்தினார் ;**
**ஊருக்கு உழைத்தார் ;**
**உறவுகளுக்காக உழைத்தார் ;**
**இனத்துக்காக உழைத்தார் ;**

நிறைபுகழாளியாக எல்லோரும் இன்னும் சில வருஷம் வாழ்ந்திருந்தால் நன்மையாயி ருக்கும் எனப் பேசும்படியாக ஓடிவிட்டார்.

மண்ணுலகில் இசை மழை பொழிந்தவரை விண்ணுலகில் இசை மழை பொழிய ஏழிசையாய் இசைப் பயனாயுள்ள இறைவன் கூப்பிட்டார்போலும்.

சிவசிவ

ஏ. அனுசாந்தன்
செயலாளர்
குப்பிளான் கற்கரைச் கற்பக விநாயகர் ஆலய
பரிபாலன சபை.

**சிதறு தேங்காய் உடைப்பது ஏன்?**

மனிதனுக்குத் தான் என்ற அகம்பாவ உணர்ச்சி இலகுவில் விலகாது தேங்காயின் ஓட்டைப்போல் அது உறுதியாக நிற்கின்றது. ஆனால் அது உடைந்து சிதறிப் போய் விட்டால் உள்ளே இனிய நீரும் வெண்மையான தேங்காயும் கிடைப்பதைப்போல் ஞான உணர்வுகள் நமக்குள் கிடைக்கிறது. சிதறு தேய்காய் ஆண்களே உடைக்க வேண்டும். பெண்கள் உற்பத்திக் குரியவர்களும் அதோடு குடும்பத்தை பராமரிப்பவர்களும் அவர்களே. எனவே 'சிதறிப் போ' என அவர்கள் ஒருவரையும் சபிக்கக் கூடாது. ஆகவே பெண்கள் சிதறு தேங்காய் உடைக்கலாகாது.

# கலை வளர்த்த செயல்வீரன்

கலை வளர்த்த செயல் வீரனாகத் திகழ்ந்த எஸ்.ஆர். ஞானசுந்தரம் அண்மையில் இறைவனடி சேர்ந்தார். அவர் தொட்ட துறைகள் எல்லாம் அவர் தம் பணியால் துலங்கின எனலாம். எனது இளமைப் பருவம் தொட்டு அவரையான் நன்கறிவேன். அவர் ஒரு செயல் வீரன் ஆவார். அதன் காரணமாக அவருக்கு கலாபூஷணம், சமூகத்தொண்டன், சிவத்தமிழ் விருது, சமாதான நீதிவான் ஆகிய உயர்விருதுகள் கிடைத்தன என்றால் மிகை ஒன்றும் இல்லை.

அவர் வளர்த்த கலைத்துறையாகிய இசைத்துறையை எடுத்துக்கொண்டால் நாகசுர வித்துவானாக பன்னெடுங்காலமாகப் பல ஆலயங்கள், சபைகள், விழாக்கள் ஆகியவற்றில் தமது திறமையை வெளிக்காட்டினார். இசை வேளாளர் சங்கத்தை ஆரம்பித்து அதன்மூலம் பலரை உருவாக்கினார். நாகசுர பாடசாலை மூலம் பல சிறந்த மாணவரை உருவாக்கிய பெருமை அவருக்கு உண்டு.

முதுபெரும் செய்தியாளராக திறமையுடன் பணிசெய்தார். நாற்பது வருடங்களாக பத்திரிகைத் துறையில் செய்தியாளராக ஈழநாடு, தினபதி, உதயன், சிந்தாமணி ஆகிய பத்திரிகைகளில் பங்கேற்று நற்பணி புரிந்தமையை நாடறியும். நாம் அறிவோம். நடுவுநிலை தவறாது தமது பணிகளைத் திறமையுடன் செயலாற்றி அனைவரினதும் மதிப்பையும் பெற்றுக் கொண்டார். மதிப்பைக் கொடுத்து மதிப்பைப் பெற்றார்.

சமூகத் தொண்டுகள் பல புரிந்து, சமூக முன்னேற்றத்திற்கு உதவினார். சங்கங்களில் சமூக முன்னேற்றத்திற்கு உதவினார். சங்கங்களில் பல முக்கிய பதவிகளை வகித்து சமூகப் பணிகள் புரிந்தமை மக்கள் மனதில் என்றும் நிலைத்து நிற்கும். சனசமூக நிலையம், கிராம அபிவிருத்திச் சங்கம், கூட்டுறவுச் சங்கம் ஆகியவற்றின் மூலம் சிறந்த தொண்டாற்றியமை யினால் உயர் விருதுகள் பல பெற்றார்.

**'பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும்**

**தத்தம் கருமமே கட்டளைக் கல்'** - தமிழ் மறை என்ற குறட்பாவிற்கு ஏற்றாற் போல் அவர் கருமங்கள் அமைந்தமையினால் அவர் பெருமை பெற்றார். சமயத்துறையிலும் மன்றங்கள் மூலம் பெரும் பணிபுரிந்துள்ளார். நன் மக்களைப் பெற்று, சீரிய முறையில் வளர்ந்து தமக்கும் நாட்டிற்கும் நற்பணிபுரிந்தவர். ஆயிரம் பிறை கண்ட பெரியவராக வாழ்ந்தார். வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து, ஏனையவர்களையும் வாழவைத்த பெரியார் இன்று நம் மத்தியில் இல்லாவிடினும் அவர் புகழ் என்றும் நிலைத்து நிற்கும். அவர் சிவப்பேறு பெற்றிருப்பார் என்பதற்கு யாதும் ஐயம் இல்லை.

ச. விநாயகரத்தினம்
சிவநெறிக் கழகச் செயலர்,
ஓய்வுநிலை சைவசமய ஆசிரிய ஆலோசகர்.

பன்னாலை,
தெல்லிப்பழை.

# பொது அமைப்பினர், ஊரவர் கணிப்பீடு

## உத்தம பண்பாளர்

தங்கள் அன்புத் தந்தையாரும் எமது பேரன்புக்கும் பெருமதிப்புக்குமுரிய பெருந்தகையாளன் ஞானசுந்தரம் ஐயா அவர்கள் இறைபதமடைந்த செய்தியைச் செவியுற்று ஆழ்ந்த மனத்துயரும் அதிர்ச்சியுமடைந்துள்ளோம். அடக்கம், பொறுமை, அன்பு, பண்பு, நல்லறிவு, சேவை மனப்பான்மை, விடாமுயற்சி, பெரியோர்களை மதித்தல், தெய்வபக்தி போன்ற நற்குணவியல்புகள் ஒருங்கே வாய்க்கப்பெற்ற ஒரு உத்தமப் பண்பாளரின் பிரிவு எமது உள்ளத்தை நெகிழ வைத்துள்ளது.

எமது வீரபத்திரர் ஆலயத்தில் மிக நீண்ட காலமாக இசைத் தொண்டாற்றியும், நாம் ஆலயத்தில் எடுக்கும் சிறப்பு விழாக்களில் எம்முடன் ஒத்துழைத்து, அவ்விழாக்களைச் சிறப்பித்தமையும் நாம் என்றும் மறக்கமுடியாத சம்பவங்களாகும்.

அமரர் அவர்களின் ஆத்மா சாந்தியடையவும், அவர் பிரிவால் மனத்துயருற்றிருக்கும் தாங்களும் தங்கள் சகோதரர்களும் மற்றும் குடும்பத்தவர்கள் அனைவரும் மனச் சாந்தியடையவும் எல்லாம்வல்ல அருள்மிகு வீரபத்திரப் பெருமானின் பாதர விந்தங்களைக் கண்ணீர் மல்கப் பணிந்து பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

மயிலணி,
சுன்னாகம்.
இலங்கை.

அன்புக்குரிய
வ. குமாரசாமி ஐயர்

உண்மையானாலும் பொய்யானாலும் முதலில்
நீங்களாக எதையும் வெளியிடாதீர்கள்

# எங்கள் இசைப் பாரம்பரியத்தின் காவலனாய் விளங்கிய ஞானக் கலைஞன் திரு. ஞானசுந்தரம்

நான் கேட்ட முதல் நாதஸ்வரம் ஓய்ந்துபோன செய்தியின் கணம் தாங்கமுடியாதது. நாதோபாசனை, சேவகம் என்ற பதங்களுக்கு அர்த்தம் தந்து, எங்கள் கிராமத்து ஆலயங்களை இசையால் நிறைத்த ஞானக் கலைஞர் ஞானசுந்தரம். எங்கள் இசைப் பாரம்பரியத்தின் காவலனாக இசைவேளாளர் சங்கம் என்ற அமைப்பின் வழி அவர் ஆற்றிய பணிகள் உயர்வானவை.

இசையியலில் மட்டுமன்றி, இயற்றமிழிலும் வல்லவராக அந்நாட்களில் அவர் வெளியிட்ட சிலம்பொலி எனும் சஞ்சிகையும் எங்கள் புலத்துசெய்தித் தாள்களின் நிருபராக அவர் எழுதிய ஆக்கங்களும் தனித்துவமானவை.

சூழமைவின் நெருக்கடிகளிடை ஊரைத் தொலைத்து அலையும் வாழ்விடை உடல் தளர்ந்து போனபோதும் அவரின் உள்ளத்து உறுதியும், பண்பாட்டு உணர்வும் குன்றியதில்லை. அண்மையில் அவர் பேரனின் திருமண வைபவத்தில் இறுதியாகச் சந்தித்தவேளையில் என் அப்பாவின் நினைவுகளை மீட்டும், எங்கள் ஊர் வாழ்வினுக்கு மீளுதல் பற்றிய அழகான ஆதங்கத்தினைப் பகிர்ந்தும் கொண்ட கணங்கள் இன்னமும் பசுமையாய் நெஞ்சிலே....

தன் வாழ்வின் ஒவ்வொரு கணங்களினையும் சுருதி பிசகாத ஸ்வரங்களால் நிறைத்து, அர்த்தமுள்ள வாழ்வு வாழ்ந்து, ஞானக் கலைஞன் ஞானசுந்தரம் அவர்களின் நினைவுகளை என்றென்றும் காத்திடுவோம், அஞ்சலி செய்து போற்றிடுவோம்.

பேராசிரியர் நாகலிங்கம் சண்முகலிங்கன்
துணைவேந்தர்,
யாழ். பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.

## கலைப்பணியும் பொதுப்பணியும் இணைந்த வாழ்வு

மாவிட்டபுரம் என்ற இனிய ஊரை
வாழ்விடமாய்க் கொண்டிருந்த கலைஞர் ஆவார்
பாஇட்டு நல்லோர்கள் போற்றற் கேற்ற
பண்பெல்லாம் தம்மிடத்தே கொண்டோர் ஆவார்

நாதஸ்வரக் கலையால் புகழ்பேர் பெற்றார்
நல்லோர்கள் பாராட்டும் பெருமை பெற்றார்
மேதினியில் ஆண்டவனின் நெறியில் வாழ்ந்தார்
மேலோர்கள் அனைவரதும் அன்பைப் பெற்றார்

ஆலயத்தின் பணி எனிலோ அங்கும் நிற்பார்
அயலவரின் பொதுப் பணியில் தானும் நிற்பார்
காலமெலாம் கலைப் பணியே செய்தபோதும்
கண்ணாகப் பொதுப் பணியைப் பேணிவந்தார்

ஞானமே மேவுகின்ற நல்ல உள்ளம்
சுந்தரமே விளங்குகின்ற பொலிவுத் தோற்றம்
ஞானசுந்தரம் என்ற அழகுநாமம்
நன்கவர்க்குமிகப் பொருத்தம் என்றே தோன்றும்

தமிழ் விழாப் பல நிகழ்த்துணை செய்திட்டார்
தக்கஇசை விழாவினுக்கும் தூணாய் நின்றார்
அமிழ்தனைய குணத்தினுக்கும் அன்பினுக்கும்
அவருக்கு நிகராக அவரே வாழ்ந்தார்

புலவர் ம. பார்வதிநாதசிவம்

## ஞானசுந்தரம் எனும் நற்பெருங் கலைஞர்!

ஞானசுந்தரமெனும் நற்பெரும் கலைஞரே!
சமயப் பணியும் சமூகப் பணியும்
ஆலயப் பணியும் ஆற்றிய தொண்டரே!
மாவை மக்களின் மதிப்புக்குரிய
மாண்புமிக்க கலைவல்லுநரே!
அன்பே புரிந்தும இன்சொல்லே பேசியும்
அனைவர் மனதிலும் தனிஇடம் பெற்ற
பெருமை மிக்க சிறந்த கலைஞரே!
நல்லோர் வாழ்வு எவ்விதம் என்றே
வாழ்ந்து காட்டிய பெரும் பண்பாளரே!
உங்கள் பிரிவு எங்களை எல்லாம்
உள்ளத் துயரில் ஆழ்த்தி உள்ளதே!
நீங்கள் புரிந்த நன்மைகள் எல்லாம்
நாங்கள் என்றும் மறந்திட மாட்டோம்
உங்கள் ஆத்மா சாந்தி அடைய
எல்லாம் வல்ல மாவை முருகனை தொழுவோம்.

சாந்தி! சாந்தி! சாந்தி!

நன்றி

நிரந்தர முகவரி
சி. பாலசுந்தரம் (தேவன்)
வீமன்காமம் தெற்கு,
தெல்லிப்பழை.

தற்காலிக முகவரி
சி. பாலசுந்தரம்
குமாரலிங்கம் வீதி,
இணுவில் கிழக்கு,
இணுவில்.

## கதாசிரியன்

சதத்தினில்த் தசத்தை நீக்கி நவ
சதத்தினை வாழ்வதாக்கிச்
சரித்திரம் படைத்த மாந்தர்தம்
தரத்தினிற் பெருமை யோடுய்த்துச்
சபை பலகண்டு மேன்மைத்தரத்
தகைமைகள் கண்ட பேறே.

மாருதப் புரவீக வல்லி யோர்கால்
மாவை முருகனின் தொண்டு நோக்கில்
மாவைப் பதியி லமர்த்தி வைத்த
மங்கள இசை வேளாளர் தம்
மரபினி லியல் பாயமைந்து
மகத்துவம் பெற்ற பேறே.

காலங்கள் பகைத்த போதும்
கருத்திநிற் தெளிவோடுய்த்துக்
கழகங்கள் பலவுமாக்கிக்
கலைகளை வளர்த்து நின்று
கண்ணியமான மாந்தர் தம்
கருத்தினைக் கவர்ந்த பேறே

பாரதத் தேச மேகிச் சுயகலை பயின்று
பல கலைஞ்ஞரைக் கவர்ந்து ஈங்கு
உற்சவ காலங்களில் மேடையேற்றி
உதவினாய் மக்கள் மகிழ
நாதத்தைச் சுரத்தினோடு சேர்த்து
நமக்கிசை உகிர்த்த பேறே

காதினில் வெள்ளைக் கடுக்கனோடு
கண்டவர் மகிழும் பாங்கில்
கலகலப் பாயுரைகளாடிக் குலவிய
காலம் தன்னைக் கருத்தினிலெடுக்கின்
கவலையைக் கழைவதற்கு எமது
கடவுள்தான் கதாசிரியன் தானே

கு. சிவகடாட்சம்பிள்ளை
**தலைவர், பழை கூத்தியவத்தை கிராம அபிவிருத்திச்சங்கம்**

முடிந்தாலும் முடியாவிட்டாலும் உதவமாட்டேன் என்று சொல்லாதீர்கள்.

## 'சமய, சமூகப் பணிகளில் தன்னை இணைத்தவர்

'சமூகத் தொண்டனாக' மக்களின் அபிமானத்தைப் பெற்ற அமரர் திரு. ஞானசுந்தரத்திற்கு இயற்கையாகவே கிடைக்கப்பெற்ற புன்னகை தவழும் முகம். அவர் காதில் அணிந்திருக்கும் வெண்ணிற தோடும், வெண்ணிற ஆடையும், தாம்பூலம் புசித்த வாயும் அவரின் கபடமற்ற உள்ளத்தை வெளிக்காட்டும்.

'சங்கீதம்' அவருக்குக் கிடைத்த அருங்கொடை. கதைத்துக்கொண்டிருக்கின்ற இடை வெளியிலும் சங்கீத இராகக் குரல் வெளிவரும். இதன் காரணத்தாலே அவருக்கு கவலை யில்லாத, நிறைவான வாழ்க்கை அமையப்பெற்றது. அவர் தம் உறவுகளின் தலைமகனாய் நின்று திறமை கொண்டு உழைத்தவர். மற்றவர்களைக் கவரும் வகையில் இருந்த சம்பாஷனை அவரை ஓர் சிறந்த ஊடகவியலாளனாக்கியது. என் கடன் பணி செய்து இருப்பதே என்ற வாக்கியத்திற்கு அமைய மக்களின் தேவை அறிந்து மனிதாபிமான நடவடிக்கையில் ஈடுபாடு உடையவராக இருந்தார். இதன் காரணமாக பல தொண்டு நிறுவனங்களில் பதவிகள் தாமாகவே இவருக்குக் கிடைக்கப்பெற்றன.

ஆன்மீக வளர்ச்சிக்கும் முன்னின்று உழைத்தவர். மாவை முருகன் திருப்பணிச்சபை அங்கத்தவராகவும், இலங்கை இசை வேளாளர் சங்கத்தின் தலைவராகவும், திறம்பட செயலாற்றியவர். அன்னார் சமய சமூகப் பணிகளுக்குப் பல விருதுகளைப் பெற்றவர்.

அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

சு. பரமநாதன்<br>
போசகர்,<br>
வலி. வடக்கு மீள்குடியேற்றம் புனர்வாழ்வுக்குழு.

# வாழ்வும் பணியும்

முன்னணி வகிப்பவர்களிடம் சாதாரணமாக எதிர்பார்க்கப்படும் கல்விசார் பட்டங்கள் பொருளாதாரம் போன்ற பின்புலங்கள் வாய்க்கப் பெறாதிருந்தும், குடும்பத்தில் ஏற்பட்ட இடையூறினால் உண்டான பொறுப்புக்களோடு தொழிலில் ஏற்பட்ட சவால்களையும் வெற்றி கொண்டு பாரம்பரியம், ஒழுக்கம் உள்நோக்கமில்லாத தொண்டு மனப்பான்மை கொண்ட கொள்கையில் உள்ள பிடிப்பு, பணிவான மகிழ்ச்சியுடன் கூடிய தொடர்பாடல் வழமை, எந்தத் தரத்திலுள்ளவர்களோடும் சமாளித்து உண்மை, நேர்மை, நீதி ஆகியவற்றை நிலைநாட்டும் திறமை முதலிய பல நற்பண்புகளைக் கைக்கொண்டு -

- இப்புவியில் நீண்ட ஆயுளைப் பெற்று வாழ்ந்து, சமூகத்தில் ஒரு இடைவெளியை ஏற்படுத்திச் சென்றிருக்கும் திரு. எஸ். ஆர். ஞானசுந்தரம் அவர்கள் பொதுச்சேவையை தனது வாழ்நாள் கடமையாகக் கடைப்பிடித்து பல வகைப்பட்ட சேவை அமைப்புக்களில் பொறுப்பான பதவிகளைத் திறம்படவகுத்து பலருக்கும் வழிகாட்டியாக அமைந்ததோடல்லாமல் பிற்காலத்தில் ஏற்பட்ட இடப்பெயர்ச்சி வீடு, பொருள், இழப்புக்களையும் தாங்கி அவற்றை வெற்றி கொண்டு சிக்கலான காலங்களிலும் தான் சேவை செய்து கொண்ருந்த நிறுவனங்கள் தொடர்ந்து இயங்கவும், அவற்றின் ஆவணங்கள் மற்றும் பாதுகாக்கக்கூடிய பொருள்கள் ஆகியவற்றைப் பேணி தனது குடும்ப உறுப்பினர்களையும் இப்பணிகளில் ஈடுபட உடன்படுத்தி பல நன்மைகளை இச்சமூகம் பெற்றுக் கொள்ளத் தொண்டாற்றியிருக்கிறார்.

பெரியாரின் மறைவு ஈடுசெய்யமுடியாத இழப்பு, நற்செயல்களுக்கு ஏற்பட்ட தடங்கல் என்று பொதுவாகக் கருத்துத் தெரிவிக்கும் முறையைத் தவிர்த்து தன்னாலான மட்டும் நற்பணி புரிந்திருக்கிறார்கள். அப்பணிகளைத் தொடர்வதற்கு அவர்களை முன்னுதாரணமாகக் கொள்வதற்கு என்ன செய்ய வேண்டுமென்று மனங்கொள்வதே நாம் செய்யும் உண்மையான அஞ்சலியாகும்.

கடமை தவறாமல் மனநிறைவுடன் சமூகம் மகிழ வாழ்ந்த இச்செயல் வீரருடைய ஆன்மா சாந்தியடையும் என்பதில் ஐயமில்லை.

**மாவிட்டபுரம்.**

வை. சந்திரபாலன்
**- செயலாளர், பளை கூத்தியவத்தை ச. ச. நிலையம்**

## மக்களின் மனம் நிறைந்தவர்

மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட ஞானசுந்தரம் அவர்கள் இறைபதம் அடைந்த செய்தியைக் கேட்டு நான் மிகவும் வேதனைஅடைந்தேன். அன்னார் பொதுச் சேவைகள் பல செய்து மக்களின் மனதில் நிறைந்த ஓர் மனிதனாவார். இவர் பாடசாலை அபிவிருத்திச் சங்கங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மற்றும் பொதுஅமைப்புக்களிலும் சேவையாற்றிக் கொண்டு தெல்லிப்பழை பல.நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திலும் அதன் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்டார்.

மேலும் அவர் சங்கத்தின் நிர்வாக சபையில் இருந்து பல ஆலோசனைகள் வழங்கி வந்தார். இவர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் 25 வருடங்கள் சேவையாற்றிய காரணத்தால் இவரது சேவையைப் பாராட்டி 2001 ஆம் ஆண்டில் கௌரவிப்பு இடம் பெற்றது.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய அவர்களின் குடும்பத்தினர்களுக்கும் உறவினர் களுக்கும் எமது சங்கத்தின் சார்பில் அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கூட்டுறவுச் சேவையிலுள்ள
ச. தனபாலசிங்கம்,
தலைவர்,
தெல்லிப்பழை ப.நோ.கூ. சங்கம்

விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் வாய்நிறைய
எவரையும் வரவேற்றுவிடுங்கள்

# துயரில் பங்கேற்கின்றோம்

தங்கள் குடும்பத்தைச் சேர்ந்த திரு. எஸ்.ஆர். ஞானசுந்தரம் அவர்கள் 04.02.2011 வெள்ளிக்கிழமை அன்று மறைந்தமையை யிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரி வித்துக் கொள்கிறோம். அன்னாரின் பிரிவி னால் ஏற்படும் தங்கள் துயரினில் நாமும் பங்கு கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தி யடையப் பிரார்த்திக்கிறோம்.

நன்றி!

*219, ஆடியபாதம் வீதி,*
*நல்லூர்*
*யாழ்ப்பாணம்*

*க. விஜயராஜசிங்கம்*
*இலங்கை தேசிய பார்வையற்றோர்,*
*சம்மேளனம்.*

**ஆசீர்வாதம்**

மணமக்களைப் பெரியோர்கள் ஆசீர்வதிக்கும் பொழுது அட்சதையை இருகைகளிலும் எடுத்து முதலில் தலையிலிட்டு பின் தோள் முழந்தால் பாதம் என்று போட வேண்டும். அல்லது சிரசில் மட்டும் போடலாம். இது தேவர்கள் வானிலிருந்து ஆசீர்வதிப்பதாகும். (அபரக்கிரியைகளிலும் பிதுர் காரியங் களிலும் தான் காலில் இருந்து தலைவரை செய்யப்படுகிறது. இது பிரிந்த உயிர் வான் நோக்கி முத்திநிலை அடைவதை குறிக்கின்றது)

# இசை வேளாளரின்
# மரியாதை

## தந்தையைத் தவிக்கவிட்ட 'இசை வேளாளர் சங்கம்'

மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும் இணுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட நாதஸ்வர வித்துவான் கலாபூஷணம் S.R. ஞானசுந்தரம் (J.P) அவர்கள் எங்கள் சமூகத்திற்குக் கிடைத்த மாபெரும் சொத்து. இச் சமூகம் நாதஸ்வர, தவில் கலைகளில் உலகப் புகழ்பெற்று சிறப்படைவதோடு கல்வியறிவிலும் சிறப்படைய வேண்டுமென்ற அவாவைக் கொண்டவர். அதற்காக பல பொதுச்சேவைகளில் ஈடுபட்டவர். அந்த நோக்குடனேயே வாழ்ந்து மறைந்த மாசிலான். ஒரு கலைஞன் எப்படி வாழ வேண்டுமென்பதை தன்னகத்தே கொண்டு வாழ்ந்துகாட்டிய மாபெரும் கலைஞன். வாழும்போதே பல நல்ல பணிகளைச் செய்ய வேண்டும் என்ற உவகை கொண்ட உத்தம புருஷன். ஓர் ஆசிரியனாக, எழுத்தாளனாக, செயற்குழு உறுப்பினராக, பொருளாளராக, செயலாளராக, உபதலைவராக, தலைவராக பரிணமித்த பேராசான். **'கலை கலைக்காக அல்ல. மக்களுக்காக'** என்பது போல் கலைஞனும் தனக்காக அல்ல. மக்களுக்காக என்று வாழ்ந்து காட்டிய பெருந்தகை.

ஓர் இசைக் கலைஞன் சென்ற இடமெல்லாம் சிறப்படைவான். அவனது கலை வெளிப்பாடு இலகுவாக மக்களின் மனதை சென்றடைந்து வென்றுவிடும் என்பதற்கு நல்ல உதாரணமானவர்.

கலைத்துறையானாலும் சரி, ஊடகத் துறையானாலும் சரி, சமூக சேவைகளானாலும் சரி எதற்கும் சளைத்தவன் அல்லர் என்பதை நிரூபணம் செய்த நித்தியசீலன்.

'இசை வேளாளர்' என்ற அடையாளத்தை உலகில் பதியவைத்த உயரிய தலைவன் - தகப்பன்.

இன்று இத் தந்தைக்காக இரங்கி நிற்கின்றது இச் சமூகம்.

**நாதஸ்வர வித்துவான்**
**கலாபூஷணம்**
**கே. ஆர். சுந்தரமூர்த்தி (உப தலைவர், இலங்கை இசை வேளாளர் சங்கம்.)**

# பெரும் சொத்து

எங்கள் சங்கத் தலைவர், எங்கள் சமூக வழிகாட்டி, எங்கள் சமூகத்திற்குக் கிடைத்த பெரும் சொத்து. இன்று நம்மத்தியில் இல்லை. ஞானசுந்தரத் தாத்தா போன்றவர்களைக் காண்பது மிகமிக அரிது.

கடந்த சில ஆண்டுகளாக இசைவேளாளர் சங்க பொறுப்புக்களில் நான் இருந்தபோது பட்ட கஷ்டங்கள், துன்பங்கள், ஏச்சுப்பேச்சுகள் சொல்லில் அடங்காதவை. ஆனால் அன்னார் 1954 ஆம் ஆண்டு முதல் இச்சங்கத்தின் பொறுப்புகளில் இருந்து இவ்வளவையும் எவ்வாறு சமாளித்தார் என்பதை கற்பனை செய்து கூட பார்க்க முடியவில்லை. அவர் பட்ட கஷ்டங்கள், துன்பங்கள் அவருக்குத்தான் தெரியும். அதற்காக அவரை நாம் சிரம் தாழ்த்தி வணங்குகின்றோம்.

இசைவேளாளர் சமூகம் அவருக்குச் செய்யவேண்டிய கைம்மாறு நிறையவே உண்டு. சமூகத்திற்காக அவர் ஆற்றிய மகத்தான பணிகளை நாம் நினைவு கூருவதுடன், அவர் பதித்த தடங்களில் பயணித்து, எமது சமூக மறுமலர்ச்சிக்காக உழைப்பதே அவருக்குச் செய்யும் கைம்மாறாக அமையும். அவரின் ஆத்மா சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

கே. இரத்தினகுமார்
செயலாளர், இலங்கை இசைவேளாளர் சங்கம்

> அவசர புத்தியும் அடங்கா முன்கோபமும் ஆதாரமற்ற சிந்தனையும் அன்பின் பலனை முறித்து அழிக்கும். சாந்தமும் நற்குணமும் ஆக்கபூர்வமான சிந்தனையும் சதா அன்பை வளர்க்கும்.

## சமூக மேம்பாட்டுக்கு வழிசமைத்தவர்

இலங்கை இசைவேளாளர் சங்கத்தின் உருவாக்கத்திற்கும் சமூகத்தின் மறுமலர்ச்சிக்கும் சங்கம் மூலம் 1954 ஆம் ஆண்டு முதல் ஆற்றப்பட்ட பணிகளுக்கும் தூணாக நின்று ஆற்றுப்படுத்தியவர் அமரர் எஸ்.ஆர். ஞானசுந்தரம்.

இசைவேளாளர்களை சமூகமாக உருவகம் செய்து, அச்சமூகத்தின் கலை, சமூக, பொருளாதார அபிவிருத்திக்காக அயராது உழைத்தவர்.

இசை வேளாளர் சமூகம் அன்னாரின் பணிகளை நினைவு கூருவதுடன் அவருக்கு கைம்மாறாக எதிர்காலத்தில் மேலான பணிகளை முன்னெடுக்கக் கடமைப்பட்டுள்ளது. சங்கத்திற்கென நிரந்தர கட்டடம், நாகசுர - தவில் பயிற்சிப் பாடசாலை போன்ற அவர்து கனவுகளை நிறைவேற்ற நாம் திடசங்கற்பம் பூணுவோமாக.

**நா. யோகநாதன்**<br>
**உப செயலாளர்,**<br>
**இலங்கை இசை வேளாளர் சங்கம்.**

> **தன்னம்பிக்கை, எச்சரிக்கை, உணர்வு, விடாமுயற்சி, அனுபவ அறிவு இந்நான்கும் உடையவர்கள் எப்போதும் வாழ்க்கையில் வெற்றிபெறுவர் என்பது நிச்சயம்.**

# ஊடகவியலாளரின் மதிப்பீடு

# பத்திரிகைத் துறையில் ஒரு கர்மவீரன்

ஈழத்தின் மிக மூத்ததமிழ் ஊடகவியலாளர்களில் ஒருவரான மாவிட்டபுரத்தைச் சேர்ந்த எஸ். ஆர். ஞானசுந்தரம் தமது 90 ஆவது வயதில் நேற்றுக் காலமானார். நாதஸ்வரக் கலைஞரான இவர், தமது பிரதான தொழிலுக்குச் சமமாக, ஏன் அதனை விடவும் பத்திரிகைத் தொழிலை நேசித்துப் பணியாற்றியவர்.

யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த "ஈழநாடு" நாளிதழின் மாவிட்டபுரம் செய்தியாளராக அவர் பணியாற்றிய வேளையிலேயே எனக்கு அறிமுகமானார். அதன் பின்னர் தினபதியின் தெல்லிப்பழைச் செய்தியாளராகப் பணியாற்றியவர். அவரின் திறமையையும், இத்தொழிலில் உள்ள ஈடுபாட்டையும் கருத்திற்கொண்டு உதயனை ஆரம்பித்தபோது அதன் முதலாவது தொகுதி மூத்த செய்தியாளர்களில் ஒருவராக நியமிக்கப்பட்டார்.

சம்பந்தப்பட்டவர்களிடம் இருந்து தகவல்களைப் பெறுவதிலும், அவற்றை உறுதி செய்வதிலும் மிக வல்லவர். நீண்டநாள் பழக்க மில்லாதவர்களிடம் கூட அடிக்கடி சிரித்துச் சிரித்துப் பேசி வேண்டியதைக் "கறந்துவிட"க் கூடிய வல்லமை அவருக்குக் கைவந்த கலை. அவரது அந்த வல்லமை சேர் கலையை அத்தனை உச்ச நிலையில் வேறு எவரிடமும் இருந்ததைக் கண்டதில்லை எனலாம்.

அரசியல், சமூகம், சமயம், கலைகள் சார்ந்த எந்த விடயமானாலும் சம்பந்தப்பட்டவர்களைப் புன்சிரிப்புடன் அணுகி, அடிக்கடி அதனை அவிழ்த்துவிட்டுத் தனக்கு வேண்டிய "சரக்கை"ப் பெறும் அவரது தனித்திறமை அவரைச் செய்திப் பணியில் உயர்த்தியது.

தாம் எழுதும் செய்தியில் தவறு நேர்ந்துவிடக் கூடாது என்பதில் எத்துணை கவனமாக இருநதாரோ, அந்தளவுக்கு ஏற்பட்ட ஒரு தவறைக் கண்டறிந்து முன்கூட்டியே அலுவலகத்தில் பொறுப்பானவருக்குக் கூறிவிடும் பண்பும் அவரிடம் இருந்தது.

அவர் படுக்கையில் விழுந்த பின்னர், கொழும்பிலிருந்து வந்த மிக முதுபெரும் பத்திரிகையாளர் ஒருவருடன் அவரின் சுகநிலை விசாரிக்க இணுவிலுக்குச் சென்றிருந்தோம்.

நாங்கள் சென்றிருப்பது குறித்து உறவினர் கூறியதும், பல மாதங்களாகப் படுக்கையில் கிடந்தவர், அதிலிருந்து தாமே எழுந்து "வாருங்கோ, இருங்கோ" என்று "பழைய" அதே சிரிப்புடன் வரவேற்றார்.

அரைமணி நேரச் சந்திப்பின்போது தமது பழைய பல அரசியல், சமூக, கலை, சமயம் சார் செய்தித்துறை அனுபவங்களையும் பல சிறிய விடயங்களையும் எவ்வாறு பெற்றார் என்பதனையும் நினைவுபடுத்தினார். 90 ஆவது வயதில், நோய்வாய்ப்பட்டிருந்த வேளையிலும் பல முக்கிய சம்பவங்கள் அவை கொண்டு தாம் எழுதிய சுவையான செய்திகளை அடுக்கிக் கொண்டே போனார். எங்கள் இருவருக்கும் திகைப்பு உண்டானது.

பத்திரிகைத் துறைசார்ந்த விடயங்களை மட்டுமன்றித் தமது பிரதான தலையாய இசைத்துறையில் நாதஸ்வரத்துறையில் தாம் முன்நின்று நடத்திய பாடசாலை, விழாக்கள் மற்றும் சமூகத்துறைகள் குறித்தும் களைப்பின்றி - அலுப்பின்றிப் பொழிந்தார் - மொழிந்தார்.

காலத்துக்கு வேண்டிய செய்தி எது, மக்களுக்குத் தேவையான செய்தி எது, பத்திரிகைக்குச் சிறப்புச் சேர்க்கும் விசேட செய்தி எது என்று இனங்கண்டு அத்தொழிலைச் செய்த கர்மவீரன் ஞானசுந்தரம் ஐயா, சுமார் நான்கு தசாப்தகால அவரது பத்திரிகைப் பணி ஈழத்தமிழர் பத்திரிகைத்துறை வரலாற்றில் துலக்கமானது.

ஊடகத்துறை - பத்திரிகைத்துறை - அலுவலகங்களில் தொழில் புரிந்தவர்களைவிட, அத்துறையில் வெளிக்களப் பணி புரிந்தவர்களின் அனுபவங்களும், அவர்கள் எதிர்நோக்கிய அசௌகரியங்களும், அச்சுறுத்தல்களும் அதிகம். அந்த வாய்ப்பாட்டை நிரூபித்த - களம் கண்ட ஞானசுந்தரம் ஐயாவின் நினைவு என்றும் நிலைபெறும்.

ம. வ. கானமயில்நாதன்
பிரதம ஆசிரியர்,
உதயன், சஞ்சீவி.

5. 2. 2011

**அழுகை, சிரிப்பு, இசை, நித்திரை**

| | |
|---|---|
| அழுகை: | கண்ணீர் விட்டு அழுவதால் உடல் ஆரோக்கியத்துடன் சீரான சக்தியும் அதிகரிக்கின்றது. புண்கள் காயங்கள் சீக்கிரமாக ஆறிவிடும். |
| சிரிப்பு: | சிரிப்பதால் பிராணவாயு அதிகமாகக் கிடைத்து ஆரோக்கியமாக இருப்பதற்கு உதவி செய்கிறது. |
| இசை: | இசையைக் கேட்கும்போது இதயத் துடிப்பு சமநிலைக்கு வருகின்றது. கண்களுக்கு கூர்மையும் மன ஒருமையும் உண்டாகிறது. இருதயத்தின் இறுக்கம் குறைகிறது. |
| நித்திரை: | உழைக்கும்போது தேய்ந்துவிடும் கலன்கள் ஆழ்ந்து தூங்கும் போது புதுப்பிக்கப்படுகின்றன. புதிய கலன்களும் உருவாகின் றன. தூக்கம் கெடும்போதும் கலன்களின் உற்பத்தி பாதிக்கப் படுகிறது. |

# சிரிப்புக்கு ஓர் அடையாளம்

எஸ்.ஆர். ஞானசுந்தரம் அவர்களை செய்தியாளராகத் தான் எனக்கு முதலில் தெரியும். அவர் ஒரு நாதஸ்வர வித்துவான் என்பது பின்னர்தான் தெரியவந்தது.

அக்காலத்தில் சிவன் மேற்கு வீதியில் அமைந்திருந்த ஒரு கட்டடத்திலிருந்து 'ஈழநாடு' பத்திரிகை வெளிவந்து கொண்டிருந்தது. மாவிட்டபுரம் நிருபராக திரு. ஞானசுந்தரம் பொறுப்பேற்று இருந்தார். பிற்காலத்தில் உதயன், தினபதி மற்றும் சிந்தாமணி ஆகிய பத்திரிகைகளுக்கும் நிருபராகப் பணியாற்றியுள்ளார்.

வெள்ளைவேட்டி, மேல்சட்டை, நெற்றியில் திருநீறு இவைகளுக்கு மேலாக கடை வாயில் ஒரு புன்சிரிப்பு. அந்தப் புன்சிரிப்பையும் மீறி உதடுகளின் ஓரத்தில் தெரியும் வெற்றிலைக்காவி.

அவரோடு பழகியவர்களை மட்டுமல்ல பழகாதவர்களையும் கூட அவர்பால் எல்லோரையும் கவர்ந்திழுத்துக் கொண்டவையாகும் இவை.

ஞானசுந்தரம் எங்கள் காரியாலயத்துக்கு வருகிறார் என்றால் ஒரு கலகலப்பு. ஆசிரியர் பகுதியில் இருக்கும் எல்லாருமே அவரிடம் சில வார்த்தைகளாவது பேசாமல் இருக்கமாட்டார்கள்.

அலுவலோடுதான் வருவார். அலுவல் முடிந்தால் விடைபெற்றுக் கொள்வார். அதற்குமுன் இரண்டு மூன்று தடவையாகுதல் வாய்விட்டு சிரிப்பார். அந்த சிரிப்புதான் அவரை தெம்பாகவும் சுகதேகியாகவும் பலகாலம் வைத்திருந்தது என்பது என் கருத்து.

"வாய்விட்டு சிரித்தால்
நோய் விட்டுப் போகும்" என்பது பொன்மொழி. ஞானசுந்தரம் வாய்விட்டு சிரித்தார். சிரிப்பை உதிர்ப்பதற்கு அவர் தயங்கியதே இல்லை. அதனால் நீண்ட காலம் வாழ்ந்தார்.

அவர் சுகவீனமுற்றிருந்த இறுதிக்காலத்தில் ஒருமுறை அவரது இளைய மகனின் இல்லத்துக்குச் சென்றிருந்தேன். பார்ப்பதற்காக முதலில் என்னை யார் என்று தெரியவில்லை. பின்னர் புரிந்து கொண்டு உற்சாகமாக உரையாடினார். புழைய பத்திரிகை நண்பர்கள், பெரியோர்களை நினைவு கூர்ந்தார். தனது மருமகள்மார்களைப் பற்றிப் புகழ்ந்துரைத்தார். எனக்குச் சற்று ஆச்சரியமாக இருந்தது. மருமகள்மாரைப் புகழ்ந்துரைப்பவர்களைக் காண்பது மிக அரிதான காலம் இது. அது மட்டுமல்ல, அவர்களும் அவ்வாறு தான் அவரைப் பார்த்திருக்கிறார்கள் என்பதும் புரிந்தது.

இம்மாதிரி நற்குணங்களின் காரணமாகவே அவரால் பல அமைப்புக்களுடன் இணைந்து பொதுச் சேவைகளில் ஈடுபட முடிந்தது.

இசைவேளாளர் சங்கங்கள், கிராமோதய சபைகள், கூட்டுறவுச் சங்கங்கள் , கம்பன் கலைக்கழகம், பாடசாலை அபிவிருத்திச் சங்கங்கள், கயரோக தடுப்புக் கழகம் போன்ற பொதுச் சேவை அமைப்புக்களுடன் இணைந்து மக்கள் பணிகள் புரிந்துள்ள அமரர் ஞானசுந்தரம் அவர்கள் அரசியலிலும் அக்கறை கொண்டவராக இருந்துள்ளார். இலங்கை தமிழரசுக் கட்சியின் காங்கேசந்துறை கிளை செயற்குழு உறுப்பினராக இருந்துள்ளார் என்பதிலிருந்து இது தெரியவருகின்றது.

அவரது பணிகள் அத்துடன் முடிவுறவில்லை. மாவை முருகன் திருப்பணிச் சபை செயற்குழு உறுப்பினராகவிருந்து சமயப் பணி ஆற்றியிருப்பதுடன் இசையாளன், சிலம்பொலி பத்திரிகைகளின் ஆசிரியராகவும் பணியாற்றியுள்ளார். இதற்குமேலும் தெல்லிப்பழை துர்க்காதேவி இசைப் பாடசாலையிலும் ஆசிரியராகப் பணியாற்றியிருப்பது வியப்பளிக்கின்றது. 1995 ஆம் ஆண்டு இடப் பெயர்வின்போது ஞானசுந்தரம் அவர்களின் மூத்த புதல்வர் திரு. குகநாதன் குடும்பமும் நாங்களும் ஒன்றாக இருக்கும் சந்தர்ப்பம் ஏற்பட்டது. சில தினங்கள் ஞானசுந்தரம் அவர்கள் ஒன்றாகவிருக்கும் வாய்ப்பும் பழகும் சந்தர்ப்பமும் ஏற்பட்டன.

உலகில் எத்தனையோ மனிதர்களைப் பார்த்திருக்கின்றோம். உரையாடிப் பழகுகின்றோம். அமரர் ஞானசுந்தரம் போன்ற நல்ல உள்ளம் கொண்டவர்களைக் காண்பது மிகவும் அரிது. அவர் ஆன்மா சாந்தியுறுவதாக.

அன்பன்

எஸ். வேநாயன்

அரைகுறை நண்பரானாலும் அப்போதுதான் அறிமுகமாகி இருந்தாலும் பண்பாகப் பேசிக் கொள்ளுங்கள்.

## இனிக்க இனிக்கப் பேசுவார்

தினபதி - சிந்தாமணி முதல் உதயன் வரை செய்தி ஆசிரியராகப் பணியாற்றிய காலத்தில் என்னுடன் இன்முகத்துடன் பழகியவர் ஞானசுந்தரம் ஐயா.

செய்தித்துறையில் நெருங்கிய தொடர்புகளைக் கொண்டிருந்த அவர் அடிக்கடி என்னைச் சந்திக்கும் வாய்ப்புக் கிட்டும். அந்தச் சந்திப்புக்களின்போது அவருடன் வயதில் மூத்தவராக இருந்தாலும் நட்புடன் பழகியுள்ளேன். இனிக்க இனிக்கப் பேசுவார்.

ஒரு செய்தியில் தவறு என்று சொன்னால், சிரித்தபடி அச் செய்தியில் தவறு இல்லை என்பதை ஆதாரத்துடன் நிரூபிப்பார்.

தெல்லிப்பழைப் பிரதேச செய்தியாளராகப் பணியாற்றிய காலங்களில் செய்திகளுக்காக காத்திருப்பேன். அவரது செய்தி அச்சொட்டாக இருக்கும். அவரது செய்தியில் கை வைக்கத் தேவையில்லை. தலைப்புப் போடுவது மட்டும்தான் எனது வேலையாக இருக்கும்.

அவருடன் இருந்த உறவுகள் பசுமையானவை. எக்காலத்திலும் மறக்கமுடியாதவை. அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறேன்.

என். பத்மசீலன்
ஆசிரியர், சுடர்ஒளி

குற்றமென்றாலும் குறை என்றாலும் தண்டிக்க எண்ணாதீர்கள்.

# அரசியல் பிரமுகர்களின் பார்வை


வடக்கின் அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும்
வடக்கு கிழக்கு தமிழ் விவகாரங்கள் அமைச்சு
இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்
NATIONAL HINDU RELIGIOUS GURUPEEDAM
(Approved by the Government of Sri Lanka)
751 A, Bloemendhal Road, Colombo - 15. T.P.: 072-422239
பட்டமளிப்புப்
பாராட்டுப் பத்திரம்
ஆன்மீகப் பெருவிழாவில்
ஸ்வர ஞான கலாபமணி
S L F I
சான்றிதழ்
No: 290
தினபதி
Mr. S.R. Gnanasundaram,
is authorised to represent
DINAPATHI & CHINTAMANI
for TELLIPPALAI
இலங்கையில்
கலைத்துறையின் மேம்பாட்டிற்கு ஆற்றிய
மேலான சேவையினை பாராட்டும் வண்ணம்
கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால்
வழங்கப்படுகின்றது
கலாபூஷண விருது
இசையாளன்
ஞானம் அலங்கரித்த விருதுகள்

## தந்தை செல்வாவின் வழியில்...

தந்தை செல்வாவின் தமிழரசுக் கொள்கைப்பற்றுடன் - இலட்சியவாதியாக இறுதிவரை வாழ்ந்து காட்டியவர் நாதஸ்வர இசைக்கலைஞர் எஸ். ஆர். ஞானசுந்தரம் அவர்கள்.

மாவிட்டபுரத்தைச் சேர்ந்த ஞானசுந்தரம் அவர்கள் மக்களிடம் இருந்து பிரிந்துவிட்டார். காலமாகி விட்டார் என்றதும் எம் இருதயம் ஒரு தரம் பாதிப்புக்குள்ளாகிவிட்டது. 80 ஆண்டுகளுக்கு மேலாக எம் மண்ணில் என்றும் புன்னகையுடன் உலா வந்த ஒரு மனிதாபிமானி எம்மை விட்டுப் பிரிந்துவிட்டார்.

துடிப்புள்ள இளைஞராக இருந்த காலத்திலேயே மக்களிடம் தொண்டனாகி விட்டார். மாவிட்டபுரத்தில் இசைக் கலைஞர்கள் வாழ்ந்து புகழ் நாட்டியவர்கள். மாவிட்டபுரம் கந்த சுவாமி கோயில் முதல் பல கோயில்களில் பரம்பரையாக இசைப்பணி புரிந்தவர்கள். ஞானசுந்தரம் இசைக் கலைஞர்களுக்கென ஒரு 'பேரவை' யை உருவாக்கி அதன் செயலாளராகவிருந்து நலிவடைந்தோருக்கு உதவியும் இசைக்கலைஞர்களுக்குப் பெருமையும் சேரத்தொண்டாற்றியவர்.

இளைஞனாக இருந்த காலத்திலேயே பல சமூகப் பணிகளில் ஈடுபாடு கொண்டவராய் மிளிர்ந்தவர். தந்தை செல்வா தமிழரசுக் கட்சியைத் தொடக்கி வழிநடத்தியபோது ஞானசுந்தரமும் இசைக் கலைஞர்களும் தமிழரசுக் கட்சியின் ஆதரவாளர்களாக விளங்கினர். தந்தை செல்வாவும் நாதஸ்வர இசையில் மயங்கி மகிழ்ந்தவர் தான். இசைக்கலைஞர் களிடத்திலே ஈடுபாடு கொண்டவர்.

ஞானசுந்தரம் அந்நாளில் 'ஈழநாடு' பத்திரிகைக்கு செய்தியாளராகப் பணியாற்றியவர். அப்போது ஏனைய பத்திரிகைகளுக்கும் செய்திகளும், கட்டுரைகளும் எழுதிவந்தவர். தந்தை செல்வாவின் தமிழரசுக் கொள்கையில் பழுத்த இலட்சியவாதியாய் வாழ்நாள் இறுதிவரை வாழ்ந்தவர்.

நாமும் ஞானசுந்தரமும் மாவிட்டபுரத்தைச் சேர்ந்தவர்கள். அவரும் இசைக் கலைஞர்களும் ஒரே குடும்பத்தைப் போல் பழகியவர்கள். தமிழரசுக் குடும்பத்தில் ஒன்றாய், ஒரேகொள்கைவாதிகளாய் வாழ்ந்தவர்கள் என்ற நெஞ்சத்து நினைவுகளோடு எம் இதயத்து அஞ்சலியைச் சமர்ப்பித்து நிற்கின்றேன்.

*மாவை சோ. சேனாதிராசா*
**நாடாளுமன்ற உறுப்பினர்,**
**செயலாளர், தமிழரசுக் கட்சி.**

## உதயன் குடும்பத்தில் ஒருவர்...

ஏனைய மொழிகளுக்கு இல்லாத சிறப்பு தமிழ் மொழிக்கு உண்டு என்பது புலத்துறை முற்றிய வித்தகர்கள் புகழ்கின்ற உண்மையாகும். இயல் இசை நாடகம் என்ற மூன்றையும் தன்னகத்தே இணைத்துக் கொண்ட ஒரு தனிச் செம்மொழி இந்த விரிநீர் வியனுலகத்தில் தமிழ் மொழியை தவிர வேறொன்றுமில்லை. தேவார திருவாசங்களை அருளிய திருப்புகழை அருளிய இறைபக்தியில் முதிர்ந்த ஞானிகள் பண்ணோடு பாடக்கூடிய தேவார திருவாசகத்தையும் திருப்புகழையும் இந்த ஞாலத்தில் உள்ள மாந்தர் தேனை போன்று சுவைத்து மகிழ்வதற்காக அருளிச் சென்றார்கள்.

இசை என்ற பதம் இறைவன் இதயத்தை இசைவிக்க வல்லது என்ற பொருள் படுவதாகும். இறைவனையே இசைவிக்கவல்ல இசைத்தேனை மாந்துகின்ற வண்டுகளாக தம்மிடையே வாழ்ந்து இசைத்தேனை தானும் அருந்தி தம்முடைய இசையினால் பலருடைய உள்ளங்களையும் மகிழவைத்து விண்போந்த பெருமைக்குரிய இசைக்கலைஞர்களை நினைவு கூருதல் இவ் வையகத்தில் வாழ்கின்ற மாந்தரின் கடமையும் பொறுப்புமாகும்.

மறைந்த திரு. ஞானசுந்தரம் அவர்கள் நாதஸ்வர இசையில் தனக்கென ஒரு சிறப்பினை பெற்றிருந்தவர் ஆவார். அவர் தன்னுடைய இசையினால் இசை உலகத்தில் தனக்கென ஒரு முத்திரை பதித்தவர். நாதஸ்வர ஓசையிலே நாதன் வந்து பாடுகின்றான் என்று கவிப்பேரரசர் கண்ணதாசன் கூறிய சொற்கள் தெய்வாம்சம் பொருந்தியவை.

மறைந்த திரு. ஞானசுந்தரம் அவர்கள் உதயன் பத்திரிகை நிறுவனத்தோடு உதயன் பத்திரிகை குடும்பத்தோடு மிக நெருக்கமான உறவைக் கொண்டிருந்தார்.

அவரும் அவருடைய புதல்வர் குகநாதன் அவர்களும் எனக்கு அருகில் உள்ள இல்லங்களில் வசித்து வந்ததனால் அவரோடு நெருங்கிப் பழகுகின்ற வாய்ப்பினை நான் பெறக்கூடியதாக இருந்தது.

அவரோடு பழகிய காலத்தில் அவர் என்னோடு மனம்விட்டு கலந்துரையாடிய பல பொருள் பொதுழிய சிறப்பான விடயங்களை நான் என்றும் நினைவுகூர்ந்து மகிழ்ந்ததுண்டு. ஒரு கலைஞனுக்குரிய சான்றான்மையும் பொறையும் தகவுடைமையும் அமைதி தவழ்கின்ற வதனத்தில் இளம்பிறை போன்ற அவருடைய புன்முறுவலும் என்னை மட்டுமல்ல இசைவிருப்புடைய மாந்தர்களையும் சக கலைஞர்களையும் பெரிதும் கவர்ந்தவையாகும்.

வித்துவ செருக்கின்றி அவர் விளம்பிய சொற்கள் அவர் வாழ்ந்த வாழ்க்கை பிறர் இடுக்கண் களைய அவர் காட்டிய வேட்கை எவருடைய உள்ளத்தையும் புண்படுத்தாதிருந்த அவருடைய பெருந்தன்மை "வையத்து வாழ்வாங்கு வாழ்வான் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்" என்ற தெய்வப் புலமை திருவள்ளுவன் நவின்ற வாசகத்துக்கேற்ப இன்று அவர் வானுறையும் தெய்வத்துள் ஒன்றாக வைக்கப்பட்டுள்ளார் என்பதில் எட்டுணை ஐயமும் இல்லை.

அவருடைய புகழ் இந்த ஞாலம் உள்ளவரை ஒளியாக திகழவேண்டி அவர் பற்றிய என்னுடைய நினைவுகளையும் என் உணர்வுகளையும் இனிதே நிறைவு செய்கின்றேன்.

*ஈஸ்வரபாதம் சரவணபவன்*

**உதயன் மற்றும் சுடர்ஒளி நிர்வாக இயக்குநர்,**

**யாழ்ப்பாணம் நாடாளுமன்ற உறுப்பினர்.**

### *பொன்மொழிகள்*

| | |
|---|---|
| தானாக வருவது | இரண்டு - பாவம். புண்ணியம் |
| அடக்க முடியாதது | இரண்டு - ஆசை. துக்கம் |
| தவிர்க்க முடியாது | இரண்டு - பசி. தாகம் |
| நம்மால் பிரிக்க முடியாதது | இரண்டு - பந்தம். பாசம் |
| அழிவை தருவது | இரண்டு - பொறாமை. கோபம் |
| எல்லோருக்கும் பொதுவானது | இரண்டு - பிறப்பு. இறப்பு |

# யார் இந்தப் பெரியார்

யார் இந்தப் பெரியார். அனைவராலும் அன்போடும் பாசத்தோடும் அழைக்கப்பட்டு வந்த எஸ். ஆர். ஞானசுந்தரம் அவர்கள். இவர் இசைவித்துவானா? ஊடகவாளனா? கூட்டுறவாளனா? சமூகத் தொண்டனா? இல்லை. அன்னார் அத்தனையையும் உள் அடக்கிய ஓர் மாமனிதன். அவர் எழுப்பிய நாதஸ்வர இசை இன்றும் அனைவரின் காது சதைக்குள் ஒலித்துக் கொண்டே இருக்கின்றது.

அவரின் எழுத்து வண்ணம் அவர்களின் மகன் ஒருவரில் பிரதிபலிக்கின்றது. அவர்களது சமூகத்தொண்டு அவர் தம் பிள்ளைகளில் பிரதிபலிக்கின்றது. இன்று இப்பெரியார் நம் மத்தியில் இல்லை என்பதை எம்மால் நம்ப முடியவில்லை என்றால் அன்னாரின் அரவனைப்பிலும் அன்பிலும் மூழ்கி வாழ்ந்த பிள்ளைகள், பேரப்பிள்ளைகளால் எவ்வாறு தாங்க முடியும். அவர் தம் குணாதிசயங்களை எடுத்தியம்பும் ஆற்றல் எனக்குப் போதாது போனாலும் அன்னார் வாழ்ந்த வாழ்க்கை முறையை புகழ்ந்துரைக்கும் தகுதி எனக்குண்டு.

மனைவியை இழந்தும் மறுமணம் செய்யாது தன் பிள்ளைகளுக்காகவே வாழ்ந்து தன் பண்புகளை அவர்களுக்கு ஊட்டி வளர்த்தவர் இப்பெரியார். இசைவேளாளர் சங்கத்தை உருவாக்கி அதன் தலைவராகவும், செயலாளராகவும் அரை நூற்றாண்டுக்கு மேல் வழிநடத்திப் பணியாற்றி நல்ல பல இசைக்கலைஞர்களை உருவாக்கி நல்வழிப்படுத்தி மகத்தான சேவையை இசை உலகுக்குத் தந்தார் இப்பெரியார். கூட்டுறவாளனாக ஊழல்களை தவிர்த்து அதை தலை எடுக்கவிடாது தடுத்து நற்பெயர் பெற்றார். சமூக சேவைகளுக்காகப் பணியாற்றி ஏனையோருக்கு ஓர் முன்னுதாரணமாக வாழ்ந்து காட்டினார்.

அன்னார் அரிய பல தொண்டுகளைச் செய்து, முழுமையாக வாழ்ந்து அழியாப் புகழ் பெற்றார். அடுத்த தலைமுறைக்கு வழிகாட்டியாக அவர் ஓய்வெடுக்க விட்டு அவரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்போமாக.

வீ. ஆனந்தசங்கரி
தலைவர்,
தமிழர் விடுதலைக் கூட்டணி.

26.12.2011

# ஞானசுந்தரம் என்ற ஞானஸ்தன்

'**நிறைகுடம் தளம்பாது'** என்பது தமிழ் முதுமொழி. தான் மேற்கொண்ட தொழிலில் தனக்குள் சுடர்விட்ட கலையில் தான் வரித்துக் கொண்ட கொள்கையில் சமூகப் பொறுப்புடன் கூடிய ஏனைய பல்துறை சார் பணிகளில் வாழ்வியல் பண்பாடுகளிற்கு என அனைத்திலுமே அமைதியும் ஆளுமையும் கொண்ட ஒரு அற்புதமான மனிதராக சுமார் ஒன்பது தசாப்த காலம் எம்மிடையே நடமாடிய அந்தக் கலாபூஷணம் இன்று நம்மிடையே இல்லை. எஸ்.ஆர். ஞானசுந்தரம் என்ற பெருந்தகையானவர் அமரராகிவிட்டார்.

அவர் தன் வாழ்நாளில் நிகழ்த்திய பல்துறை பணிகளின் பன்முகப் பரிமாணங்கள் அவர் மீதான மதிப்பை மேம்படுத்தும் தன்மை கொண்டது. இயல்பாக ஒரு நாதஸ்வரக் கலைஞராக நாசிக் கமலத்திலிருந்து எழும் உயிர் மூச்சால் - இசையூற்றால் சகல மக்களையும் தம் வயப்படுத்திய அவரது கலா மேதாமை அவரை இலங்கை இசை வேளாளர் சங்கத்தின் பெருமைக்குரிய தலைவராக 1954 ஆம் ஆண்டு முதல் பணியாற்றும் கௌரவத்தைப் பெற்றுக் கொடுத்ததில் வியப்பில்லை.

ஈழத்தின் மிக மூத்த செய்தித்துறைசார் ஊடகவியலாளராக அவர் மேற்கொண்ட சமூகத் தொடர்பாளர் பணி என்பது ஒருகலைத்துறை சேவையாகவே அவரால் கையாளப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். அவரின் பல்துறைசார் அறிவுத்தேடல் என்பது அவரை முன்மாதிரியான அதேசமயம் முதன்மைச் செய்தியாளராக அடையாளப்படுத்தியதெனலாம்.

தமிழர்தாயகப் பகுதியிலிருந்து முதலில் வெளிவரத் தொடங்கிய ஈழநாடு நாளேட்டில் தனது ஊடகத்துறைப் பணியை ஆரம்பித்த அவர் பின்னர் தினபதி, உதயன், என பல பத்திரிகைகளிலும் தன்னை ஒரு நம்பிக்கைக்கும் மரியாதைக்கும் உரிய செய்தியாளராக இறுதி வரைக்கும் நிலைநிறுத்திக் கொண்டார். உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் 'பத்திரிகைத்துறையில் ஒரு கர்மவீரன்' என இவரை நினைவு கூர்ந்திருப்பதை இங்கு குறிப்பிட்டே ஆக வேண்டும்.

"இசையாளன்" மற்றும் சிலம்பொலி ஆகிய சஞ்சிகைகளின் ஆசிரியராக துர்க்காதேவி இசைப்பாடசாலை இசையாசிரியராக கம்பன் கலைகழகச் செயலாளராக இலங்கை இசை வேளாளர் சங்கத் தலைவராக இவர் ஆற்றிய இசைப்பணி அளப்பரியது.

தமிழ் தேசிய உணர்வாளரான இவர் தந்தை செல்வாவின் மதிப்புக்குரிய ஒருவராகவும், இலங்கை தமிழரசுக் கட்சியின் காங்கேசந்துறைக் கிளைச் செயலாளராகவும் கண்ணியமிக்க அரசியலாளராகவும் தன்னை நிலைநிறுத்திக் கொண்டவர்.பதவிகள் அவரை தேடி வந்தன. சமூக அக்கறையுடன் அவர் ஏற்றுக்கொண்ட பணிப்பொறுப்புக்களுக்கு எல்லாம் பெருமையைத் தேடிக் கொடுத்தவர் என்றால் மிகையாகாது.

சமூகத்தை மதிப்பவர் சமூகத்தால் மதிக்கப்படுவார் என்ற கருத்தியல் கோட்பாட்டிற்கு அவர் உன்னத உதாரணம். இத்தனை தகைமைகளையும் ஆளுமையையும் கொண்ட ஒருவரின் அடக்கமும் அமைதியும் தான் அவரை வையகத்துள் வாழ்வாங்கு வாழ வைத்ததெனலாம். அதற்கு அவரது பக்குவம் வாய்ந்த ஆன்மீக ஈடுபாடும் ஒரு சக்திய காரணமாகும்.

அமரர் ஞானசுந்தரம் அவர்கள் ஒரு பல்துறை ஞானஸ்தன் என்பதே அவரை 'நிறைகுடம் தழும்பாது என்ற முதுமொழிக்கு உதாரண புருஷனாக்கியுள்ளது.

அவரது ஆன்மா சாந்திபெற பிரார்த்திக்கிறேன்.

*சி. சிறீதரன்*
நாடாளுமன்ற உறுப்பினர்,
யாழ். மாவட்டம்.

என்றும் இறையடியைத் தொழு
இறை நம்பிக்கையைத் திடமாகப்பற்று
நீ செல்லும் பாதை இடர் நிறைந்ததானால்
உன் திசையை கட்டாயம் மாற்றுவான்.

# விடுதலை வேட்கையில் விசுவாசம்

அமரர் எஸ்.ஆர்.ஞானசுந்தரம் J.P. எனது தந்தையாரின் ஊரான மாவிட்டபுரத்தைச் சேர்ந்தவர். எனது தந்தையாரின் நெருங்கிய நண்பராகவிருந்தவர். எமது இல்லத்திலிருந்து அரை மைல் தூரத்திலுள்ள தமது இல்லத்தில் வாழ்ந்தவர். என்னைச் சந்திக்கும் போதெல்லாம் இதை நினைவுபடுத்திக் கொண்டவர். மிக மதிப்பார்ந்த நாதஸ்வர இசைக்கலைஞனான அமரர் தமது ஜீவனோபாய தொழிலுக்கு எத்துணை விசுவாசமாகவிருந்தாரோ அத்துணை விசுவாச மாக தமிழினத்தின் விடுதலை வேட்கையிலும் விசுவாசமாக இருந்தவர்.

தந்தை செல்வநாயகம் அவர்களின் துணைவியாரின் இல்லம், எமது இல்லங்களுக்கு மிக அண்மையில் இருந்ததாலும் தந்தையவர்களின் விசுவாசமான அரசியல் கொள்கை காரணமாகவும், தமிழரசுக் கட்சியின் அங்கத்தவராகவும், சீரிய தொண்டனாகவும் இருந்தார். தமிழரசுக் கட்சியின் பணிகளை தமது அன்றாட வாழ்க்கையின் ஒரு அம்சமாகவே கருதிச் செயற்பட்டார். தமிழரசுக் கட்சித் தலைவர்களுடனும், ஏனைய தலைவர்களுடனும் நல்லுறவைப் பேணியவர். தமது தொழில்சார் மேம்பாட்டுக்காக பல்வேறு அமைப்புகளுடன் இணைந்து செயற்பட்டவர். அதனால் இசைத்துறை சார்ந்த எல்லோராலும் மதிக்கப்படும் பாராட்டுக்கள் பெற்றவரும் ஆவார். அதற்கும் மேலாகப் பல்வேறு சமூகப் பணியாற்றியவர்.

இவற்றுடன் அப்போதைய காலகட்டத்தில் நாதஸ்வரக் கலைஞர்கள் ஈடுபாடு காட்டாத பத்திரிகைத்துறையில் துணிந்து இறங்கி செய்தியாளராகச் செயற்பட்டார். சமூகத்திலுள்ள நிகழ்வுகளை மட்டும் செய்தியாக்காமல் ஆங்காங்கே இடம்பெறும். அநீதிகளையும், சமூக விரோதச் செயல்களையும் வெளிக்கொணர்வதில் மிகுந்த அக்கறை காட்டினார். எமது கலை, கலாசார விழுமியங்களைப் பாதுகாக்கும் நிகழ்வுகள் பற்றிய செய்திகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பவராகவே இவரது ஊடகச் சேவை இருந்தது.

ஒரு பெருமைக்குரிய குடும்பத் தலைவனாக, பலருக்கு முன்னுதாரணமான வாழ்க்கை வாழ்ந்த பெருமகன் அமரர் ஞானசுந்தரம், பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள் என ஒரு நேர்த்தியான சந்ததியை உருவாக்கிப் பார்த்தவர். தாம் நேசித்த பத்திரிகைத் துறைக்கு மகன் குகநாதனை வாரிசாக உருவாக்கி பெருமையடைந்தவர்.

அமரரது இழப்பு குடும்பத்தினருக்கு வேதனையளிப்பதாகவே இருந்தாலும், அவரது நிறை வான வாழ்வைக் கொண்டு அவர்கள் நிம்மதியடையலாம். வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்து அமரர் எஸ். ஆர். ஞானசுந்தரத்தின் ஆன்மா அவர் ஆற்றிய தெய்வீகப் பணியின்பேரால் வானுறையும் தெய்வமான மாவைக்கந்தனின் பாதாரவிந்தத்தில் முத்திபெற பிரார்த்திக்கிறேன்.

*சீ.வி.கே. சிவஞானம்*
**முன்னாள் மாநகர ஆணையாளர்**

# குடும்ப உறவுகளின்
# கண்ணோட்டம்


குடும்ப
உறவுகளுடன்...
இறுதிக்
கிரியைகளில்...
கனடாவில்
அஞ்சலி
இறுதி
யாத்திரையில்...

# அந்த 18 மாதங்கள்

ஆம். அந்த 18 மாதங்கள் எனது வாழ்க்கையில் ஓர் முக்கிய காலகட்டம் எனலாம். என்னைப் பெற்ற அப்பாவை அருகிலிருந்து ஆதரித்து அவருக்கு வேண்டிய பணிவிடைகளைச் செய்து, அவரது நல்லாசிகளைப் பெற்ற காலமே அந்தக் காலம்.

2009 அக்டோபர் 19 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற உள்ளூராட்சி வாரக் கண்காட்சிக்காக ஏற்கனவே இசைக் கருவிகளை கண்காட்சிக்கு வைப்பதற்காக அனுப்பிவிட்டு தான் நேரில் சென்று விளக்கம் அளிக்க வேண்டுமென்று கூறி, யாழ்ப்பாணம் சென்ற எங்கள் அப்பா வீடு திரும்பியபோது சுகவீனமுற்றவராகக் காணப்பட்டார். அதுதான் அவரது இயலாமையின் ஆரம்பம்.

அன்று தொடக்கம் அவர் இறைபதம் அடைந்த 04.02.2011 வரை அவருடனேயே அவர் அருகிலேயே இருந்து பணிவிடை செய்யும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது பெரும் பாக்கியம் எனலாம். எங்கள் அப்பாவுக்கு ஏழு பிள்ளைகள். அதில் நான்கு பெண்கள். மூன்று ஆண்கள். அம்மாவை நாங்கள் சிறுவயதிலேயே இழந்து விட்டோம். எங்களுக்கு அம்மாவும் அப்பாவுமாக இருந்தவர் எங்கள் அப்பா. மறுமணம் முடிக்காமலும், சோர்ந்து துவண்டு விடாமலும் எங்களையெல்லாம் வளர்த்து ஆளாக்கியவர் அவர். எவரது உதவிகளுமின்றி தன்னந்தனியாக நின்று சாதனை படைத்த வீரர்.

2009 அக்டோபர் 19 ஆம் திகதி யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று சுகமடைந்து வீடு வந்து சேர்ந்த பின் என்னை தன்னருகிலேயே வைத்துக் கொண்டார். ஏழு பிள்ளைகள் இருந்தபோதும் அவருக்கு என்மீது அதீத நம்பிக்கை. பிறந்ததிலிருந்து இன்றுவரை அவருடனேயே எனது வாழ்க்கையும் பின்னிப்பிணைந்து விட்டது. என்னை வெளியில் விட மாட்டார். இதனால் நான் பல தொழில் வாய்ப்புக்களை இழந்திருக்கின்றேன். வருமானங்களை இழந்திருக்கின்றேன். கடைசிவரை என்னை தனக்குதவியாக வைத்திருக்கும் அவரது எண்ணத்தை அவர் நிறைவேற்றி விட்டார்.

13 வயதிலிருந்து அவருடன் இணைந்து தொழில் செய்யப் புறப்பட்டேன். பெண் பிள்ளைகளின் திருமணம், வீடுகட்டுதல், காணி வாங்குதல் போன்ற பல்வேறு

பணிகளிலெல்லாம் அவரது வலது கையாக நான் இருந்தேன். எதற்கும் சின்னநாதனைத்தான் அழைப்பார். இயலாமை நேரத்திலும் 'சின்னநாதன்' 'தம்பி' என்று அடிக்கடி அழைத்துக் கொண்டே இருப்பார். தமது தேவைகளையெல்லாம் இடைவெளியின்றி கூறிக் கொண்டேயிருப்பார். நானும் சளைக்காமல் செய்வேன். ஏதாவது தாமதமானால் ஏச்சும், பேச்சும் தாராளமாக நடக்கும். ஆனால் அதை நான் பொருட்படுத்துவதேயில்லை. முதியவர்களும், குழந்தைகளும் ஒன்று என்று சொல்வார்கள். அந்த உண்மையை நான் அப்பாவிடம் கண்டேன்.

இறுதி 10 தினங்கள் தவிர அந்த 18 மாதங்களும் ஏதாவது சொல்லிக்கொண்டே தான் இருந்தார். எந்தவிதமான தவறுதலான சொற்பிரயோகங்களும் அவரது வாயிலிருந்து வந்ததில்லை.

தான் செய்த பணிகள் பற்றிச் சொல்லுவார். தனது இனத்தவர்கள் பற்றிச் சொல்லுவார். ஊர்ப் பிரமுகர்களைப் பற்றிச் சொல்வார். பிள்ளைகளைப் பற்றி சொல்லுவார். எல்லாமே நல்ல மாதிரித்தான் சொல்லுவார். பிறந்து வாழ்ந்து இறப்பது மட்டும் மனிதனின் செயற்பாடு என்று இருக்கக்கூடாது. ஏதாவது சமூகப் பணி செய்யவேண்டும் என்று சொல்லுவார். பிறருக்காகவும் வாழவேண்டும் என்று சொல்லுவார்.

ஆனால் அவரது உள் மனதில் ஒரேயொரு கவலை மட்டும் ஆழப் பதிந்திருந்ததை அவதானிக்க முடிந்தது. தன சொந்த ஊரான மாவிட்டபுரம் போகவேண்டும். அங்கு வசிக்கவேண்டும். மாவை முருகனைத் தரிசிக்க வேண்டும் என்று அடிக்கடி மிகுந்த ஆதங்கத்துடன் இருப்பார். மாவிட்டபுரத்தில் மீளக்குடியமர அனுமதிக்கவில்லையே என்று கவலைப்படுவார். அங்கு போய்த்தான் தனக்கு இறுதி நிகழ்வு நடைபெறும் என்று கூறுவார். அதற்கு மட்டும் அவருக்கு கொடுத்து வைக்கவில்லை.

வேறு எந்தவிதமான குறையும் அவருக்கு இருக்கவில்லை. முருகனை நினைந்து தோத்திரப் பாடல்கள், கந்தசஷ்டி கவசம் என்பவற்றை அடிக்கடி பாடி மகிழ்வார். தனக்கு இயலாது விட்டால் என்னைப் பாடச் சொல்லுவார். எனது மனைவி (ரேணுகா)யைப் பாடச் சொல்லுவார். எனது பிள்ளைகளைப் (ரஜீவன், சஜீதா) பாடச் சொல்லுவார். நாங்கள் பாடினால் சந்தோசம் அடைவார்.

இந்த 18 மாதங்களில் ஐந்து தடவைகள் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சைகள் அளிக்கப்பட்டன. வீட்டில் வந்து வைத்தியர்கள் நேரில் பார்த்து சிகிச்சை அளித்தார்கள். ஆனால் அவருக்குரிய நேரம் வந்துவிட்டது போலும். 90 வயதில் அவர் எல்லாமே ஆண்டு, அநுபவித்து சிறப்பாக வாழ்ந்து, பேரானந்தப் பெருவாழ்வு காணப் புறப்பட்டுவிட்டார். அவரது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதுடன், அவரை அப்பாவாகப் பெற்றமை எமது பெரும்பேறு என்ற உண்மையை இத்தருணத்தில் வலியுறுத்தி அமைகின்றேன்.

சாந்தி!

அன்பு மகன்
ஞா. இராநாதன்

# அன்னாரின் பன்முக ஆளுகையும் அதன் பலாபலன்களும்

**கலை**

கலைவடிவங்களின் தாய் நாடாம் இந்தியாவிலிருந்து மாருதப்புரவீகவல்லியால் அழைத்துவரப்பட்ட கலைக் குடும்பத்தின் வழிவந்த அன்னார் கலை வளர்ச்சிக்கு ஆற் றிய பணிகள் அளப்பரியன. ஓர் நாதஸ்வரக் கலைஞனாக மட்டும் அவர் இருந்து விட வில்லை. ஓர் சமூக சிந்தனையுள்ள மானிட னாக அவர் மாற்றம் பெற்றார்.

அன்றைய நாள்களில் இந்த நாதஸ்வர தவில் கலைஞர்கள் சிற்சில கிராமங்களில் குடும்பம் குடும்பமாக தங்கியிருந்து அச்சுற் றாடலில் இசைச் சேவை செய்து வந்தனர். அவர்களையெல்லாம் ஒன்றிணைத்து ஓர் சமூகமாக உருவாக்கி அவர்கள் மத்தியில் சமூக சிந்தனையை உருவாக்கப் பெரிதும் பாடுபட்டார்.

இக்கலைஞர்களுக்கு ஒவ்வொரு ஊரிலும் ஒவ்வொரு பெயர்கள் வழங்கப்பட்டு சில பெயர்கள் கௌரவமானதாகவும், சிலபெயர் கள் அதற்கு அப்பாலும் வழக்கிலிருந்த சம யத்தில் இவர்கள் இசையாளர்கள் என்பதை அடித்துச் சொல்லி இசையாளர் சமூகம் உரு வாக அடித்தளமிட்டு அவர்களையும் ஏனைய சமூகங்களின் மத்தியில் மதிப்பார்ந்த ஓர் சமூகமாக மிளிர வைத்தவர் அன்னார் என் றால் மிகையாகாது. சிறிது காலத்தின் பின்பு இசையாளர் என்பதை இசைவேளாளர் என்று பிரகடனம் செய்து மேலும் மதிப்பார்ந்த நிலைக்குக் கொண்டு வந்தார்.

பின்னர் இந்த சமூகத்திற்கு ஓர் அமைப் புத் தேவை என உணர்ந்து 1954ஆம் ஆண்டு ஏனைய மூத்த கலைஞர்களின் உதவியுடன் இலங்கை இசைவேளாளர் சங்கத்தை ஆரம் பித்தார். சங்கத்தின் மூலம் அவர் சாதித்த வற்றை பட்டியலிட்டால் இந்தத் தொடர் நீண்டு விடும் என்பதால் சிலவற்றை எடுத்துக் கொள்வோம்.

இந்தியக் கலைஞர்கள் வருகையால் இங்கு கலை வளர்ச்சி பெறவும், எமது சிறார் கள் கலை பயிலவும் வாய்ப்பு ஏற்படும் எனக் கருதி இந்தியக் கலைஞர்கள் வரவழைக்கப் பட்டனர். ஆனால் எமது சமூகத்தில் இது தொடர்பாகக் கருத்து முரண்பாடுகள் உருவாகின. இதனால் சங்கத்தில் பொறுப்பு வாய்ந்த பதவியிலிருந்த அன்னாருக்குப் பல சோதனைகள், வேதனைகள்

ஏற்பட்டன. இருந்தபோதும் எல்லாவற்றையும் தகர்த்தெறிந்து தாம் நினைத்ததைச் சாதித்து பெருமை தேடினார்.

நாதசுர - தவில் கலைகளைப் போதிப்பதற்காக ஓர் பயிற்சிக் கல்லூரி அமைய வேண்டுமென்பதில் மிகவும் சிரத்தை எடுத்தார். மாவிட்டபுரம் இசையாளர் மடத்திலும் இணுவில் மஞ்சத்தடியிலும் தெல்லிப்பளை துர்க்காதேவி ஆலயத்திலும் சிறிது காலம் இயங்கிய நாதசுர - தவில் பயிற்சி பாடசாலைக்கு அடித்தளமிட்டவர் அன்னார். பல்வேறு காரணிகளால் இவை தொடர்ந்து இயங்கா விட்டாலும் இங்கு பயின்ற மாணவர்கள் இன்று முன்னணிக் கலைஞர்களாக உரு வெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

கடைசி மூச்சுவரை சங்கத்திற்கென நிரந்தரக் கட்டடம், இசைப் பாடசாலை என்பன அமைய வேண்டுமென அயராது பாடுபட்டார்.

சங்கானை நிற்சாமம் பகுதியில் ஒரு பகுதி மக்கள் தங்கள் ஆலயத்தில் இசை நிகழ்வுகள் நிகழ்த்தப்படவேண்டும் என இசைவேளாளர்களை பயமுறுத்தியும், அச் சுறுத்தியும் வந்த நேரத்தில் சங்கம் மூலமாக அவ்விடயத்தை அணுக வேண்டிவந்தது. அமரர் N. R. சின்னராஜாவுடன் இணைந்து அவ்விடயத்தை மிகவும் சிறப்பாக அணுகி யாழ்ப்பாணத்திலுள்ள எல்லாக் கலைஞர் களையும் அழைத்துச் சென்று கச்சேரி செய்து அனைவரதும் பாராட்டைப் பெற்றார்.

இசைவேளாளர்களின் பெருமைகளை, வரலாறுகளை, சிறப்புக்களை வெளிக் கொணர்வதற்காக 'இசையாளன்' என்ற பத்தி ரிகையை ஆரம்பித்தார். அப்பத்திரிகை மூலம் பல்வேறுபட்ட விடயங்களை மக்கள் முன் வைத்தார். அப்பத்திரிகைக்கு நல்ல வர வேற்புக் கிடைத்தபோதும் பொருளாதார வசதி குன்றியதால் தொடர்ந்து வெளிவராமல் தடைப்பட்டது.

தனது வாழ்நாளில் இசைவேளாளர் சமூகத்தின் கலை, சமூக, பொருளாதார அபிவிருத்திக்காகப் பெரிதும் பாடுபட்ட போதும் சமூகத்தில் ஏற்பட்ட ஒற்றுமை யின்மை, ஒத்துழையாமை காரணமாக அவரது பல திட்டங்கள் நிறைவேறாமலே போய்விட்டன. இறுதிக் காலம்வரை தனது சமூகத்தின் சிந்தனையுடனேயே வாழ்ந்து இன்று மறைந்து விட்டார்.

## அரசியல்

அன்னாரின் அரசியல் வாழ்வு பற்றிக் குறிப்பிடாமல் இருக்கமுடியாது. கொண்ட கொள்கைக்காக இறுதிவரை போராடிய ஓர் உத்தமர். இலங்கை தமிழரசுக் கட்சியின் ஆரம்ப கால உறுப்பினர். இக்கட்சியின் காங் கேசந்துறைக் கிளையின் செயற்குழு உறுப் பினர். தந்தை செல்வநாயகத்தால் **'ஞான சுந்தரம்'** என அன்பாக அழைக்கப்பட்ட பெருமைக்குரியவர்.

அன்றைய கால கட்டங்களில் தமிழரசுக் கட்சிக் கூட்டங்கள், சத்தியாக்கிரகங்கள், கறுப்புக் கொடிப் போராட்டங்கள் யாவற்றி லும் முன்னின்று உழைத்தவர். பத்திரிகைத் துறை மூலம் தமிழரசுக் கட்சிக்குப் பிரசாரப் பணி செய்தவர். ஒரு தடவை விமானத்தில் பலாலி வந்திறங்கிய அமைச்சர் ஒருவருக்கு தமிழரசுக் கட்சியினர் கறுப்புக் கொடி காட்டி ஆர்ப்பாட்டம் செய்ய திட்டமிட்டிருந்தனர்.

ஆனால் அமைச்சர்களின் வரவேற்புக்கு நாதஸ்வரம் வாசிக்க அன்னாரின் நாதஸ்வரக் குழுவே வழமையாக நியமிக்கப்பட்டிருந்தது. வரவேற்புக்கு நாதஸ்வரம் வாசிதத அன்னார் சட்டைப் பையிலிருந்த கறுப்புக் கொடியை வெளியே எடுத்து ஆர்ப்பாட்டக்காரர்களுடன் இணைந்து கொண்டார் என்றால் அவரது கொள்கைப்பற்றும், துணிச்சலும் எவருக் குமே வராது என்றே சொல்லலாம்.

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலில் ஆலயப் பிரவேச பிரச்சினை நடைபெற்றுக் கொண்டி ருந்த கால கட்டத்தில் தேர்தல் ஒன்று வந்தது. அப்போது தமிழரசுக் கட்சியினர் மாவிட்டபுரத்தில் காலடி எடுத்து வைக்க முடியாத நிலை. ஆனால் அன்னார் தந்தை செல்வாவின் பிரசாரக் கூட்டமொன்றை ஏற்பாடு செய்தார். கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது நாலாபக்கமும் இருந்து கற்கள் வீசப்பட்டன. ஆனால் அன்னர் துணிந்து நின்றார். கூட்டத்தை இறுதிவரை நடத்தி முடித்தார்.

தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலைகளின்போது அங்கு பிரசன்னமாகி இருந்த அன்னார் மயிரிழையில் உயிர் தப்பி பிறந்த மேனியுடன் தப்பியோடி ஐயர் ஒருவரிடம் வாங்கிய வேட்டியுடன் வீடு திரும்பிய அந்த நாள்களெல்லாம் மறக்கவே முடியாதவை.

## சமயம்

நாதஸ்வரக் கலைஞனாக ஆலய இசைச் சேவை செய்த அன்னார். அத்துடன் மட்டும் நின்று விடவில்லை. ஓய்வு நேரங்களில் ஆலய நிர்வாகத்தினருடன் இருந்து அளவளா வும் சமயங்களில் ஆலயத்தில் செய்யப்பட வேண்டிய வேலைகள் பற்றி பிரஸ்தாபிப்பார். அதற்கான நிதியைப் பெறுவது பற்றியும் அதற்கு தான் ஏற்பாடு செய்து தருவதாகவும் சொல்லுவார். யாழ் குடாநாட்டிலுள்ள பல ஆலயங்களில் இடம்பெற்ற அபிவிருத்திப் பணிகளுக்கு இவரது ஆலோசனைகளும் வழிகாட்டல்களும் இருந்தன என்று சொன் னால் மிகையாகாது.

பிரசித்தி வாய்ந்த மாவை முருகன் கோவில் திருப்பணிச் சபையிலும் செயற்குழு உறுப்பினராகச் செயற்பட்டார். ஆலய வளர்ச் சிக்குப் பெருமளவு நிதியைச் சேகரித்துக் கொடுத்ததுடன் வேலைகளையும் சிறப்பாகச் செய்து முடிக்க முன்னின்று உழைத்தார்.

பளைகூத்தியவத்தை சனசமூக நிலை யம், கூத்தியவத்தை கிராம அபிவிருத்திச் சங்கம் ஆகியவற்றின் மூலம் நாயன்மார் களின் குருபூசைகள், முக்கிய சமய வைப வங்கள் போன்றவற்றை நடத்தினார். சிறுவர் களுக்கான சமய வகுப்புக்களையும் ஏற்பாடு செய்து அவர்களுக்கு சமய அறிவு வளர உதவினார்.

## கிராம அபிவிருத்தி

தான் பிறந்த கிராமத்திற்கு ஏதாவது செய்யவேண்டுமென அடிக்கடி கூறுவார். சமூகசேவை என்பது தவிர்க்கமுடியாதது என்பார். மக்கள் சேவையே மகேசன் சேவை என்றே வாழ்ந்தார். பளை வீமன்காமம் கிராம முன்னேற்றச் சங்கம். பளை கூத்தியத்தை சனசமூக நிலையம், மாவை கொல்லங் கலட்டி கிராம அபிவிருத்திச் சங்கம் உட்பட மற்றும் பல பொது அமைப்புகளிலும் முக்கிய பதவிகளில் அங்கம் வகித்தார். பளை வீமன் காமத்தில் நெசவுசாலை ஒன்றை உருவாக்கி எத்தனையோ இளம்பெண்களின் வாழ்வா தாரத்தை உயர்த்தப் பாடுபட்டார். இப்பகுதி மக்களின் நலன்கருதி பிரேதவண்டில் ஒன்றையும் பெற்றுக் கொடுத்தார். கிராம அபிவிருத்திச் சங்கம் மூலம் பல வீதிகளைப் புனரமைத்தும் புதிதாக அமைத்தும் மக்கள் போக்குவரத்திற்கு உதவினார்.

மாவை கொல்லங்கலட்டி கிராம அபிவிருத்திச் சங்கத்தில் பணிபுரிந்த காலத்தில் கொல்லங்கலட்டியில் பலநோக்கு மண்டபம் ஒன்று அமையப் பெரிதும் உதவினார். அம் மண்டப திறப்பு விழாவில் யாழ். அரச அதிப ரால் 'சமூகதொண்டன்' என்ற கௌரவப் பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டார். கீரிமலை சிவன் கோவில் வாயிற்புறத்தில் யாத்திரிகர்களின்

பாவனைக்காக கிணறு ஒன்றை அமைப்பதிலும் கீரிமலை கடற் கரையில் அமைந்துள்ள சுவாமி இளைப் பாற்று மண்டபம் அமைப்பதிலும் முன்னின்று உழைத்தார்.

### கூட்டுறவு

கூட்டுறவுத் துறையிலும் அன்னாரின் ஈடுபாடு பிரகாசித்தது என்றே கூறலாம். அமைப்பு ரீதியாக கூட்டுறவுச் சங்கங்கள் உருவான காலத்திற்கு முன்பு கிராமத்தி லுள்ள பெரியோர்களை இணைத்து வெங் காயச் சங்கம், விவசாய உற்பத்திச் சங்கம் போன்றவற்றை கிராம மட்டத்தில் ஆரம்பித்து செயற்படுத்தினார். வெங்காயம், விவசாய உற்பத்திகளை விவசாயிகளிடமிருந்து கொள்வனவு செய்து ஏனைய பகுதிகளுக்கு அனுப்பி விவசாய உற்பத்திகளின் அபிவிருத்திக்கும் சந்தைப்படுத்தலுக்கும் உதவினார்.

இந்தக் கூட்டுறவு அமைப்புகள் காலப் போக்கில் அமைப்பு ரீதியாக மாற்றம் பெற்ற போது தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டு றவுச்சங்கம் உருவானது. தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளைக் குழுக்களில் அங்கத்துவம் பெற்று சங்கத்தின் வளர்ச்சிக்குப் பாடுபட்டார். 25 வருடங்கள் கூட்டுறவுச் சேவையில் தொடர்ந்து பணியாற்றி சேவையாற்றியமைக்காக மேற்படி சங்கத் தின் பாராட்டு விழாவில் 'சிறந்த கூட்டுற வாளர்' என்ற விருது வழங்கி கௌரவிக்கப் பட்டார்.

### வைத்தியம்

பொது மக்களின் வைத்திய சேவைக் காக தன்னைப் பெருமளவில் ஈடுபடுத்திக் கொண்டார். தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கம், தெல் லிப்பழை அரசினர் வைத்தியசாலை மன நோயாளர் நலன்புரிச் சங்கம், மயிலிட்டி காசநோய் வைத்தியசாலை காசநோய்த் தடுப்புச் சங்கம் போன்றவற்றில் அங்கம் வகித்தார்.

தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலையில் பல்வேறு பணிகள் முன்னெடுக்கப் பட்டபோதெல்லாம் அவற்றிற்காக அயராது உழைத்தார். மனநோயாளர்களுக்காக மாதாந்தம் இசை நிகழ்வுகளை ஏற்பாடு செய்து நடத்தினார். மயிலிட்டி காசநோய் வைத்தியசாலை நோயாளர்களுக்கு சத்து ணவுகள், படுக்கை விரிப்புகள் மற்றும் அவர்கள் நலன்பேண பல்வேறு ஏற்பாடு களைச் செய்தார். காசநோய் கொடிதினம் நடத்தி நிதிசேகரித்து நோயாளர்களுக்கு வேண்டிய உதவிகளை வழங்கி உதவினார்.

### சுகாதாரம்

பொது மக்களின் அடிப்படைச் சுகாதார வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கப் பெரிதும் உதவினார். மலசலகூடங்கள் இல்லாத அந் தக் காலங்களில் சுகாதாரத்திற்கு பங்கம் ஏற்படுவதை பொது மக்களுக்கு எடுத்துக் கூறி அரச அதிகாரிகளின் உதவிகளைப் பெற்று இலவச மலகூடங்கள் அமைக்க உதவினார். கிராமத்தின் பொதுச் சுகாதாரத் தைப் பேண சுகாதாரப் பகுதியினருடன் இணைந்து பல திட்டங்களை செயற்படுத்தினார்.

மாவை முருகன் உற்சவ காலத்தில் பல பாகங்களிலும் இருந்து கூடும் பெருந்திர ளான பக்தர்களின் சுகாதார நலன் பேண வழிவகைகள் செய்தார். ஆலய சுற்றாடலில் தற்காலிக மலசலகூடங்கள் அமைத்து பக்தர் களின் நலன் காக்க உதவினார். ஆலய சுற் றாடலில் சுகாதாரத்தைப் பேண பல்வேறு ஏற்பாடுகளைச் செய்தார்.

அன்னாரின் பணிகள் அளவிடமுடியா தவை. இன்னும் இன்னும் எழுதிக் கொண்டே போகலாம். ஆனால் இப்பந்தியில் தொட் டுக்காட்டிய விடயங்கள் அவரை ஓரளவு உங்களுக்கு அடையாளம் காட்டியிருக்கும் என நினைக்கிறேன். அன்னாரைப் பற்றி ஓர் முழுமையான ஆய்வு இடம்பெறுமாயிருந் தால் அது பயனுள்ளதாக அமையும் என்பதையும் சுட்டிக்காட்டி அமைகின்றேன்.

# ஊடகத் துறையில் சில நிமிடங்கள்

1966 ஆம் ஆண்டு "ஈழநாடு" பத்திரிகையில் செய்தியாளராக இணைந்து ஊடகத் துறையில் காலடி வைத்த எஸ். ஆர். ஞானசுந்தரம் அத்துறையில் தடம் பதித்துச் சென்றுள்ளார்.

பத்திரிகைக் துறையில் பிரபல்யம் பெற்று விளங்கிய கே. பி. ஹரன், எஸ். எம். கோபாலரத்தினம், ம. வ. கானமயில்நாதன், என். வித்தியாதரன், எஸ். பெருமாள், எஸ். டி. சிவ நாயகம், கே. கே. இரத்தினசிங்கம், எஸ். சிவப்பிரகாசம் போன்றோருடன் உறவுகளைப் பேணி பத்திரிகைத் துறையின் நுணுக்கங்களை கற்றறிந்து தனக்கென இடத்தை பிடித்துக் கொண்டார்.

ஊடகத் துறையில் பெயர் குறிப்பிடத்தக்க செய்தியாளராக மிளிர்ந்தார். ஊடகத்துறை என்றால் என்ன? செய்தி என்றால் என்ன? என்பதை கண்டறிந்து மக்களுக்கு வழங்கி சமூகத்தில் முக்கிய இடத்தை பிடித்துக் கொண்டார்.

ஊடகத்துறையில் அவர் சாதித்தவை பல. எதிர்கொண்ட அச்சுறுத்தல்கள் பல. எதற்கும் கிறுங்காமல் பணியாற்றி எமக்கும் அத்துறையை வழிகாட்டிச் சென்றுள்ளார்.

அவர் எதிர்கொண்ட சவால்கள் அதன் மூலம் நாம் பெற்ற அநுபவங்களை பகிர்ந்து கொள்வதில் பெருமையடைகிறோம்.

மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலய ஆலயப்பிரவேசப் பிரச்சினை எழுந்த காலம் பரபரப்பான சூழல். அந்தச் சூழலில் பல்வேறு அச்சுறுத்தலை எதிர்கொண்டு தனது செய்தித்துறைக்கு பங்களிப்புச் செய்தார்.

ஆலயத்தின் சார்பாக அடங்காத் தமிழன் ஸி. சுந்தரலிங்கம் நின்றார். எதிர்த்தரப்பில் எஸ். ரி. என். நாகரத்தினம் நின்றார். பொலிஸ்தரப்பில் யாழ். மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் இரா. சுந்தரலிங்கம் நின்றார். முத்தரப்பும் இவரை தமக்குச் சாதகமாக செயற்படுமாறு வற்புறுத்தினர். ஆனாலும் அவர் எந்தப் பக்கமும் சாராமல் நடுநிலைமையாக நின்று செய்திகளை தான் சார்ந்த ஈழநாடு, தினபதி பத்திரிகைகளுக்கு அனுப்புவார்.

அந்த செய்திகள் வெளிவந்தவுடன் பூரித்துப் போவார். ஆனால் மறுதரப்பில் ஏதாவது ஒரு தரப்பு இவர் மீது பாயும். அதை எல்லாம் சிரித்த முகத்துடன் சமாளித்து விடுவார்.

ஆலயப் பிரவேச விவகாரம் உச்சக்கட்டத்தை அடைந்தபோது, அங்கு பணியில் இருந்த பொலிஸார் கண்ணிப் புகைக்குண்டுகளை ஏவினர். அதில் சிக்கி ஓடி வீழ்ந்ததில் காயமும் அடைந்தார்.

அந்த நேரத்தில் "பொய்யான தகவலை வெளியிட்டு குழப்பம் ஏற்படுத்துகிறீர். உம்மை கைது செய்தால் தான் சரி என்று பொலீஸ் அத்தியட்சகர் சுந்தரலிங்கம் அவரிடம் கூறினார். "சட்டத்துக்கு முரணாக எந்தச் செய்தியையும் வெளியிடவில்லை. கைது செய்தால் சட்டத்தின் உதவியுடன் வெளியில் வருவேன்" என்று அவருக்கு பதில் அளித்தார்.

ஆலயப் பிரவேச விடயம் எல்லாம் முடிந்த பின் அடக்காத் தமிழன் ஸி. சுந்தரலிங்கமும் பொலீஸ் அத்தியட்சகர் இரா. சுந்தரலிங்கமும் அவரை அழைத்து பாராட்டியது இன்றும் எம் கண்முன்னே நிற்கிறது. அவரது நடுநிலையான செய்திச் சேவைக்கு கிடைத்த பாராட்டாகவே இதைக் கருதுகிறோம்.

வளவாயில் ஓர் இளைஞனைக் கடத்தி ஒரு பெண்ணுக்குத் திருமணம் செய்ய முயற்சித்ததாக மல்லாகம் நீதி மன்றத்தில் சுவராஸ்யமான வழக்கு நடந்து கொண்டிருந்தது. அதில் பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவர் எதிரி. அந்த வழக்கின் முழு விசாரணையையும் எடுத்து அச்சொட்டாக செய்தியாக எழுதி வந்தார். அந்த பொலீஸ் கான்ஸ்டபிளின் உறவினர்கள் அப்பாவுக்கு கொலை அச்சுறுத்தல் விடுத்தனர். அதை நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டு வந்தார். நீதிமன்றம் அந்தக் கான்ஸ் டபிளை கடுமையாக எச்சரித்தது. இது போன்ற பல்வேறு வழக்குத் தொடர்பான செய்திகளுக்கு கொலைமிரட்டல் வந்தது. ஆனால் கண்டு அதைக் கிறுங்காது நிறுத்காது தனது பணியை முன்னெடுத்தார்.

வங்காளதேசம் விடுதலை பெற்றபோது காங்கேசன்துறை பட்டினசபை மண்டபத்தில் எழுச்சிக் கூட்டம் ஒன்று நடைபெற்றது. அதில் தமிழரசுக் கட்சியின் செயலாளர் நாயகம் அ. அமிர்தலிங்கம் உரையாற்றினார்.

"சர்வதேச சூழல் சாதகமாக இருந்ததால், சர்வதேச உதவியைப் பெற்று வங்காளதேசம் சுதந்திர நாடாகியது. அதேபோல் சர்வதேச சூழல் சாதகமாக இருக்கும்போது சர்வதேச உதவியுடன் எமக்கொரு நாட்டை உருவாக்குவோம் " என்று அமிர் அங்கு பேசினார்.

அதைச் செய்தியாக்கி தினபதிக்கு அனுப்பினார். மறுநாள் தினபதியில் "சர்வதேச உதவி பெற்று எமக்கொரு நாடு அமைப்போம் அமிர் சூளுரை" என்ற தலைப்பில் செய்தி வெளிவந்தது.

மறுநாள் காலை எமது வீட்டுக்கு முன்னால் பொலீஸ் ஜீப் நின்றது "உடன் வாருங்கள் யாழ்ப்பாணப் பொலிஸார் உங்களை அழைக்கிறார்கள்" என்றனர் பொலிஸார். அப்பா யாழ்ப்பாணம் போய்விட்டார் எனக் கூற "நீர் ஏறும் ஜீப்பில்" என்றனர்.

என்ன செய்வது என்று தெரியாது ஏறினேன் ஜீப்பில். ஈழநாடு அலுவலகத்தில் அப்பா நின்றார். அவரையும் என்னையும் கூட்டிச் சென்று கோட்டையில் உயர் பொலிஸ் அதிகாரிகள் முன் நிறுத்தினர்.

அப்போதைய பொலிஸ்மா அதிபர் சேமபால ஆட்டிக்கல உட்பட உயர் பொலிஸ் அதிகாரிகள் அங்கு பிரசன்னமாகியிருந்தனர்.

அப்போது வடபிராந்திய பொலீஸ் அத்தியட்சகராக இருந்த இ. சுந்தரலிங்கம் அப்பாவிடம் விசாரித்தார். விவரங்களை தெரிவித்தார். ஒரு வாக்குமூலம் கொடுத்துவிட்டு செல்லுங்கள் என அவர் தெரிவித்தார்.

இந்தப் பரபரப்புக்குக் காரணம் என்ன என்பது பின்னர்தான் தெரிய வந்தது.

தினபதியின் சகோதரப் பத்திரிகையான "சண்" வெளியிட்ட செய்தியில் "சர்வதேச உதவி" என்ற சொல்லுக்குப் பதிலாக "வெளிநாட்டு உதவி" என வெளிவந்து விட்டது. வெளிநாட்டு உதவி என்றல் ஆயுத உதவி என்று திரிபுபடுத்தி அப்போது ஆட்சியில் இருந்த ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க விசாரணைக்கு உத்தரவு இட்டதன் விளைவே நாம் உயர் பொலீஸ் அதிகாரிகள் முன் நிறுத்தப்பட்டமைக்குக் காரணம் எனத் தெரியவந்தது.

இந்திய அமைதிப்படை இலங்கையில் இருந்து வெளியேறியது. முதலில் மாவிட்டபுரத்தில் இருந்துதான். அங்குதான் முதலில் புலிக்கொடி ஏற்றப்பட்டது. அந்தச் செய்தியை எழுதுமாறு அப்போதைய பொறுப்பாளர் கேட்டார். உடன் செய்தி எழுதி மறுநாள் பத்திரிகையில் செய்தி வெளிவந்தது.

இப்படி இப்படி பல செய்திகளுக்காக சிக்கல்களை அவர் எதிர்கொண்டபோதும், எந்த வித பரபரப்பு இன்றியும் தனது பணியைத் தொடர்ந்து எமக்கு பல்வேறு ஆலோசனைகளை தெரிவித்து வழிகாட்டியாக இருந்தார்.

அப்பா காட்டிய வழிகாட்டல்களே இன்று என்னை ஊடகவியலாளராக நிலை நிறுத்தியுள்ளது.

**ஞா. குகநாதன்**
**அன்பு மூத்தமகன்**

**ஏற்றுக்கொள்ள முடியாத கருத்தாக இருந்தால் ஏங்கி எதிர்வாதம் செய்யாதீர்கள்.**

## பெரியப்பா எங்களின் முகவரி

ஈழத் தமிழரின் பண்பாட்டுக் கலாசாரத் தலைநகரம் எனப் போற்றப்படுவது யாழ்ப் பாணம். இங்குள்ள ஒவ்வொரு ஊரும் பல தனிச் சிறப்புக்களைப் பெற்று விளங்குகின்றது. இந்த வகையில் மாவிட்டபுரத்தின் பெருமைக்கு அடிப்படையாகப் பல விடயங்களைக் குறிப்பிடலாம்.

இவற்றுள் முதன்மையானதாகக் குறிப்பிடக்கூடியது மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயமாகும். புராதன வரலாற்றுச் சிறப்பு மிக்க இவ்வாலயம் மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றும் ஒருங்கே பெற்ற புண்ணிய தலமாகும். மாவிட்டபுரத்தில் கைத்தொழிலும், கமத்தொழிலும், கலைத் தொழிலும் பண்டுதொட்டே தழைத்தோங்கிக் காணப்படுகின்றது. இத்துடன் கற்றறிந்த சான்றோர்கள், கவிஞர்கள், கலைஞர்கள், வேதவிற்பன்னர்கள், அரசியல்வாதிகள், எழுத் தாளர்கள், உயர் தொழில் புரிவோர் எனத் தகை சார்ந்த சான்றோர்களால் செல்வச் செழிப்பு டனும், தெய்வீக வனப்புடனும் சிறந்து விளங்கும் எம்மூரின் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய பெருமைக்குரியவர்களில் எங்கள் பெரியப்பா எஸ்.ஆர். ஞானசுந்தரம் முதன்மையானவர்.

மாவை ஆதீனத்திற்கு உரித்துடைய பெருமைமிக்க கலைக்குடும்பமொன்றில் இராமநாதன் - நாகம்மாள் தம்பதிகளின் மூத்த மகனாகப் பிறந்தவர் எங்கள் பெரியப்பா. இவரின் இளமைக்காலம் சவால்கள் மிக்க கரடுமுரடானதாகவே அமைந்திருந்தது. ஆயினும் கடவுள் பக்தியும் விடாமுயற்சியும், துன்பங்களைக் கண்டு துவண்டு விடாத மன உறுதியும் நிறைந்த எங்கள் பெரியப்பாவின் தொடரான எதிர்நீச்சலால் தானும் உயர்ந்து எங்கள் உயர்விற்காகவும் வழி ஏற்படுத்த முடிந்தது.

அக்காலச் சூழ்நிலையில் அவர் உயர் கல்வியினைப் பெறுவது கடினமானதாக அமைந்தி ருந்தது. இதனால் சிறு வயதிலேயே இசைத்துறையில் பயிற்சி பெற்று தனது பதின்நான்காம் வயது முதல் நாதஸ்வரக் கலையில் ஈடுபடத் தொடங்கினார்.

எந்த வேலையாயினும் முழு ஈடுபாட்டுடனும் ஆத்மார்த்தமான திருப்தியுடனும் செய்யும் பண்பு எங்கள் பெரியப்பாவிற்கு இருந்தது. இதனால் சிறுவயதிலேயே அவர் நாதஸ்வரத் துறையில் தனக்கென ஓரிடத்தைத் தக்கவைக்க முடிந்தது. ஆயினும் அவருக்கு எழுத்

துத்துறையின் மீதிருந்த ஈடுபாடும், சமூகத்தின்மீது கொண்டிருந்த பற்றும் அவரை மேலும் பல பரிமாணங்களில் மிளிர வைத்தன. இதன் விளைவாக அவர் பத்திரிகை நிருபராக, பத்திரிகை ஆசிரியராக, எழுத்தாளனாக, இசை ஆசிரியராக, அரசியல்வாதியாக, சமூக சேவையாளனாக பல்வேறு பாதைகளில் வெற்றிநடை போட முடிந்தது.

எங்கள் பெரியப்பாவிற்குப் பரம்பரைச் சொத்து என்று பெரிதாக இருந்ததில்லை. ஆயினும் அவரின் கடின உழைப்பாலும் சிக் கனமான திட்டமிட்ட வாழ்க்கை முறையாலும் மாளிகை போன்ற பெரிய வீட்டைக் கட்டினார். அக்காலத்தில் எங்கள் ஊரில் தனியாள் ஒருவரின் வீட்டிற்கு தொலைபேசி வசதி வழங் கப்பட்டதென்றால் அது எங்கள் பெரியப்பாவின் வீட்டிற்குத் தான். அப்போது எங்கள் வயதை ஒத்தவர்கள் எல்லாம் தொலைபேசிகளை திரைப்படத்திலும் புகைப்படத்திலும் தான் பார்த்திருப்பார்கள். ஆனால் அதனை கையிலெடுத்துக் காதில் வைத்து வாயால் பேசும் வசதியை எமக்கு ஏற்படுத்தித் தந்த வர் எங்கள் பெரியப்பா.

எங்கள் பெரியப்பாவிடமிருந்து நாங்கள் கற்றுக் கொண்ட மிக முக்கிய விடயங்கள் தூய்மை, ஒழுக்கம், நேரம் தவறாமை, யாரையும் புண்படுத்தாமை எனக் கூறிக்கொண்டே போகலாம். எங்கள் பெரியப்பா எப்போதும் வெள்ளை வேட்டி, நஷனல், நீண்ட சால்வை அணிந்திருப்பார்.

அவர் வர்ண ஆடை உடுத்து நாம் பார்த்ததில்லை. அவருடைய காதில் வைரக் கடுக்கண் எப்பொழுதும் ஜெலித்துக் கொண்டு இருக்கும். சட்டைப் பையில் எப்பவும் ஒரு சீப்பு வைத்திருப்பார். அடிக்கடி தலையை வாரிவிடுவார். அவரது முடி குழம்பியிருப்பதையோ முகச்சவரம் செய்யாதிருப்பதையோ நாம் கடைசிவரை காணவில்லை. புறத்தூய்மை சிறந்திருந்தால் அகத்தூய்மை தானே ஏற்படும் என்பதற்கு அவர் ஓர் எடுத் துக்காட்டு.

எங்கள் பெரியப்பா வீடு எப்போதும் விருந்தினரால் நிறைந்திருக்கும். கலை ஞர்கள், எழுத்தாளர்கள், அரசியல்வாதிகள், அரச உத்தியோகத்தர்கள் முதல் அயலவர், நண்பர்கள் என்று பலதரப்பட்டவர்களும் பெரியப்பாவைச் சந்திக்க வருவார்கள். வரும் அனைவருடனும் மிகவும் மரியாதையாகவும் பண்பாகவும் நகைச்சுவையாகவும் பேசும் அவரின் இயல்பு எல்லோருக்கும் மிகவும் பிடிக்கும். அவர் எங்களுடன் கூட நீர், நான், நீங்கள், நாங்கள் என்றுதான் கதைப்பார். ஒருபோதும் சுடுசொற்களைப் பாவிப்பது கிடையாது. வெற்றிலை போடுவதைத் தவிர வேறு எந்த கெட்டபழக்கமும் எங்கள் பெரியப்பாவுக்கு இருந்ததில்லை.

எங்கள் பெரியப்பா பல்கலைக்கழகம் சென்று படிக்கவில்லை. ஆயினும் ஏராளமான பல்கலைக்கழக மாணவர்கள் குறிப்பாக இசைத் துறையில் பயில்பவர்களும், இசை, சமய, சமூகம் போன்ற ஆய்வுகளில் ஈடுபடும் ஆய்வாளர்கள் தமக்குத் தேவையான பல தகவல்களைப் பெற எங்கள் பெரியப்பாவை நாடி வருவதுண்டு. பெரியப்பாவின் அறிவு வளர்ச்சிக்கு அடிப்படையாக அமைந்தது அவரின் வாசிப்புப் பழக்கம். ஓய்வு கிடைக் கும் போதெல்லாம் அவர் வாசிக்கத் தவறு வதில்லை.நாளேடுகளிலிருந்து பண்டைய இலக்கியங்கள் வரை எப்போதும் வாசித்துக் கொண்டே இருப்பார். எங்களையும் எப்பவும் வாசிக்கத் தூண்டுவார்.

எங்கள் பெரியப்பாவிற்கு உள்ளூர்ப் பிர முகர்கள் மட்டுமன்றி தேசிய, சர்வதேச ரீதி யில் பல பிரமுகர்களுடன் தொடர்பிருந்தது. பெரியப்பாவின் வீட்டு விறாந்தையில் மாட் டப்பட்டிருந்த பெரியயளவிலான புகைப் படங்கள் சான்று பகரும்.ஆயிரத்துத் தொள்ளாயிரத்து எழுபதுகளில் இந்தியக் கலை ஞர்களின் வருகையால் உள்ளூர்க் கலைஞர்கள் பாதிப்படைந்தபோது அப்போது பிரதமராக இருந்த ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவை நேரில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தி அப்பிரச்சினைக்கு நல்லதொரு தீர்வைக் கண்டார்.

அதுபோல் கீரிமலையில் இளைப்பாற்று மடம், அந்தியேட்டி மடம் முதலியவற்றை அமைப்பதற்கு மறைந்த ஜனாதிபதி பிரேமதாஸவுடன் பலமுறை தொடர்பு கொண்டு அதில் வெற்றியும் கண்டார். அதேபோல் முன்னாள் தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர். நடிகராக இருந்தபோது யாழ்ப்பாணம் வந்தார். அப்போது அவர் பெரியப்பாவைச் சந்தித்து உரையாடினார். தந்தை செல்வா, முன்னாநாள் எதிர்க்கட்சித் தலைவர் அ. அமிர்தலிங்கம் போன்ற தலைவர்களுடன் அவருக்கிருந்த தொடர்புகளை தெரிவிக்கும் பல புகைப்பட்ங்கள் அங்கு காணப்பட்டன. இதைவிட இசை மேதைகளான இராஜ ரட்ணம் பிள்ளை, காரைக்குடி அருணாசலம பிள்ளை, வலங்கைமான் சண்முகம்பிள்ளை போன்றோர்களுடன் அவர் மிகுந்த ஈடுபாடாயிருந்தார்.

சிலருக்கு பட்டங்களால் பதவிகளால் பெருமை கிடைக்கும். ஆனால் பல பட்டங் களுக்கும் பதவிகளுக்கும பெரியப்பாவால் பெருமை கிடைத்தது. இதனால் அவரைத் தேடி பல பட்டங்களும் பதவிகளும் இறுதி வரை வந்தவண்ணமே இருந்தன. இவ் வுலகில் 90 வயது வரை ஒரு வரலாறாகவே வாழ்ந்து வானுறை தெய்வத்துடன் கலந்து விட்ட எங்கள் பெரியப்பா எங்கள் குடும் பத்தின் மிகப் பெரிய சொத்து. எங்களுக்குக் கிடைத்த கௌரவம். அவர் எங்களை இவ் வுலகிற்கு அறிமுகப்படுத்தும் ஒரு ஒப்பற்ற முகவரியாக என்றும் எம்முடன் வாழ்வார்.

**என்றும் அன்புடன்**
**பெறா மக்கள்**

நெல்லை விதைத்தால் நெல்லை வெட்டுவாய்
புல்லை விதைத்தால் புல்லை வெட்டுவாய்
எள்ளை விதைத்தால் எள்ளை வெட்டுவாய்
கொள்ளை விதைத்தால் கொள்ளை வெட்டுவாய்
நல்லதைச் செய்தால் நன்மை அடைவாய்
தீயதைச் செய்தால் தீமையைப் பெறுவாய்
இது இறைவன் கூற்று யாரும் தப்பமுடியாது.

## உதாரண புருசர்

பாவிட்ட புலவரெல்லாம் பரவித்
 துதிக்கின்ற பார்புகழும்
மாவிட்ட புரமதனில் மனம் மகிழ்
 தம்பதியாம் இராமநாதன் நாகம்மாள்
பூவிட்டுக் கந்தனைப் பூசித்த
 புண்ணியத்தின் நற்பலனாய்
கோவிட்ட குலக்கொழுந்தாய் தலை மகனாய்
 ஞான சுந்தரனார் வந்துதித்தார்!

சீலத்தில் சிறந்தவராய் சிரித்த முகத்தினராய்
 காண்போரைக் கவர்ந்திழுக்கும் கட்டழகு கொண்டவராய்
ஞாலத்தில் சிறந்தகலை நாதஸ்வரம் கற்றுத்தேறி
 கேட்போரை சொக்கவைக்கும் சுரஞானம் மிக்கவராய்
கோலத்தில் தமிழ்மகனாய் கொள்கையிலே உயர்குன்றாய்
 எதிர்ப்பவரைக் கூட எளிதில் வசப்படுத்தும் வல்லமை வாய்த்தவராய்
காலத்தின் தேவைகண்டு கடைமைகளைச் செய்ததனால்
 பூதலத்தோர் போற்றுகின்ற புண்ணியராய் வாழ்ந்தாரே

பாரியார் விதி பாதியிலே முடிந்தபோது
 பதைபதைத்து நின்றாலும் பதறாதுதம் பிள்ளைகளை
வாரி அணைத்து வாஞ்சையுடன் தேற்றிக்
 குறையொன்றும் தெரியாது பாசமுடன் பராமரித்து

சீரிய பண்புகளும் கலையொடு சிறந்த கல்வியுமளித்து
வளமாக வாழவைத்த வல்லமை கண்டு எம்
ஊரில் உள்ளோரெல்லா மிவரை உளமாறப்பாராட்டும்
உதாரண புருசராக உயர்ந்துநின்ற உத்தமர்காண்.

ஊடகத்துறையினிலே உரமாகக் கால்பதித்து
ஊயர்வான சாதனைகள் ஓயாமல் பலசெய்து
கோடலின்றிப் பணியாற்றி பலபேரின் மானம்வென்று
சத்தியமே நித்தியமென்ற தத்துவத்தின் வழிசென்று
வீடல் எதுவரினும் வாடலின்றி எதிர்கொண்டு
வெற்றிகளைப் பெற்றபோதும் அகம்பாவ மேதுமின்றி
மாடம்வைத்த விளக்கினைப்போல் மக்களுக்கு வழிகாட்டி
ஞானம்வாழ்ந்த வாழ்க்கையொரு வரலாற்றுப் புத்தகமே!

விருதுகள் பல பெற்ற வித்தகராய் விளங்கியவர்
பதவிகள் பலவகித்த பண்பாளராய் துலங்கியவர்
கருதுகின்ற கருமங்களை தீர்க்கமுடன் லாவகமாய்
வெற்றிகொள்ளும் சூட்சுமம் வெகுவாகப் பொருந்தியவர்
வருந்துகின்ற மக்களின் வாட்டம் போக்கும் நாட்டத்திலே
நாள்தோறும் ஓயாதுழைப்பதையே உயர்வாகக்கருதியவர்
கருநீல மயிலேறும் கந்தனுக்கருகினிலே இனியென்றும்
களிப்புடனே இளைப்பாறும் பெரும்பேற்றை பெற்றாரே.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

ஆர். எஸ். மகேந்திரராஜா
பெறாமகன்

ஒழுக்கம் உயிரிலும் சிறந்தது
ஒழுக்கமுடையார் எல்லாமுடையார்
ஒழுக்கங்களாவன கொல்லாமை,
கள்ளாமை பிறர்வசை உரையாமை
பிறர்பொருள் கவராமை - தாழ்மை
பொய்யுரையாமை முதலியனவாம்.
- நற்சிந்தனை

# பொறியியலாளராக்கியவர் தாத்தா

சிறுபராயத்தில் இருந்து என்னைப்பற்றி கனவு கண்டார். "நீ பொறியியலாளராக வரவேண்டும். இல்லையேல் டாக்டராக வரவேண்டும். குடும்பத்துக்குப் பெருமை சேர்க்க வேண்டும்" என்று அடிக்கடி என்னிடம் கூறுவார். அவரது கனவை நனவாக்கியவன் என்ற பெருமையைப் பெற்றேன்.

ஆரம்பத்தில் வீமன்காமம் மகா வித்தியாலயத்தில் படிக்கும்போது எனக்கு ஊக்கம் தருவார். பின்னர் இடம்பெயர்வின் பின்னர் கொக்குவில் இந்துக் கல்லூரி, யாழ். இந்துக் கல்லூரி ஆகியவற்றில் படிக்கும் போதும், தினமும் "படி படி" என நச்சரித்துக் கொண்டிருப்பார். அவர் நல்மனதுடன் நச்சரித்ததால், இன்று நான் பொறியியலாளராகி விட்டேன். அவரின் விருப்பத்தையும் நிறைவேற்றி விட்டேன்.

கடந்த வருட இறுதியில் எனது திருமணம் இடம்பெற்றது. அப்போது அவரைச் சந்திக்கும் வாய்ப்புக் கிட்டியது. அவருடன் மனம்விட்டுப் பேசும் சந்தர்ப்பம் கிட்டியது. என்னால் தனக்கும் தனது குடும்பத்துக்கும் கிடைத்த பெருமை என மகிழ்வுடன் தெரிவித்தார். என் மீது அவர் காட்டிய அன்பும் பாசமும் என்னை நெகிழ வைத்துவிட்டது.

நடக்க முடியாத நிலையிலும், நோய்வாய்ப்பட்ட நிலையிலும் எவ்வளவோ சிரமத்துடன் எனது திருமண வைபவத்தில் கலந்து கொண்டு எனக்கு ஆசி வழங்கியதை என் வாழ்வில் மறக்க மாட்டேன்.

தள்ளாத வயதிலும் எனது திருமண விழாவில் கலந்து எனக்கும் எனது குடும்பத்துக்கும் பெருமை சேர்த்தார் தாத்தா.

அவரின் ஆத்மா சாந்தியடைய மாவைக்கந்தனைப் பிரார்த்திக்கிறோம்.

**கு. ஜதுகலன்**
**பொறியியலாளர்,**
**லண்டன்.**

## எம்முடன் தாத்தா

எனது பிறப்பில் இருந்து வளர்ந்து வரும் வரை எமக்கு பல்வேறு ஆலோசனைகளையும் புத்திமதிகளையும் வழங்கி வந்த தாத்தா இன்று எம்மோடு இல்லை.

எனது பிறப்பில் இருந்து பள்ளி செல்லும்போது, வேலைக்குச் செல்லும்போது பின்னர் திருமணமானபோது எம்முடன் இருந்தார் தாத்தார். சில வேளைகளில் எம்மைக் கடிந்து கொள்வார். பின்னர் கட்டி அணைப்பார்.

வெளியில் சென்று வரும்போது எனக்கு இனிப்புப் பண்டங்களை வாங்கி வருவார். அன்பாக அழைத்து அவற்றைத் தருவார்.

எனது திருமணத்தின்போது அவர் வாழ்த்துமடல் வழங்கியதை என் வாழ்வில் மறக்க முடியாது. எனது பிள்ளைகளுடன் அன்பாகப் பழகுவார். அவர் எம்முடன் இருந்த காலத்தை மறக்க முடியாது. அவரது ஆத்மா சாந்தியடைய வேண்டுகிறேன்.

**பேர்த்தி – தேனுகா சுரேஸன்.**
**பூட்டப்பிள்ளைகள் – யதுர்ஷிகா. பிரவின்**

பிறர் துயர்களை உன்துயர் நீங்கும்
பிறர் குற்றம் காணின் உன் குற்றம் பெருகும்.

# எனது தாத்தா எனக்கு உதாரணபுருஷர்

இவ்வுலகம் எத்தனையோ விசித்திரமான மனிதர்களைக் கண்டிருக்கின்றது. அவர்களுடைய வாழ்வியலை அனுபவத் தூண்களாகக் கொண்டு அடுத்த சந்ததி உருவாக்கத் திற்கு உத்தம புருஷர்களை நெடுங்காலும் உருவாக்கி வருவதை நாம் காண்ணாரக் கண்டிருக்கிறோம். அத்தகையோர் வரிசையில் 'எனது தாத்தா' மண்ணுலகம் மட்டுமின்றி விண்ணுலகமும் போற்றக்கூடிய உத்தம புருஷர் எனலாம்.

"All life is an experiment, The more
Experiments you make the better" **-Ra'ph Waldo Emerson**

வாழ்க்கையில் நாம் பல சோதனைகளைத் தாண்டி வாழ வேண்டியிருக்கின்றது. இந்தச் சோதனைகள் தான் எம்மை அனுபவப் படிகளாக உயர்த்துகின்றன. சமூகத்தோடு ஒட்டி உறவாடி வாழும்போது வருகின்ற சோதனைகளையெல்லாம் சாதனைகளாக மாற்றி பலரால் வாழ முடிவதில்லை. சிலரே பூரணத்துவமான வாழ்வை வாழ்ந்து முடிக்கின்றனர். அந்த வகையில் கூட 'எனது தாத்தா' உத்தம புருஷர் எனலாம்.

அவருக்கு எவ்வளவு பிரச்சினைகள் வந்தாலும் ஒருபோதும் துவண்டதில்லை. தனது சாதுர்யமான ஆற்றலால் பல சவால்களைச் சந்தித்து இப்போது 89 வயதில் இறைபத மெய்துள்ளார்.

Every man dies; Not every man
Really lives. **- William Wallace**

எல்லா மனிதர்களும் இறப்பைச் சந்திக்கத்தான் வேண்டும். ஆனால் எல்லோரும் வாழ்வை சரியாகச் சந்திக்கிறார்களா? இல்லை என்று தான் சொல்லவேண்டும்.

"எனது தாத்தா" எனக்குத் தெரிந்தவரை ஒரு பூரணத்துவமான வாழ்வை நேர்மையுடன் வாழ்ந்தார் என்றுதான் கூறவேண்டும்.

நான் தாத்தாவிற்கு அருகாமையில் சுமார் இரண்டு ஆண்டுகள் சேர்ந்திருந்திருப்பேன். அப்பொழுதெல்லாம் பல விடயங்களில் எனக்கு பல அறிவுரைகளை வழங்கியிருக்கிறார். அவரது அறிவுரைகள் உடனடியாக செவிமடுக்க உதாசீனப்படுத்தும் வகையிலிருப்பினும் பிறிதொரு சிக்கல் வரும்பேது தாத்தா தந்த அறிவுரை பற்றிச் சிந்திக்கத் தெளிவு பெறுவேன். இது பல தடவை நடந்திருக்கின்றது.

My thoughts are free to go anywhere; but it's surprising, how often, they head in your direction

இவ்வாறாக ஒவ்வொரு முறையும் பிரச்சினைகளிலிருந்து மீளும்போது தாத்தாவின் வார்த்தைகள் போலதோன்றுவது வாடிக்கையானது பல முறை. தாத்தாவின் மரணம் எனக்கு ஒன்றும் சாதாரண நிகழ்வாகத் தோன்றவில்லை இது ஓர் நீண்ட வரலாற்றில் மீள் நிரப்பப்படமுடியாத வெற்றிடமாகிவிடுமோவென சந்தேகமே எழுகிறது. தாத்தாவிற்கு இலட்சியங்கள் பல இருந்தன. அவற்றில் பல நிறைவேறினாலும் தாத்தா விட்டுப்போன இலட்சியச் சிந்தனைகளை பின்வருவோர் பின்பற்றுவார்களா என்பது தான் சந்தேகத்துக்குரியதாகவிருக்கின்றது.

நாம் புறக்கணிக்கும் ஒவ்வொரு கடமையும் நாம் தெரிந்து கொள்ளத் தவறிய ஓர் உண்மையைப் புலப்படுத்துகின்றது என்பர்.

தாத்தாவினுடைய மேசையில் ஒரு மட்டையில் பின்வருமாறு எழுதப்பட்டிருக்கும்.
**'வாசிப்பதால் மனிதன் பூரணமடைகின்றான்'**

அந்த வாசகத்திற்கேற்ப தாத்தாவின் வாசிக்கும் திறன் அதிகமெனலாம். தாத்தா பத்திரிகைகளை வாசிப்பதை வாடிக்கையிருப்பதை அவருடன் பழகியோர் நன்கறிவார்கள். உணவு உட்கொள்வதில் கூட அவசரம் காட்டமாட்டார். போதுமான உணவுகளை தகுந்த நேரங்களில் உண்பார்.

கூட்டங்களுக்குச் செல்வதென்றால் இப்பொழுதெல்லாம் பிரபலமானவர்கள் நேரம் தவறிச் செல்வது ஒரு 'ஸ்டைல்' ஆக மாறிவிட்டது. ஆனால் தாத்தா கூட்டங்களுக்கு தகுந்த நேரத்தில் சமூகமளிப்பது அவரை உயர்வாக மதிக்கக் காரணமாயிருந்தது.

எனக்கு தாத்தாவை இசைக்கலைஞனாகவோ, சமூக சேவையாளனாகவோ தெரியாது. ஏனெனில் அவ்வளவு தூரம் தாத்தாவுடன் நெருங்கிப் பழகவில்லை. ஆனாலும் தனிப்பட்ட வாழ்வியலில் அவருடன் அருகிலிருந்த 2 வருடங்களில் அவரை ஓர் இலட்சியவாதியாகவே கண்டேன்.

தாத்தாவின் நினைவுகள் என்றுமே எனக்கு வாழ்வில் சோதனைகளின் போது தீர்வுகாண்பது மட்டுமன்றி சாதனைகளின்போது பெருமிதம் கொள்ளாது தன்னடக்கம் பேணவும் உதவவேண்டும்.

தாத்தா நகைச்சுவை உணர்வுமிக்கவர் என்று பலருக்கும் தெரியாது. தாத்தாவின் அருகிலுள்ளபோது தான் நான் அதையும் அறிந்தேன்.

தனது உடலாலும் உள்ளத்தாலும் பிறருக்குத் தீங்கு நினைக்காத 'எனது தாத்தா' முத்திப்பேரின்பத்தை அடைய நாம் பிரார்த்திப்போமாக.

த. கணாதீபன்
பேரன்

# காணற்கரிய கண்ணியவான் எங்கள் தாத்தா

எமது குடும்பத்திற்கு ஒளியூட்டி வழிநடத்திய ஒளிவிளக்கு இன்று எல்லோர்க்கும் பொதுவான விடிவெள்ளியாக வானில் பிரகாசிக்கச் சென்றுவிட்டது. நாமெல்லாம் சோகக் கடலில் மூழ்கியுள்ள இவ்வேளையில் எமது தாத்தா எங்கோ எவருடைய சோகத்தையோ துடைக்கச் சென்று விட்டதாகவே நாம் எண்ணுகின்றோம். ஏனெனில் எமது தாத்தா நான், எனது குடும்பம் என ஒரு குறுகிய வட்டத்தினுள் ஒரு போதும் முடங்கிக் கிடந்ததில்லை. அவருடைய சிந்தனையும் செயலும் நாம் எமது சமூகம் என்றவாறு தான் அமைந்திருந்தது.

நான் பிறந்ததிலிருந்து தாத்தா எம்மைவிட்டுப் பிரியும்வரை தாத்தாவின் அருகில் அவரது நிழலில் வளர்ந்தவன் என்பதால் அவருடைய பல்துறை பரிமாணங்களையும் கண்கூடாகவே கண்டு பிரமித்திருக்கின்றேன். அந்த அடிப்படையில் அந்த உரிமையில் அவர் என்னோடு சம்பாசித்த விடயங்களையும் அதன்போது நான் கண்டு கொண்ட விடயங்களையும் இங்கே கூற விழைகின்றேன்.

அமரர் எஸ்.ஆர். ஞானசுந்தரம் அவர்கள் எனது தந்தையின் தந்தை என்ற உறவு முறைக்கு அப்பால் ஒரு சில வார்த்தைகளுக்குள் அடக்கிவிடக்கூடிய உறவு முறைகளுக்கு அப்பால் வார்த்தைகளால் வருணிக்கமுடியாத அளவிற்கு எல்லாவிதத்திலும் அவரோடு நெருங்கிப் பழகியிருக்கிறேன். அவருடைய இன்பத்திலும், துன்பத்திலும் நேரடியாகப் பங்கெடுத்து இருக்கின்றேன். எமது உறவு தாத்தா - பேரன் என்று சம்பிரதாயபூர்வமாக மட்டும் அமைந்துவிடவில்லை. எனக்கு சிறுவயதில் இருந்தே தாத்தாவோடு பழங்கதை பேசுவது என்பது மிகவும் பிடித்தமான விடயம்.

நான் கல்லூரி மாணவனாக இருந்த காலத்தில் இரவு வேளைகளில் படிப்பை நிறுத்தி விட்டு என் பெற்றோருக்கு ஏதாவது காரணம் சொல்லிவிட்டு தாத்தாவின் அறைக்குள் புகுந்து கொள்வேன். வானொலியில் எங்கெல்லாம் செய்தி ஒலிபரப்பாகின்றதோ அந்த அலைவரிசை களில் எல்லாம் தாத்தா லயித்திருப்பார். ஒலிபரப்பாகின்ற செய்திகளின் கட்டமைப்பு சாரம், நோக்கம் அவற்றின் தாக்கம் பற்றி தனக்கே உரிய பாணியில் விமர்சிப்பார். இதன்போது வரலாற்றுக்குறிப்புக்களையும் நினைவுபடுத்த அவர் தவறுவதில்லை. இவ்வேளையில் செய்தித் துறையில் தனது அனுபவங்களையும் சுவைபடக் கூறுவார். அவரது பேச்சில் செய்தி சேகரிப்பில் அவருக்கிருந்த துடிப்பு, வேகம், விவேகம், அனுபவம் என்பவற்றை உணரக்கூடியதாக இருந்தது.

காலை விடிந்ததும் தாத்தாவின் முதல் வேலை பத்திரிகை வாசிப்பதாகத் தானிருக்கும். பத்திரிகையில் ஆசிரியர் தலையங்கப் பகுதி அவசியமாக வாசிக்கப்படவேண்டியது என அடிக்கடி கூறுவார். ஒருநாளில் குறைந்தது நான்கு முறையாவது பத்திரிகை வாசிப்பார்.

தாத்தா பக்கத்துவீட்டில் குடியமர்ந்த பின் ஒவ்வொரு நாளும் நான் பல்கலைக்கழக விரிவுரைகளை நிறைவுசெய்து கொண்டு தாத்தாவின் அறிவுரைகளிற்காக மாலை நேரத்தில் அவரிடம் வருவேன். தாத்தாவுடன் தனிமையில் சம்பாசிப்பது மிகவும் சுவையான அனுபவம். அரசியல் முதல் ஆன்மீகம் வரை விலாவாரியாக வரலாற்றுக் குறிப்புகளுடன் நகைச்சுவை உணர்வுடன் இலகுவில் புரிந்துகொள்ளும் வகையில் விவாதிப்பார். தன்னுடைய பிள்ளைகள் முதல் சமூக சேவையில் தன்னோடு தோள் நின்ற கழக அங்கத்தவர்கள் வரை அனைவரதும் நேர் எதிர் குணாதிசயங்கள் பற்றி இரகசியமாக சொல்லுவார். அந்த வகையில் தாத்தாவின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவனாக நான் இருந்ததையிட்டு பெருமைப்பட்டுக் கொள்கின்றேன்.

எம் முன்னோர்கள் பற்றி அடிக்கடி குறிப்பிடுவார். தமிழ் நாட்டில் திருப்புகலூர் என்ற இடத்திலிருந்து எம் முன்னோர் மாவிட்டபுரம் வந்ததாகவும், மாவைக் கந்தன், நகுலேஸ்வரப் பெருமானின் புராண இதிகாசக் கதைகளையும் அடிக்கடி கூறுவார். மகாகவி உருத்திரமூர்த்தி, அ.செ. முருகானந்தன் போன்ற கலை இலக்கியவாதிகளோடு தனது உறவுமுறை பற்றியும் அவர்களோடு இணைந்து ஆற்றிய கலை இலக்கியப் பணிகளையும் பிரஸ்தாபிப்பார்.

கூட்டுறவுத் துறையில் தனது ஈடுபாடு பற்றியும் தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தோற்றம், வளர்ச்சி பற்றியும் ஆண்டு ரீதியான வரலாற்றுக் குறிப்புகளுடன் தெரிவிப்பார்.

தந்தை செல்வா மீது அளவற்ற பற்றுக் கொண்டிருந்தார். தமிழரசுக் கட்சியின் ஆரம்பகால செயற்பாடுகள், கொள்கைகள், தந்தை செல்வாவுடனான சம்பாசணைகள், உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டு குழப்பங்கள், அக்கால தென்னிலங்கை அரசியல்வாதிகளின் யாழ் விஜயங்கள், நடப்பு அரசியல் விடயங்கள் என பல்வேறு விடயங்களை மீள் நினைவூட்டிச் சொல்லுவார்.

தனது இளமைக் காலத்தில் ஊரிலே நிகழ்த்திய சமூகப் பணிகள் பற்றி அடிக்கடி எடுத்துரைப்பார். 1990 இடப்பெயர்வுக்கு முதல்நாள் கூட தமது சங்கத்தின் சார்பில் வீதி அபிவிருத்தி பணியொன்று நிறைவு செய்யப்பட்டதாகக் கூறி கவலைப்பட்டார். சனசமூக நிலைய, கட்டுமானப் பணிகள், கயரோகத் தடுப்பு செயற்றிட்டம், மாவைக் கந்தன் திருப்பணி, வீமன்காமம் மகா வித்தியாலய அபிவிருத்திப் பணிகள் என பல்வேறு சமூகப் பணிகளை அடிக்கடி எண்ணிப் பார்ப்பார்.

தாத்தா இசைத்துறையில் பல அரிய தகவல்களை தேடித் தொகுத்துள்ளார். அவருடைய இசை ஆராய்ச்சிகள், தரவுகள், இசைக் கட்டுரைகள், செய்திகள், பல்கலைக்கழக இசைத்துறை மாணவர்களால் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. அக்கட்டுரைகள் அவருடைய இசையாளன், சிலம்பொலி சஞ்சிகைகளிலும் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

என்னுடைய பல்கலைக்கழக கல்வியிலும் தாத்தா அதீத அக்கறை கொண்டிருந்தார். மாலைநேர சம்பாசணைகள் இரவு வரை நீண்டதும் படிக்கும் படி கூறி அனுப்புவார். பல்கலைக்கழகத்தில் நிகழ்ந்த அனைத்து விரிவுரைகள், செய்முறைகள் பற்றியும் ஆழமாகக் கேட்டறிந்து கொள்வார். ஒரு விடயத்தை பல்வேறு கோணங்களில் அணுகி தனக்குத்

தேவையானதை முழுமையாகப் பெற்றுக்கொள்ளும் அவரது சுபாவத்தை எண்ணி பல முறை நான் அதிசயித்து இருக்கிறேன்.

தாத்தாவின் வாழ்வில் முதுமை தலைதூக்க ஆரம்பித்த பின்பும் அவரால் சமூக சேவையில் இருந்து ஓய்ந்துவிட முடியவில்லை. அவருடைய கழகத் தோழர்களுக்கு தொலைபேசி மூலம் அழைத்து ஆக வேண்டியதைக் கவனிக்கும்படி ஆலோசனை கூறுவார். அவரது சங்கச் செயற்பாடுகளுக்காக அநேக கடிதங்களை எழுதித் தரும்படி என்னைக் கேட்டுக் கொள்வார். அவர் சொல்ல நான் எழுதுவேன். அவர் சொல்ல வந்த செய்தியை சுருக்கமாக, தெளிவாகச் சொல்லும் முறை அலாதியானது மொழித் தேர்ச்சி, சொற்பிரயோகம் என்பவற்றில் அவருக்கிருந்த பழுத்த அனுபவம் அதன்போது வெளிப்பட்டது. தனது குடும்பச் சூழ்நிலையால் தனது பள்ளிப்படிப்பை பாதியிலேயே நிறுத்திய போதிலும் சளைக்காமல் ஓய்வு நேரங்களில் எல்லாம் புத்தகம் வாசித்து தனது அறிவைப் பெருக்கிக் கொண்டதாகக் கூறுவார்.

எவ்வளவு பாரதூரமான விடயமாகினும் அதனை நேர்மன நிலையுடன் அணுகி சம்பந்தப்பட்டவர்களுடன் புன்முறுவல் பூத்து தனது காரியத்தை திறம்பட சாதித்துக் கொள்வார். தாத்தாவின் வெற்றிகரமான வாழ்விற்கு அவரது பல்துறை தேடலும் அவருடைய வசீகரப் புன்னகையும் தான் காரணம் என்றால் மிகையில்லை.

இன்னும் சிலகாலம் முதுமை அவரை ஆட்கொள்ளாதிருப்பின் அவர் மேலும் பல விடயங்களை சாதித்திருப்பார். அவருடைய உடல் முதுமையால் தளர்ந்து போயிருந்தாலும் அவருடைய உள்ளம் தளராமல் பல புதிய விடயங்களை சாதிக்கத் துடித்துக் கொண்டிருந்ததை கண்கூடாகவே கண்டிருக்கின்றேன்.

அவருடைய ஆசைகள், தேவைகள் தனிப்பட்டதாகவோ, அவருடைய குடும்பம் சார்ந்ததாகவோ அமைந்திருக்கவில்லை. அவர் சார்ந்த சமூகம், இனம் சார்ந்ததாகவே அவை இருந்தன. அவருடைய ஆசைகளில் பிரதானமானது மீண்டும் சொந்த ஊர் திரும்பவேண்டும் என்பதாகும். அங்கு எமது சமூகம் கலை, சமூக பொருளாதார ரீதியில் புத்தெழுச்சி பெறவேண்டும் என்பதாகும்.

இசை வேளாளர் சங்கத்தின் மூலம் இசைக் கல்லூரி ஒன்றை நிறுவி இளங்கலைஞர்களின் இசை விருத்தியை ஊக்குவிக்க ஆவன செய்யவேண்டும் என பேரவா கொண்டிருந்தார். நாதசுர இசைக் கல்வியானது பல்கலைக்கழக நுண்கலைத்துறை பாடப்பரப்பினுள் உள்வாங்கப்பட வேண்டும் என பெருவிருப்புக் கொண்டிருந்தார். இவ்வேளையில் தனது சங்கத்தின் கோரிக்கைக்கிணங்க நாதசுர இசைத்தேர்வு முறை வட இலங்கைச் சங்கீத சபை தேர்வு மட்டங்களில் உள்வாங்கப்பட்டதை நினைவு கூர்ந்தார்.

எல்லாவற்றிற்கும் மேலாக எமது தமிழினம் தன்னாட்சி, உரிமையுடன் தமது தாயக மண்ணில் சுதந்திர வாழ்வு வாழவேண்டும் என்றும் தமது கலை, கலாசாரம், பண்பாட்டைப் பேணிப் பாதுகாக்க வேண்டும் என்றும் பேரவாக் கொண்டிருந்தார்.

எனது தாத்தாவின் கடல்போன்ற பல்துறைப் புலமையிலிருந்து நான் மொண்டு கொண்டது ஒருசில துளிகள் தான். உங்கள் தேநீருடன் உங்கள் கதை கேட்க ஆவலாய் துடிக்கிறேன். மீண்டும் இரகசியமாய் கதை பேச கண்ணீரோடு காத்திருக்கிறேன். வருவீர்களா தாத்தா!

*இ. ரஜீவன்*
**அன்னாரின் செல்லப் பேரன்**

## அன்புத் தாத்தாவின் நினைவுகளோடு...

இப்பூவுலகிலே அவதரித்த ஒவ்வொரு மனிதனும் தனக்கான ஒரு இலட்சியப் பாதையை திட்டமிட்டு அதே நோக்குடன் செயற்பட்டு தமது எண்ணங்களை இலகுவாக நிறைவேற்று கிறார்கள். அவ்வாறான ஒரு இலட்சியப் பாதையில் நேர்கோட்டில் பயணித்து தனது இலட்சியக் கனவுகளை எல்லாம் முழுமையோடு நிறைவேற்றி தன்னை ஒரு முழுமையான மனிதராக உலகிற்கு எடுத்துக்காட்டியவர் எனது தாத்தா என்றால் அது மிகையாகாது.

தாத்தாவின் வாழ்க்கைப் பயணத்தில் ஒரு சிறு அங்கமாக அவருடன் எனது பயணமும் நிகழ்ந்துள்ளது எனலாம். ஆரம்ப காலகட்டங்களில் அதாவது மாவிட்டபுரத்திலிருந்த காலங்களில் நான் குழந்தையாக இருந்ததால் அவருடன் கதைத்துப் பழகும் ஆற்றல் என்னிடம் குறைவாகவே காணப்பட்டது. இருப்பினும் இடப்பெயர்வுகள் காரணமாக நாங்கள் உடுவிலில் வசித்து வந்த வேளையிலே தாத்தாவுடனான முதல் நெருக்கம் ஆரம்பமானது. தாத்தாவிடம் சங்கீதம் கற்றுக் கொள்வது என்றால் எனக்கு கொள்ளைப்பிரியம். காலை எழுந்தவுடனேயே அவருடனே சேர்ந்து அவர் செய்யும் காரியங்களை எல்லாம் அவதானித்துக் கொண்டு அவருடனே எனது நேரத்தையும் கழிப்பேன். அந்த இனிமையான காலங்கள் இப்பொழுதும் என் கண்முன்னே வந்து செல்கின்றன. என்மீது தாத்தாவிற்கு அதிக பாசம். அன்றிலிருந்து இன்றுவரை தாத்தாவின் பாசமும் அதிகரித்திருக்கின்றது என்று தான் சொல்லவேண்டும்.

மேலும் நடுக்கால கட்டங்களில் தாத்தாவுடன் பேசிக்கொள்ளும் வாய்ப்பு அரிதாகவே கிடைத்திருக்கிறது எனலாம். ஏனெனில் தாத்தாவும் பல்வேறுபட்ட வேலைகள் நிமித்தம் அலைவதாலும் நானும் பாடசாலை வகுப்புக்கள் காரணமாக நேரங்கள் கிடைக்காமையாலும் தாத்தாவைப் பார்த்தால் ஒரு புன்னகை செய்துவிட்டு எனது வேலைகளைப் பார்த்துச் செல்வதால் தாத்தாவிற்கும் எனக்குமான இடைவெளி சற்று அதிகமாகவே காணப்பட்டது. ஆயினும் அன்றிலிருந்து இன்றுவரை தாத்தாவிடமிருந்து புரிந்து கொண்டதோ ஏராளம்.

அவர் ஒரு சிறந்த முருகபக்தர். சிறந்த பண்பாளர். சிறந்த இசைக்கலைஞர். தாத்தாவின் தோற்றமே அவருக்கு ஓர் எடுத்துக்காட்டாகும். தெரியாதவர்களைக் கூட அவர் பார்த்தாலும் புன்னகைத்து அவர்களுடன் பேசமுற்படுவதை எவ்வளவோ சந்தர்ப்பங்களில் அவதானித் துள்ளேன். இன்றைய மாறிவரும் நவீனயுகத்திலும்கூட பாரம்பரிய முறைகளையும்

பழக்கவழக்கங்களையும் செவ்வனே சிறப்புறப் பின்பற்றியவர் எனலாம். ஆரம்பத்திலிருந்து இறுதிவரை மாறா வாழ்க்கை முறையை வாழ்ந்து காட்டியிருக்கிறார். எந்தவொரு சிறு செயலையும் கூட திட்டமிட்டு அழகாகச் செய்து முடிப்பதைப் பார்க்க ஆச்சரியமூட்டும். தன்னால் இயலாது என்றாலும் கூட நினைத்ததைச் செய்து முடிக்கும் மனவைராக்கியத்தை அவரிடம் காணக்கூடியதாக இருந்தது. அவரிடம் காணப்பட்ட தன்னம்பிக்கையும் மன உறுதியுமே அவரின் சாதனைகளுக்கு உறுதுணையாக இருந்திருக்கின்றது எனலாம்.

இறுதியாக தனது 89 ஆவது வயதிலே அவர் பெருமையுடன் பெற்றுக் கொண்ட 'சிவத்தமிழ் விருது' அவர் வாழ்ந்த வாழ்க்கைக்கு ஓர் முழுமையான அர்த்தத்தைப் பறைசாற்றியிருக்கிறது. தாத்தா தான் பெருமை பெற்றுக் கொண்டாலும் இவை எல்லாம் உங்களுக்குத்தான் பெருமை என என்னைப் பார்த்து அடிக்கடி சொல்லுவார். அவர் பெற்றுக்கொண்ட பாராட்டுக்களுக்கும் கௌரவங்களுக்கும் விருதுகளுக்கும் அளவேயில்லை.

மேலும் தாத்தாவின் ஒவ்வொரு செயல்களிலும் ஏதாவது அர்த்தம் புதைந்தே இருக்கும். அவரிடம் எனக்கு மிகவும் பிடித்ததே 'சேகரிப்பு' பண்டைய காலப் பொருட்களிலிருந்து சகல ஒரு சிறு பொருளைக் கூட அழகாகச் சேகரித்து வைப்பார். எனக்கும் பார்க்கும் பொழுது சிரிப்பாகவும் வேடிக்கையாகவும் இருக்கும். பின்பு அவர் சேகரித்ததன் பயனை நானே பல தடவைகளில் அடைந்துள்ளேன். இவ்வாறு வாழ்க்கையின் ஒவ்வொரு பக்கங்களையும் அழகாக வாழ்ந்து வந்து கொண்டிருந்த வேளையில் 2009 ஆம் ஆண்டு ஐப்பசி மாதமளவில் அழகாக நிலாவாக மின்னிக் கொண்டு தனது கனவுகளின் வைராக்கியத்துடன் சென்று கொண்டிருந்த பாதையில் சிறு சலனம் ஏற்பட்டது. ஓடிக்கொண்டேயிருந்த கால்களுக்கு ஓய்வு தேவை என்று கடவுள் நினைத்தாரோ தெரியவில்லை.

அன்றிலிருந்து 4 ஆம் திகதி பெப்ரவரி மாதம் வரை தாத்தா நோய்வாய்ப்பட்டிருந்தாலும் கூட அவரது அருகே இருந்து அவரைத்தினமும் அன்போடு பார்க்கும் பாக்கியம் எனது குடும்பத்திற்கு கிடைத்தது. அவரே நோய்வாய்ப்பட்டிருந்தாலும் கூட அவரது எண்ணங் களுக்கும் சிந்தனைகளுக்கும் நோய் ஏற்படவில்லை. விரைவில் தன்னைச் சுகமாக்கிக் கொண்டு மீண்டும் அதே பாதையில் ஓடவேண்டும் என்ற அவரது பேரவாவைப் பார்க்க ஆச்சரியமாக இருக்கும். சில சமயங்களிலும் தனது இயலாமை காரணமாக எங்கள் மீது கோபப்பட்டாலும் மறுகணம் உரிமையுடன் எங்களை அரவணைத்துக் கொள்வதை மறக்கவே முடியாது.

நோயுற்றிருந்த காலங்களில் கூட அவரது பேச்சுக்களையும் செய்கைகளையும் பார்க்க வியப்பூட்டும் தோற்றத்தில் அவர் முதுமை நிலையை அடைந்திருந்தாலும் மனதளவில் ஓர் சிறந்த வாலிபராகவே அவர் வாழ்ந்திருக்கிறார் என்பதை அறியக்கூடியதாக உள்ளது. சில நேரங்களில் தன்னால் ஏன் ஒன்றும் செய்யமுடியவில்லையே என்று பரிதவிக்கும் அவர் கண்களைப் பார்ப்பதற்கு வேதனையாக இருக்கும். இருப்பினும் தனது பழைய நண்பர்கள் யாராவது தன்னைப் பார்க்க வந்தால் அவரிடம் காணப்படும் ஆனந்தத்திற்கு அளவேயில்லை. இயலாமையிலும் கூட அவர்களுடன் இன்முகத்துடன் பேசி அவர்களை உட்கார்ந்து சாப்பிட்டுப் போக வேண்டுமென்ற அவரது கோரிக்கையைப் பார்க்கும் பொழுது அவருடைய பண்பை என்னால் உணரமுடிந்தது. சிலவேளைகளில் அவரிடம் காணப்படும் பிடிவாதத்தையும் மறக்கவே முடியாது. தன்னால் முடியாவிடினும் எப்படியாவது பத்திரிகை வாசித்தே

தீரவேண்டும் என்ற பிடிவாதத்தைப் பார்த்துள்ளேன். என்னை வாசிக்கச் சொல்லிவிட்டு மிகக் கவனமாக கேட்டுக் கொண்டு பிறிதொரு நாட்களில் அச் செய்திகளைப் பற்றி கலந்துரையாடுவதைப் பார்க்கும் பொழுது அவரின் சமூகத்தின் மீது கொண்ட பற்று கண்கூடாகத் தெரிகின்றது எனலாம்.

நோயுற்ற காலங்களில் கூட நடைபெற்ற தேர்தல்களுக்குச் சென்று தனது வாக்குப் பதிவை அளித்திருந்தமையைப் பார்க்கும்பொழுது அவருக்கு தனது குடும்பத்தின் மீது எவ்வளவு அக்கறை காணப்பட்டதோ அதே அக்கறையையும் பாசத்தையும் தனது நாட்டிற்கும் சமூகத்திற்கும் காட்டிவந்துள்ளமையைப் பார்க்கக்கூடியதாகவுள்ளது. தன்னால் தான் வாழும் பூமியில் ஒரு சிறுசேவையாவது செய்து விடவேண்டும் என்ற குறிக்கோளை அவர் இறுதிவரை செவ்வனே செய்திருக்கிறார் என்பதில் எவ்வளவு பெருமை.

மேலும் நோயுற்றிருந்த காலங்களில் தாத்தாவுடனான இடைவெளி முற்றுமுழுதாக மறைந்தே விட்டது எனலாம். தாத்தாவின் அருகிலிருந்தே அவரை அனுசரனையோடு கவனித்துக் கொள்ளும் பாக்கியம் எனது குடும்பத்திற்குக் கிடைத்தது. எனது அம்மா மீது அவருக்கு ஓர் தனிப்பட்ட பிரியம். தனது பிறிதொரு தாயாகவே அவரை நினைப்பதாகக் கூறுவார். அம்மாவும் தன்னால் இயலாவிடினும் கூட தாத்தாவிற்கான அனைத்துத் தேவை களையும் அனுசரனையோடும் அன்போடும் தனது தந்தைக்குச் செய்யும் கடமைபோலவே எண்ணி பாசத்தோடு அவரை நடத்திவந்தார். எனது அப்பாவும் தனது தந்தைக்குரிய கடமைகளை அல்லும் பகலும் அவருடனே இருந்து அவரை அன்போடு கவனித்து வந்தார். தாத்தாவின் இரண்டு கைகளாகவுமே எனது அப்பாவும் அம்மாவும் இறுதிவரை அவரை இறுதிவரை அவரை அனுசரனையோடும் கவனத்தோடும். அவரை வழிநடத்தி வந்தார்கள்.

தாத்தாவின் ஒவ்வொரு அசைவுகளும் அவருடன் பேசிப் பரிமாறிக் கொண்டவையும் இவ்வாறு ஒவ்வொரு நிகழ்வுகளும் என் கண்முன்னே வந்து சென்று கொண்டே உள்ளன.
எங்களது வாழ்க்கைப்பயணத்தில் அகலா ஒளி விளக்குப் போலே அவர் வாழ்ந்து வந்துள்ளார். அவர் வாழ்ந்து வந்த பாதைகளின் நினைவுகள் எங்களை நிழல் போல் தொடர்ந்த வண்ணமே இருக்கும். எங்கள் வாழ்க்கைக்கு ஓர் சிறந்த வழிகாட்டியாகவும் எங்கள் குடும்பத்திற்கு எல்லாம் முதல்வராகவும் வாழ்ந்து வந்துள்ளார்.

எங்களை விட்டு தாத்தா பிரிந்திருந்தாலும் எங்கள் மனதிலே இனியும் இனிவரும் காலங்களிலும் அவர் வாழ்வார் வாழ்ந்து கொண்டே தான் இருப்பார். அவருடைய இழப்பு எமக்கும் பேரிழப்பாக இருப்பினும் தாத்தா எமது வாழ்க்கைக்கெல்லாம் சிறந்த வழிகாட்டி யாகத் திகழ்ந்திருக்கிறார்.

அவருடைய இழப்பை எம்மால் ஈடுசெய்யவே முடியாவிடிலும் அவர் வாழ்ந்த வாழ்க்கையின்படி எம்மால் வாழமுடியாவிட்டாலும் தாத்தாவின் பொக்கிஷங்களைப் பேணிப் பாதுகாக்க வேண்டிய நிர்ப்பந்தம் எமக்குண்டு.

அவற்றை நிறைவேற்றுவேன் என்ற மனஉறுதியுடனும் என் ஆசைத் தாத்தாவின் அழிக்கமுடியாத நினைவுகளுடனும் அவரின் ஆத்மா சாந்தியடைய மாவைக் கந்தனைப் பிரார்த்தித்துக் கொண்டு நிறைவு செய்கிறேன்.

அன்புப் பேர்த்தி
சஜீதா. இ

# துடிக்கின்றோம் நாம்

*அன்பே உருவான தாத்தாவே!*
*எம்மையெல்லாம் விட்டு ஆண்டவன்*
*பாதம் சென்று விட்டீரே நாங்கள்*
*துடிப்பதும் துவண்டு வாடுவதும்*
*உங்களுக்குத் தெரியவில்லையா?*
*ஊர் போற்றும் உத்தமனாய்*
*வாழ்ந்துவிட்டுச் சிவனடி சேர்ந்தீரே*
*ஒருவர் எவ்வளவு காலம் வாழ்ந்தார்*
*என்பதிலேயே அவர் பெருமை*
*தங்கியுள்ளது. நெஞ்சிலே*
*உங்கள் நினைவுகளைச்*
*சுமந்து வாழ்வோம் தாத்தா*

**பேரப்பிள்ளைகள்**
**மோகனரஞ்சினி, நர்மதன்**
**சகானா, லவகுசன்**

புஸ்தகம் இல்லாத வீடு யன்னல் இல்லாத அறை போன்றது. எந்த வீட்டில் நூலகம் இருக்கின்றதோ அந்த வீட்டில் ஆன்மா இருக்கிறது.

## மறுமுறை பிறப்பின் உங்கள் மகளாகவே!

தூய்மையும், வாய்மையும், திறமையும், சேவையும்,
மென்மையும் கொண்ட ஓர் உன்ன மனிதருக்கு
மகளாய் படைத்ததால் கடவுளே !!! உன்னை
நன்றியுடன் கைகூப்பி வணங்குகிறேன்.

தூய்மையான வெண்ணிற ஆடை
அதைவிடவும் தூய்மையான உங்கள் அன்பு
சிரித்தமுகம், சிறந்தபண்பு
இனி எப்போது பார்ப்பேன் அப்பா

அம்மா இறந்தபின் எங்களுக்கு தாயில்லாத
குறை தெரியாமல் வளர்த்து, வாழவிட்டு
எங்களுக்காகவே வாழ்ந்த என் தாயுமானவரை
மறுமுறை பிறப்பின் உங்கள் மகளாகவே

நல்லதொரு தந்தையாய்
மனிதருள் மாணிக்கமாய்
மிகச் சிறந்த கலைஞனாய்
மிகமிக உயர் சமூகசேவகனாய்
காலத்தால் அழிக்கமுடியாத காவியமே நீ
காலனால் மட்டும் எப்படி உறைந்து போனாய்?

அப்பா நீங்களோ சௌபாக்கியம்
நிறைந்த கடவுளின் பிள்ளை
உங்களுக்கு பிள்ளைகளாய் பிறந்ததினால்
நாங்களும் பாக்கியம் செய்த பிள்ளைகளானோம்

*மருமகனை கூட மகனாய் நினைத்து*
*மரியாதையாய் நடத்தும்*
*உன்னத பண்புடைய என்*
*மதிப்பிற்குரிய அப்பாவே !!!*
*எங்கள் பக்கத்திலிருந்து ஒளி*
*கொடுத்த தீபமே*
*நீங்கள் அணைந்து விடவில்லை*
*தூரத்தே பல கதிர்கள் சொரியும்*
**கதிரவனானீர்கள்**

*என் பிள்ளைகள் தான் உங்கள்*
*பிரிவால் துடிதுடித்து போனார்கள்*
*வேரறுந்த விழுதுகள் போல் தவிதவித்தார்கள்*
*உங்கள் அன்பிழந்து கலங்கி நின்கிறார்கள்*

*யார் கூறியார் ஆற்றமுடியும், இனி*
*தாத்தாவைப் போல் வாழ்ந்து காட்டுங்கள்*
*என்று உங்களையே முன்மாதிரி காட்டவே முடியும்*

*என் பாசத்திற்குரிய தந்தையே !!!*
*நீங்கள் ஒரு குறையும் இல்லாமல் வாழ்ந்தீர்கள்*
*எங்களையும் ஒரு குறையும் இல்லாமல் வளர்த்து*
*நல்ல வாழ்வும் கொடுத்தீர்கள். அதனால்*
*எங்கள் கண்ணீரை எங்கள் கரங்களே*
*துடைக்கின்றன. அப்பா!*
*எங்களுக்கு நாங்களே ஆறுதல் அளிக்கின்றோம்*
*அப்பா!!*
*உங்கள் ஆத்மா சாந்தியடையட்டும்*
*எங்களை மேலிருந்து வழி நடத்துங்கள்*
**மனிதர்கள் மரணிக்கலாம்**
**நினைவுகள் மரணிப்பதில்லை**

**மரணித்த பின்பும் நீங்கள் எங்களுடன்**
**வாழ்ந்து கொண்டிருக்கிறீர்கள்**
**நினைவுகளாய்**

*பிரான்ஸ்*
*மகள் – கலாதேவி*
*மருமகன் – கணேசரத்தினம்*
*பேரப்பிள்ளைகள் – வசிகுலன், தனசிறி, அனந்தரூபன், கோகுலராஜ்*
*பூட்டப்பிள்ளைகள் – டக்சயா, சஜயா*

# தணியாது உங்கள் பிரிவின் துயரம்

எண்பத்து வருடங்களின் மேல்
எண்ணரிய சேவைகள் பல புரிந்து
விண்ணகம் சென்றீரே அப்பாவே - உங்களை
மண்ணகமே மறக்காது ஒரு நாளும்

நீர் கொடுத்த கல்வி, நீர் வளர்த்த கவிதைமனம்
பேர் கொடுத்துச் செல்வம் பெருமையுடன் வாழ
கண்ணில் கனவில் உங்களை எண்ணி
வாழ்கின்றோம் வாழும் வரை அப்பாவே!

சமூகத் தொண்டன், கலாபூஷணம், சிவத்தமிழ் விருது
சமூகத்தில் பல விருதுகள் பெற்றீர்கள்
ஈர்பத்து வருடங்கள் உமைப்பிரிந்து வாழ்ந்ததால்
நின்பெருமையானறியேன் இவ்வுலகில் அப்பாவே!

தந்தைதாயன்பு இரண்டையும் எமக்கு
தன்மையுடன் ஊட்டி வளர்த்த அப்பாவே!
தரணியிலே எமது உயிர் உள்ளவரை
தணியாது உங்களது பிரிவின் துயரம்

ஈரைந்து திங்கள் முன் என்னையழைத்து
ஆசையாய் பல வார்த்தைகள் பேசி
அன்பான அறிவுரைகள் கூறினீர்களே அப்பா
அழியாது என்றும் அந்த நினைவுகளின் நிழல்கள்

அன்பு மகள் ஜெயாதேவி.
லண்டன். மருமகன் சிவனேசன், பேரன்கள் சிவானுயன், [illegible]னுயன்

# Your soul would rest in pease Grandpa

We all feel very sad that you have passed aw϶y from us. We wanted you to be with us for more years but god took you away from us. But our good memories of you are always with us.

You are the special person for us. We can't forget you in our life. You were active and young heart and were very helpful and charming person. You always welcomed people with warm heart.

Grandpa your memories and your smile will live our heart for ever. We all love you and miss you a lot by everyone and us.

We all pray to his soul rest in Pease.

*You love*
*Jagapriyan. B., Thayayini.B, Thananjeyan.B.*

*CANADA*

> *For a man to write well, there are required three necessaries: to read the best authors, observe the best speakers, and much exercise of his own style.*
>
> \- Ben Jonson, Discoveries

# தலை வணங்காத் சிங்கம்

நேர்மையுடனும், உண்மையுடனும் தனக்கு சரி என்று கருதுவதை யாருக்கும் தலை வணங்காது நிறைவேற்றிவிடும் தனித் தன்மை வாய்ந்தவர் எங்கள் அப்பா. எத்தனை எதிர்ப்புகள் வந்தாலும், தன்னந்தனியே துணிந்து நிற்பார். ஈற்றில் வெற்றியும் அவருக்கே.

எங்கள் அம்மாவும் பாதியிலே சென்றுவிட சிறுபிள்ளைகளான எங்களை வளர்க்க அவர் பட்டபாடு கொஞ்சநஞ்சமல்ல. எவரது உதவியுமின்றி எங்களை வளர்த்தார். அறிவு புகட்டினார். வாழ வழியையும் காட்டினார்.

அவருடன் வாழ்ந்த காலங்கள் மறக்க முடியாதவை. அன்பையும் சொரிவார். அதே நேரம் ஆத்திரக்காரனாகவும் மாறுவார். எல்லாம் உங்கள் நன்மைக்கே என்று கூறுவார்.

அவரைப் போன்ற ஓர் அப்பாவை எத்தனை பிறவி எடுத்தாலும் காண்பது அரிது. அவர் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பது மட்டுமே எங்களால் செய்யமுடியும். அவர் ஆத்மா சாந்தியடைவதாக.

ஞா. ஜெகநாதன்
**அன்னாரின் கடைக்குட்டி**

அழியா செல்வம் அறிவுச் செல்வம். அதைச் சேர்த்து வைத்தால் யாருக்கும் கணக்குக் காட்டத் தேவையில்லை.

பழை கூத்தியவத்தை கிராம அபிவிருத்திச் சங்கம்
Palai Koothiyawathe Rural Development Society

பதிவு இல. Regd. No. RD/J/VN/68/2

பழை, தெல்லிப்பழை. .....................19....

தலைவர் / President
மு. சின்னத்துரை
M. SINNADURAI

கௌரவ செயலாளர் / Hon. Secretary
எஸ். ஆர். ஞானசுந்தரம்
S. R. GNANASUNDARAM

கௌரவ பொருளாளர் / Hon. Treasure
கு. நடேசபிள்ளை
K. NADESAPILLAI

இலங்கை இசை வேளாளர் ச...

காலம் : 14-10-98 புதன்கிழமை காலை 9-0...
இடம் : இணுவில் மஞ்சத்தடி நாகசுர-தவில் ...
பாட...
தலைவர் : திரு. எஸ். ஆர். ஞானசுந்தரம்

# ஞானம் அலங்கரித்த பதவிகள்

சிவமயம்

வலி - வடக்கு பாவனையாளர் சங்கங்களின் பிரதேசசபை
...of Vali - North Consumers' Societies

கௌரவ செயலாளர் :
திரு. எஸ். ஆர். ஞானசுந்தரம்
மாவிட்டபுரம்,
தெல்லிப்பழை.

பொருளாளர் :
திரு. ச. தனபாலசிங்...
பலாலி கிழக்கு,
வசாவிளான்.

யாழ்ப்பாணம் இசையாளர் ஐக்கிய அபிவிருத்திச் சங்கம்
பதிவு இல. J/908 (22-1-45)
தலைவர்: நாகசுரம் P. S. ஆறுமுகம்பிள்ளை
உபதலைவர்கள்: நாகசுரம் N. K. பத்மநாதன், தவில் S. V. தெட்சணாமூர்த்தி
மாவிட்டபுரம்,
தெல்லிப்பழை ..........195
காரியதரிசி: நாகசுரம் S. R. ஞானசுந்தரம்
தவில் M. K. கணேசபிள்ளை
தனாதிகாரி: தவில் K. கணேசரத்தினம்

யாழ்ப்பாணம் இசையாளர் அபிவிருத்தி ஐக்கிய சங்கம்.
Jaffna Musicians' Co-op. Thrift & Mutual Improvement Society.
(Regd. No. J 908 of 22-1-45)

தலைவர்:
இரத்தினகோபால்

காரியதரிசி:
எஸ். ஆர். ஞானசுந்தரம்

இலங்கை இசை வேளாளர் சங்கம்
(கலை, சமூக - பொருளாதார அபிவிருத்தி)
CEYLON ISSAI VELALAR SOCIETY
(Musical- Social- Economic Development)
பதிவு இல: H.A/8/T.A/9/59

பழை கூத்தியவத்தை கிராம அபிவிருத்திச் சங்கம்
PALAI KOOTHIYAWATHAI RURAL DOVOLOPMENT SOCICTY
பதிவு இல RD/NE/J/VN/3236/MI
RD/NE/VN/3236/MI

பழை, தெல்லிப்பழை.

சிவகடாட்சம்பிள்ளை
தலைவர்

எஸ். ஆர். ஞானசுந்தரம்
கௌரவ செயலாளர்

சி. சிவகுமாரன்
கௌரவ பொருளாளர்

அகில இலங்கை இசையாளர் சங்கம்
(கலை - சமூக - பொருளாதார அபிவிருத்தி)
ALL CEYLON ISSAIYARLAR SOCIETY
(Musical - Social - Economic Development)

மாவிட்டபுரம்,
தெல்லிப்பழை.

தலைவர்:
காரியதரிசி:

வலி - வடக்கு பாவனையாளர் சங்கங்களின் பிரதேசசபை
Union of Vali - North Consumers' Societies

தலைவர் :
திரு. வி. சண்முகநாதன்
தெல்லி. வடமேற்கு,
...ளைவாலை.

கௌரவ செயலாளர் :
திரு. எஸ். ஆர். ஞானசுந்தரம்
மாவிட்டபுரம்,
தெல்லிப்பழை.

பொருளாளர் :
திரு. ச. தனபாலசிங்கம்
பலாலி கிழக்கு,
வசாவிளான்.

பழை வீமன்காமம் கிராம முன்னேற்றச் சங்கம்
PALAI VEEMANKAMAM RURAL DEVELOPMENT SOCIETY

President :
V. THIAGARAJAH

Hony. Secretary :
S. R. GNANASUNDARAM

Hony. Treasurer :
S. PONNAMPALAM

# பத்திரிகைகள் கண்ட
# செவ்விகள்

# சமூகசேவை தவிர்க்க முடியாதது...! தவிர்க்கக் கூடாதது!

உதயனில் 24.10.2004 வெளிவந்த அன்னாரின் செவ்வி

யாழ்ப்பாணக் குடாநாட்டுக்குக் கலைஞர் களையும், அறிஞர்களையும் அள்ளித் தந்து பெருமை சேர்த்த ஊர்களில் ஒன்று மாவிட்டபுரம்.

இந்தப் புகழ்மிக்க ஊரில் பிறந்து - இன்று 83 வயதைக் கடந்து - இன் றும் நல்ல சுகதேகியாக - கலைஞனாக - சமூகத் தொண்டனாக - சுறுசுறுப்புடன் இயங் கிக் கொண்டிருப்பவர் பிரபல நாதஸ்வரக் கலைஞர் எஸ்.ஆர். ஞானசுந்தரம்.

அவரது வயதுக்கும் செயற்பாடுகளுக் கும் தொடர்பே கிடையாது. அந்தளவுக்கு அவரது சுறுசுறுப்பான பேச்சும் நடவடிக்கை களும் இப்போதும் துடிப்பாகவே அமைந்தி ருக்கின்றன.

சிறுவயதில் தாய், தந்தையரை இழந்த தால் குடும்பப் பாரத்தை இளமையிலேயே சுமக்கவேண்டியவரானார். தனது 14 ஆவது வயதில் நாதஸ்வரம் வாசிக்கத் தொடங்கி இன்றுவரை வாசித்துக் கொண்டே இருக்கி றார். 23 வயதில் திருமணம்: 3 ஆண்களும் 4 பெண்களுமாக 7 பிள்ளைகள்.

இவரது கலைச்சேவை, சமூகத் தொண்டு என்பவற்றைப் பாராட்டி 'சமூகத் தொண்டன்', 'கலாபூஷணம்', 'கலைஞான கேசரி', 'ஸ்வரஞானகலாபமணி', 'இசை ஞானவாரிதி' உட்பட பல கௌரவப் பட்டங் கள் வழங்கப்பட்டிருக்கின்றன. மூத்த பத் திரிகையாளராகவும் விளங்கும் அவரது அனு பவங்களை அவரே இங்கே பேசுகிறார்.

**துடிப்பான முதுமை பற்றிக் கூறுகிறார் நாதஸ்வரக் கலைஞர் ஞானசுந்தரம்**

**கேள்வி:** *சமூக சேவைகளில் உங்களது ஈடுபாடு எப்படி இருந்தது?*

**பதில்:** *சிறுவயதிலேயே எனது தந்தையார் இறந்துவிட்டார். அதனல் குடும்பப் பாரம் என்மீது வந்தது. இதனால் சற்று வறுமையில் வாடினோம். அப்போது ஊரவர்கள் எனக்குப் பல உதவிகளைச் செய்தார்கள். அதனால் நானும் மக்களுக்கு என்னால் இயன்ற கைமாறைச்*

செய்யவேண்டும் என்ற விருப்பம் எனக்குள் ஏற்பட்டது. அதிலிருந்துதான் சமூக சேவையில் காலடி எடுத்து வைத்தேன்.

பின்னர் சமூக சேவை என்பது தவிர்க்கப்பட முடியாததாகவும் - தவிர்க்கப்படக் கூடாத தாகவும் என்னுடன் இணைந்துவிட்டது.

எனது ஊரில் இருந்த நாவலர் சனசமூக நிலையத்தில்தான் முதன் முதலாக இணைந்து செயற்பட்டேன். அங்கத்தவராக, நிர்வாக உறுப்பினராக, தலைவராக எல்லா மாக இருந்து பணியாற்றினேன்.

அதற்குப் பிறகு அங்கு ஸ்தாபிக்கப்படுகின்ற - சங்கங்கள், தொண்டு நிறுவனங்கள் கிராம அபிவிருத்திச் சபைகள் என்பவற்றில் என்னை நிர்வாக உறுப்பினராக முக்கிய பொறுப்புக்களில் தெரிவு செய்தார்கள். இவற் றுடன் இசைவேளாளர் சங்கத்திலும் இருந்து செயற்பட்டேன். ஏறத்தாழ 35 வருடங்கள் இசைவேளாளர் சங்கத்தின் செயலாளராக இருந்தேன். பின்னர் கடந்த 5 வருடங்களாக - இற்றைவரை தலைவராகக் கடமையாற்று கின்றேன்.

மாவிட்டபுரம் கிராம முன்னேற்றச் சங்கத்தில் முக்கிய உறுப்பினராக இருந்து பணியாற்றியதுடன் அந்தச் சங்கத்துக்கென கட்டிடம் ஒன்றையும் முன்னின்று அமைத்துக் கொடுத்தேன். இதனால் அங்கு எனக்கு 'சமூகத் தொண்டன்' என்ற பட்டம் கிடைத்தது.
'கம்பன் கலைக்கழகம்' என்ற அமைப்பு ஒன்றை ஆரம்பித்து அதன் மூலம் சிலப் பதிகார விழா, இலக்கிய விழா என்பவற்றை நடத்தினோம். 'சிலம்பொலி' என்ற மாதாந்த இதழையும் வெளியிட்டோம்.

இசைவேளாளர் சங்கத்திலிருந்த போது சமூக சீர்திருத்தத்தை நோக்கமாகக் கொண்டு 'இசையாளன்' என்ற இதழை வெளியிட்டோம். கலைகள் வளர வேண்டுமானால் சமூகம் சீராக வளரவேண்டும் என்பதில் நான் உறுதியான நம்பிக்கை வைத்திருக்கிறேன்.

சமூக சேவை செய்வதால் ஏற்படுகின்ற சந்தோஷமும் மனநிறைவும் வேறெதிலும் கிடைக்காது.

நான், எனது குடும்பம் என்று குறுகிய வட்டத்துக்குள் நின்றுவிடாமல் பரந்த மனத்துடன் சிந்தித்து ஏழைகளுக்கு உதவு வதுடன் இன்னல்படும் சமூகத்துக்கு சுமை தாங்கியாக நின்று செயற்படவேண்டும். அதுதான் என்னுடைய நோக்கமாக இருந்தது. இருக்கின்றது.

**கேள்வி:** சமூக ஒடுக்குமுறைகளுக்கு எதிராக முன்னின்று உழைத்து அதனைத் தகர்ப்பதற் குப் பெரும் பணியாற்றியுள்ளீர்கள் என்று அறிந்தோம். அது குறித்து...?

**பதில்:** அந்தக் காலத்தில் யாழ்ப்பாணக் குடாநாட்டில் வேரூன்றிப் போயிருந்த சாதிப் பிரச்சினைகளின் விளைவாக உயர்ந்த சாதியினரின் கோயில் திருவிழாக்கள், விசேட நிகழ்வுகளுக்கு மாத்திரமே தவில், நாதஸ் வரம் வாசிக்கின்ற வழக்கம் இருந்தது. ஒரு முறை சங்கானைப் பகுதியைச் சேர்ந்த ஒரு பிரிவினர் எங்களிடம் வந்து தங்களது வைரவர் கோயில் திருவிழா ஒன்றுக்கு தவில், நாதஸ்வரம் வாசிக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டனர்.

அவர்களின் விருப்பத்துக்கு இணங்க ஒரு சமூகப் புரட்சியைச் செய்து அவர்களுடைய கோயிலில் எப்படியாவது நாதஸ்வரம் வாசிக்க வேண்டும் என்று முடிவுசெய்தேன். அதனை நான் தனியாகச் செய்தால், நான் சமூகத்திலிருந்து ஒதுக்கப்படுவேன் என்பது எனக்கு நன்றாகத் தெரியும். இதனால், யாழ்ப் பாணம் எங்கிலும் உள்ள தவில், நாதஸ்வரக் கலைஞர்களை ஒன்றிணைத்து அவர்களுக்கு விடயத்தை எடுத்து விளக்கி, ஐம்பதுக்கு மேற்பட்ட கார்களில் அனைவரையும் அழைத் துக் கொண்டு குறிப்பிட்ட கோயிலுக்குச் சென்று கச்சேரி செய்தேன்.

தவில், நாதஸ்வரம் வாசிப்பதற்கு இனி மேல் நீங்கள் எந்தக் கலைஞர்களையும் தயங்காமல் சென்று கேளுங்கள். இனியும் அவர்கள் மறுத்தால் பயப்படாமல் என்னிடம் வாருங்கள். நான் உரிய ஏற்பாட்டைச் செய் வேன் என்று அவர்களுக்கு அன்று உறுதி வழங்கினேன். அன்றிலிருந்து இன்று வரை அந்த மக்கள் என் மீது அளவு கடந்த அன்பும் மரியாதையும் வைத்திருக்கின்றார்கள்.

அன்றிலிருந்து சகல சமூகப் பிரிவினரது வைபவங்களுக்கும் தவில், நாதஸ்வரம் வாசிப்பதற்குக் கலைஞர்கள் தயங்காமல் உடன்பட்டார்கள். இதனால் அந்த மக்கள் மிகவும் சந்தோசப்பட்டார்கள். அந்தப் புரட்சியை ஏற்படுத்தியதையிட்டு மன நிறைவடைகின்றேன்.

**கேள்வி:** கலைத்துறையை வளர்ப்பதற்கு எத் தகைய பங்களிப்புச் செய்தீர்கள்?

**பதில்:** நான் ஓர் இசைக்கலைஞன் (நாதஸ் வரம்) என்றவகையில் கலையை வளர்ப் பதற்கு என்னால் இயன்ற பங்களிப்பைச் செய்துள்ளேன், செய்து வருகிறேன்.

ஆரம்பத்தில் மாவிட்டபுரத்தில் இசைப் பாடசாலை ஒன்றை அமைத்து மாணவர் களுக்கு இசையைக் கற்பித்து வந்தோம். அதற்குத் தந்தை செல்வா அவர்கள் மிகவும் உறுதுணையாக இருந்தார்.

பின்னர் தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்தில் பாடசாலை ஒன்றை அமைத்துச் செயற்படுத்தினோம்.

அந்த இசைப் பாடசாலைகள் நீண்ட காலத்துக்கு நின்று தாக்குப்பிடிக்கா விட்டா லும் பின்னர் என்னால் இயன்றவரையில் இளம் சந்ததியினருக்கு நாதஸ்வரக் கலை யைப் பயிற்றுவித்துள்ளேன்.

இப்போதும் கூட இசைவேளாளர் சங் கத்தின் ஊடாக இசைப் பாடசாலை ஒன்றை நிறுவுவதற்கு முயற்சி எடுத்துக் கொண்டிருக் கின்றேன். அந்த முயற்சி விரைவில் கைகூடும் என்று நினைக்கின்றேன்.

**கேள்வி:** நீங்கள் ஒரு மூத்த பத்திரிகையாளர் என்று கூறக் கேள்விப்பட்டோமே...! அந்த அனுபவங்களைச் சற்றுக் கூறமுடியுமா?

**பதில்:** ஆரம்பத்தில் வீரகேசரி பத்திரிகையில் 'யாழும் குழலும்' என்ற பகுதியில் கட்டுரை களை எழுதிக் கொண்டிருந்தேன்.
பின்னர் 'ஈடுநாடு' பத்திரிகை ஆரம்பித்த போது அதன் செய்தியாளராக இணைந்து கொண்டேன்.

அதனைத் தொடர்ந்து 'தினபதி' பத்திரிகை ஆரம்பித்தபோது அதன் ஆசிரியரான சிவ நாயகம் என்னை 'தினபதி'க்கும் செய்தி எழுதும்படி பிடிவாதமாகக் கேட்டுக் கொண் டார். எனது ஒன்றுவிட்ட அண்ணரான அ.செ. முருகானந்தனும் (அ.செ.மு.) 'தினபதி'க்குச் செய்தியாளராகும்படி கேட்டுக் கொண்டார். அதனால் அதிலும் இணைந்து கொண்டேன்.

அப்போது மாவிட்டபுரத்தில் ஆலயப் பிர வேசம் கலவரம் இடம்பெற்ற காலம் .. செய்தி களும் ஏராளம். இரவு, பகலாகச் செய்த எழுதுவதுதான் வேலையாகிவிட்டது. என்னோடு இணைந்து எனது இரண்டு மகன் மாரும் எழுதினார்கள்.

நாதஸ்வரக் கச்சேரிக்கு செல்கின்ற இடங்களில்கூட நான் செய்திகளை எடுத்துக் கொண்டுதான் வருவேன்.

பத்திரிகையாளனாக நீண்டகாலம் கட மையாற்றிய அனுபவத்தை வாழ்வில் மறக்கவேமுடியாது. தமிழாராய்ச்சி மாநாட் டில் கலவரத்தின்போது செய்தி சேகரித்தது உட்பட மறக்கமுடியாத அனுபவங்கள் ஏராளம்.

பத்திரிகைத்துறையில் ஏற்பட்ட ஆர்வ மிகுதியினால் இசைவேளாளர் சங்கத்தின் மூலமாக 'இசையாளன்' என்ற மாதாந்தச் சஞ்சிகை ஒன்றை வெளியிட்டோம். அதன் நிர் வாக ஆசிரியராக நான் கடமையாற்றினேன்.

பிற்காலத்தில் 'உதயன்' பத்திரிகையிலும் அதன் ஆசிரியரின் ஊக்குவிப்புடன் செய்தி யாளராகப் பணியாற்றினேன். 'இசையாளன்' சஞ்சிகைக்கு நல்ல வரவேற்புக் கிடைத்தது. அந்தக் காலத்தில் சஞ்சிகை வெளியிடுவ தென்றால் மிகவும் கடினமான விடயம். பல்வேறு வசதியீனங்களுக்கு மத்தியிலும் சிலகாலம் அந்தச் சஞ்சிகையை வெளி யிட்டேன்.

'இசையாளன்' சஞ்சிகைக்கு இந்தியா விலேயே பெரும் வரவேற்புக் கிடைத்தது. இந்தியாவிலுள்ள கலைஞர்கள் பலர் அந்தச் சஞ்சிகையைப் பார்த்து விட்டு எனக்கு மிகுந்த பாராட்டுத் தெரிவித்தார்கள். இப் போது எனது பிள்ளைகள் இருவர் எனது வழியில் பத்திரிகையாளராகக் கடமையாற் றிக் கொண்டிருக்கின்றனர்.

**கேள்வி:** உங்கள் வாழ்வனுபவங்களுக்கூடாக இன்றைய இளம் தலைமுறையினருக்கு என்ன கூற விரும்புகிறீர்கள்?

**பதில்:** எனது கலை ஒரு பாரம்பரியக் கலை. இக்கலை மக்களுக்கு மட்டுமல்ல இறை வனுக்கும் உரியது. எனவே, இக்கலையில் ஈடுபாடும் இளைஞர்கள் நியம, நைமித்தி யங்களோடு அதனைச் செய்தல்வேண்டும். ஆலயத் தொண்டு செய்யும்போது ஆலயங் களின் சட்டதிட்டங்களுக்குக் கட்டுப்பட்டுத் தொண்டு செய்யவேண்டும்.

இதுவரை காலமும் ஏனைய கலைகள் போன்று நாதஸ்வரக் கலையை அரசு ஆதரிக்கவில்லை. அதாவது பயிற்சிகள் வழங்க முன்வரவில்லை. ஆனால், இப் பொழுது வட இலங்கை சங்கீத சபை இதை அங் கீகரித்துள்ளது.

எனவே மாணவர்கள் நாதஸ்வரக் கலை யைக் கற்பதோடு,தமது கல்வியையும் கற்று நுண்கலைப்பீடத்தில் எமது கலையைப் பிர காசிக்கச் செய்யவேண்டும். கலையை அழியவிடாது காக்கவேண்டும்.

என்னைப் பொறுத்தவரை கலை என்பது அனைவருக்கும் பொதுவான ஒன்று. எந்தக் கலையையும் சமூக வேறுபாடுகள் - ஏற்றத் தாழ்வுகள் இன்றி இளைய தலைமுறையினர் பயிலவேண்டும்.

சமூகத் தொண்டும், கலை ஈடுபாடும் மனிதனை முழுமையாக்க இன்றியமை யாதவை. அந்தக் காலத்தில் எவ்வளவோ கஷ்டங்களின் மத்தியில்தான் நாதஸ்வரக் கலையைப் பயின்றேன். வறுமை ஒருபுறம் இருந்தாலும் அதற்குள்ளும் எப்படியாவது இந்தக் கலையைப் பயின்றுவிட வேண்டும் என்று விடாமுயற்சியுடன் செயற்பட்டேன். அதனால்தான் இன்றுவரை ஒரு நல்ல தொழி லாகவும் எனக்குப் பெருமை சேர்க்கின்ற கலையாகவும் நாதஸ்வரக் கலை எனக்குக் கைகொடுக்கின்றது.

எனவே, இன்றைய இளம் தலைமுறை யினர் கலைகளை நன்கு கற்க வேண்டும். அவை எதிர்காலத்தில் எமக்குப் பெருமை சேர்க்கும் சாதனங்களாக மட்டுமன்றி, எம்மை யும் எமது குடும்பத்தையும் சிறப்பாக வாழ வைக்கின்ற தொழில்களாகவும் அமையும்.


வாசிப்பு எழுத்துப் பழக்கங்கள் சிறுவயதி லிருந்தே இருக்கவேண்டும். பத்திரிகைகள், சஞ்சிகைகள் இலக்கிய நூல்கள் பல வற்றையும் வாசிக்கவேண்டும். அதிகமாக வாசித்தால் எழுத்தாற்றல் தானாகவே கைகூடும். சிறுசிறு ஆக்கங்களை எழுதி பத்திரிகைகளுக்கு அனுப்பலாம். அப்படித் தான் நான் ஆரம்பத்தில் அனுப்பிக் கொண்டி ருந்தேன். பின்னர் நான் பத்திரிகையாள னாவதற்கு அதுவே களமாக அமைந்தது.

எனவே, எதற்கும் முயற்சி செய்தால் உரிய வெற்றியை அடையலாம். சிறுவயதில் கல்வி கற்பது அவசியம். கற்காமல் அக் கறையீனமாக இருந்தால் பின்னர் அதை நினைத்து கவலைப்படநேரும். பாடசாலைக் கல்வியுடன் கூடவே விரும்பிய கலைகளையும் பயிலுங்கள்.

**கேள்வி :** உங்கள் இளமையின் இரகசியம்...?

**பதில்:** (சிரித்தபடி) நான் செல்லமாக வளர்ந்த வன் என்று சுருக்கமாகச் சொல்லலாம். எனது குடும்பத்தினரின் நல்வழிப்படுத்தலால் கேடான வழிகளில் செல்லாமல் வாழ்ந்தேன். ஆசார, அனுஷ்டானங்களைக் கடைப்பிடித்து நல்ல ஒரு குடும்பத்தினரின் முன்மாதிரியால் வாழ்ந்தமையால் இன்றும் என்னால் உற் சாகத்துடன் வாழமுடிகிறது. இன்றைய இளை ஞர்கள் தமது இஷ்டப்படி தான்தோன்றித் தனமாக வாழ்கின்றார்கள். இதுவே அவர் களுக்குச் சிறுவயதில் நோய்கள் தோன்ற வும், வேர்வாக இருப்பதற்கும் காரணம். எனவே, இளைஞர்கள் தீயவழிகளில் நாட்டம் கொள்வதை விடுத்து ஒருகட்டுப்பாடான முறையில் வாழ்ந்தால் என்றும் இளமை தான். தாம் எடுக்கும் காரியங்களை மனம் சலிக்காது உற்சாகத்துடன் செய்துவர வேண் டும். உடற்பயிற்சியும் இளமையைத் தக்க வைக்கும் காரணி. எனவே, இளைஞர்கள் உடற்பயிற்சிகளிலும் அதிகம் ஈடுபட வேண்டும்.

செவ்வி : அலங்காரன்



Ceylon National Association for the Prevention of Tuberculosis
Valikamam North & South Branch
இலங்கைத் தேசிய கயரோகத் தடுப்புச் சங்கம்
SOMASUNDARAM RAMAN
Name: GNANASUNDAR
MAVIDDAPURAM
Address: TELLIPPAL
REPORTER
Designation:
Signature:
EELANADU LIMITED
17-12
PALAI - KOOTHIAWATHAI COMMUNITY CENTR
ஞானம் அலங்கரித்த பதவிகள்
சிவமயம்
பளை - கூத்தியவத்தை சனசமூக நிலையம்
Palai - Koothiawathai Community Centre
பதிவு இல. J / TC 3 / CC / 324
கௌரவ செயலாளர் :
திரு. எஸ். ஆர். ஞானசுந்தரம்
மாவிட்டபுரம்,
தெல்லிப்பழை.
பொருளாளர் :
திரு. மு. சின்னத்துரை
பளை,
தெல்லிப்பழை.
மாவிட்டபுரம்
தெல்லிப்பழை
பளை - வீமன்காமம் கிராமோதய சபை
Palai Veemankamam Gramodaya Sabai
பளை கூத்தியவத்தை கிராம அபிவிருத்திச் சங்கம்
PALAI KOOTHIYAWATHAI RURAL DOVOLOPMENT SOCICTY
பதிவு இல: RD / NE / J / VN / 3236 / MI

## கலை ஊடகத்துறைகளில் முன்னிலை வகித்த நாதஸ்வரக் கலைஞர் ஞானசுந்தரம்

முதுபெரும் கலைஞர் நாதஸ்வர வித்துவான் எஸ். ஆர். ஞானசுந்தரம் அவர் களுக்கு தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ் தானம் அன்னை தங்கம்மா அப்பாக்குட்டியின் 85 ஆவது பிறந்தநாள் அறக்கொடை விழா வில் 'சிவத்தமிழ்' விருது வழங்கிக் கௌர வித்தமை பத்திரிகையாளர்கள், எழுத்தாளர் கள், நாதஸ்வர வாத்தியக் கலைஞர்கள், இசைவேளாளர் சமூகத்தினரைப் பெரிதும் மகிழ்வித்த ஒரு நிகழ்வாக அமைந்தது.

**87 ஆவது அகவையில் துர்க்காதேவி தேவஸ்தானத்தில் விருதுபெற்ற பின்னர் உதனுக்கு வழங்கிய செவ்வி**

### அதி முக்கியத்துவம் பெறும் விருது

ஏற்கனவே ஞானசுந்தரம் அவர்கள் கலாபூஷணம் விருதினைப் பெற்றுக்கொண்ட சிறப் புக்குரியவர். அத்துடன் சமாதான நீதவான் பட்டத்தையும் பெற்றுக்கொண்ட கௌரவமும் அவருக்குண்டு. இவை எல்லாவற்றையும் விட இன்று அவர் பெற்றுக் கொண்டுள்ள 'சிவத் தமிழ்' விருது அதி முக்கியத்துவம் பெறு கின்றது.

### பாராட்டுகளுக்கு உரியவர்கள்

ஞானசுந்தரம் அவர்களுக்கு இன்று 90ஆவது அகவை அண்மிக்கின்றது. தளர்ந்து விட்டார். மெலிந்து விட்டார். நீரிழிவு நோய் அவரைத் தாக்கிவிட்ட காரணத்தால் கண் பார்வையும் செயலற்று விட்ட வேளையில் அவர் வாழும் காலத்திலேயே அவரைக் கௌரவித்த துர்க்கா தேவி தேவஸ்தானத் தினர் பாராட்டுதல்களுக்கு உரியவர்களாகின்றனர்.

### மாவிட்டபுரம் தேவஸ்தானம்

யாழ். குடாநாட்டில் இரவு பகலென்று வித்தியாசமில்லாமல் கோயில் திருவிழாக்கள் நடைபெற்ற காலத்தில் பல முன்னணி நாதஸ் வர வித்துவான்களைப் பேணி வளர்த்தெடுத்த பெருமை மாவிட்ட புரத்திற்கும் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் தேவஸ்தானத்திற்கும் உரியதாகும். மாவிட்டபுரம் உருத்திராபதி நாயனக்காரரின் மரபில் உதித்த ஞான சுந்தரம் அவரின் சகோதரரின் மகனாவர்.

ஞானசுந்தரம் அவர்களை வளர்த் தெடுத்த பெருமையில் உருத்திராபதி நாய னக்காரருக்குப் பெரும் பங்குண்டு. அந்தக் காலத்தில் ஞானசுந்தரம் இலங்கை, இந்தியா வைச் சேர்ந்த பல முன்னணி வித்துவான் களுடன் சேர்ந்து நாதஸ்வரம் வாசித்துச் சிறப்புப் பெற்ற பெருமைக்குரியவர்.

## ஞானமும் சுந்தரமும்

ஞானசுந்தரம் அவர்களுடைய வாசிப்பில் ஞானமும் இருக்கும் சுந்தரமும் இருக்குமென அவரது இரசிகர்கள் பலர் கூறக் கேட்டிருக் கிறேன். நாதஸ்வரக் கலைஞர்களுக்குரிய நடை, உடை, பாவனை, காதில் கம்மல், சிரித்த முகத்துடன் அவர் எவரையும் வசீகரிக் கும் பண்பினர். இவரை யான் அதிகம் அறிந்து கொண்டது முதன் முதலில் ஒரு பத்திரிகை யாளராகத்தான். தினபதி, சிந்தாமணி, உதயன் ஆகிய பத்திரிகைகளுடன் இவருக்கு அதிக தொடர்புகள் இருந்தன. இவர் "இசையாளன்" என்ற பெயரில் தமது சமூக மேம் பாட்டிற்கான பத்திரிகை ஒன்றையும் நடத்திய பெருமைக்குரியவர். 'சிலம்பொலி' என்ற பத்திரிகையை நடத்திய சிறப்பு இவருக்குண்டு.

## நல்லுறவு பேணியவர்

சமூக சேவையிலும் தனக்கென தனி முத்திரை பதித்த ஞானசுந்தரம் வீமன்காமம் கிராமோதய சபையின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுச் சிறந்த சேவையாற்றியவர். பளை கடத்தியாவத்தைக் கிராம அபிவிருத்திச் சங்கம், மாவிட்டபுரம் கிராம அபிவிருத்திச் சங்கம், கடத்தியாவத்தை சனசமூக நிலையம், தெல்லிப்பழை ப.நோ.கூ சங்கம், கம்பன் கலைக்கழகம், காசநோய் தடுப்புச் சங்கம், தெல்லிப்பழை வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கம் போன்ற அமைப்புகளில் பல முக்கிய பதவிகளை வகித்து அர்ப்பணிப்புடன் செயற்பட்டவர். சமூகசேவை மனப்பான்மை இயல்பாகவே அவரிடம் காணப்பட்டமையே இதற்குக் காரணம் என்பேன்.

## இளைய தலைமுறையினர் அறியார்

இவர் 'இசையாளன்', 'சிலம்பொலி' ஆகிய பத்திரிகைகளை இன்று அறுபது ஆண்டுகளுக்கு முன்பே நடத்தியவர் என்ற இவரது வரலாற்றை இன்றைய இளைய தலைமுறையினர் அறியமாட்டார்கள்.

## இசை வேளாளர் சங்கம்

இவர் இசை வேளாளர் சங்கத்தைத் தாபித்து இசை வேளாளர்களின் முன்னேற் றத்துக்காகப் பாடுபட்டவர்.

ஞானசுந்தரம் அவர்கள் ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தில் ஆரம்பிக்கப்பட்ட மங்கள இசைப் பாடசாலையில் ஆசிரியராகப் பணியாற்றி நாதஸ்வரக் கலையைப் பல மாணவர்களுக்குக் கற்றுக் கொடுத்த விற் பன்னர். தமது இந்த வயதிலும் நாதஸ்வரக் கலைஞர்களுடைய பழைய அந்தப் பாரம் பரியங்களைப் பேணிப் பாதுகாத்து வருபவர்.

தனது சமூகத்திற்கும் தமது துறைக்கும் தமது கிராமத்திற்கும் தமது நாட்டிற்கும் பிறிதொரு நாதஸ்வரக் கலைஞர் இவரைப் போல அர்ப்பணிப்புடன் தொண்டாற்றி யிருப்பார் எனக் கூற இயலாது.

**தணியாத தாகம்**

தமது காலத்தில் எப்படியாவது ஒரு காணி வாங்கி அதில் இசை வேளாளர்களுக் கான இசைப் பயிற்சிக் கல்லூரி ஒன்றை நிறுவ வேண்டும் என்பது இவரது மனதில் உள்ளதொரு தாகமாகும். மகேஸ்வரன் அவர்கள் இந்து கலாசார அமைச்சராக இருந்தபோது மேற்படி கல்லூரி ஒன்றை நிறுவுவதற்கான திட்டமொன்று முன் வைக்கப்பட்டபோதும் துரதிஷ்டவசமாக அம் முயற்சி கைகூடவில்லை.

**வரலாற்றுக் கடமை**

துர்க்காதேவி தேவஸ்தானம் ஞான சுந்தரம் அவர்களுக்குச் 'சிவத்தமிழ் விருது' அளித்ததன் மூலம் அவரை மட்டுமல்லாமல் அவரது முழுச் சமூகத்தையுமே கௌரவித்துள்ளது எனலாம். இதேவேளை, துர்க்கா தேவி தேவஸ்தானம் தனது வரலாற்றுக் கடமை ஒன்றையும் நிறைவேற்றி உள்ளது. ஞானசுந்தரம் அவர்களை இன்றைய இளைய தலைமுறையினருக்கு அறிமுகஞ் செய்து வைக்க வேண்டும் எனப் பெரிதும் அவாக் கொண்டிருந்தேன்.

அக் கைங்கரியத்தை ஏற்படுத்தித் தந் தமை எல்லாம்வல்ல அந்தத் துர்க்காதேவி யின் திருவருளே என்பேன்.

செல்லப்பா நடராசா
மூத்த ஊடகவியலாளர்

பழியஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை
வழியெஞ்சல் எஞ்ஞான்றும் இல்

அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை அஃதும்
பிறன்பழிப்பது இல்லாயின் நன்று.

# நியம நிஷ்டைகளுடன் ஆற்றவேண்டிய தெய்வீகக் கலை நாகசுரம்

உதயனில் 07.07.2001 வெளிவந்த அன்னாரின் செவ்வி

நாகசுரக் கலை தெய்வீகமானது. தெய்வத்தை மகிழ்விக்கக்கூடியது. அத்துடன் நியமநிஷ்டைகளுடன் செய்யவேண்டிய கலை களில் ஒன்று.

எந்தவொரு நாகசுரக் கலைஞன் நியம நிஷ்டைகளுடன் கலையைப் பின்பற்றுகின்றானோ அவனே சீரும் சிறப்பும் மிக்க வாழ் வைப் பெற்றுக் கொள்கின்றான்.

இவ்வாறு தனது நீண்டகால கலை அனு பவத்தை - அடக்கத்தை வெளிப்படுத்தியிருக்கின்றார் மூத்த நாகசுரக் கலைஞர் மாவையூர் எஸ்.ஆர். ஞானசுந்தரம் (வயது 78).

எஸ்.ஆர். ஞானசுந்தரம் ஒரு மூத்த நாக சுரக் கலைஞர். அதுமட்டுமன்றி இன்று நம் மத்தியிலும் வாழும் மூத்த பத்திரிகை யாளரும் கூட.

இவர் வயது முதிர்ந்த நிலையிலும் நாக சுரக் கலையை வளர்க்க வேண்டும் என்ற ஒரே சிந்தனையுடன் வாழும் கலை விரும்பி யும் கூட.

இத்தகைய பெருங்கலைஞனை 'கலைச் சுடர்' பகுதிக்காகச் செவ்வி காணச் சென் றேன். இருகரங்கூப்பி என்னை வரவேற்ற அந்த அன்பு உள்ளம் தனது நாகசுர வரலாறு பற்றி மனம் விட்டுப் பேசத் தொடங்கியது.

1923 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 7 ஆம் திகதி மாவிட்டபுரம் பதியில் சோ. இராம நாதன் என்பவருக்கும் நாகம்மா என்பவருக் கும் மூத்த புதல்வனாக ஞானசுந்தரம் பிறந்தார்.

காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரி யில் கல்வியைத் தொடர்ந்த இவர் இளமை யிலேயே நாகசுரக் கலை மீது கொண்ட பற்றுக் காரணமாக மாவிட்டபுரத்தைச் சேர்ந்த தனது உறவினர்களான பக்கிரிசாமிப் பிள்ளை, உருத்திராபதி, நடராஜா ஆகியோரி டம் நாகசுரக் கலையை முறைப்படி கற்று கலையுல கில் நுழைந்து கொண்டார். 14 வயதில் தனது தந்தையை இழந்தது இவர் நாகசுரக் கலைக் குள் நுழையக் காரணமாயிற்று.

நாகசுரக் கலையை - அதன் தனித்து வத்தை - இந்தியா சென்றும் கற்க விரும்பிய கலாபூஷணம் ஞானசுந்தரம் தமிழ் நாட்டின் சிறந்த நாகசுரக் கலைஞனான திருச்சறை கிருஷ்ணமூர்த்தியை அணுகி 4 வருடங்கள் நாகசுரக் கலை வாழ்வைக் கற்றுக் கொண்டார்.

பின்னர் நாடுதிரும்பிய அவர் தமிழ் நாட்டின் மூத்த - சிறந்த- தவில் வித்துவான்கள், நாகசுரக் வித்துவான்களை இலங்கைக்கு - யாழ்ப்பாணத்துக்கு அழைத்து வந்து பல்வேறு இடங்களில் கச்சேரிகளை நடத்தினார். தவில் வித்துவான் மீனாட்சிசுந்தரம், நாகசுர வித்து வான் கண்ணப்பாபிள்ளை ஆகியோர் இவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள்.

தஞ்சாவூர் ஜில்லாவிலுள்ள திருப்புகழூர் என்ற ஊரே தமது மூதாதையரின் சொந்தவூர் எனக் குறிப்பிட்ட 'கலாபூஷணம்' ஞானசுந்தரம் மாவைக் கந்தன் ஆலயத்தில் நாகசுர சேவை யைச் செய்வதற்காக தமிழ்நாட்டில் இருந்து குடும்பமாக யாழ்ப்பாணத்தில் வந்து குடி யேறியதாகவும் தெரிவித்தார்.

இதன்மூலம் மாவைக்கந்தன் ஆலயத் தின் நாகசுரக் கலைஞர் பரம்பரையில் நான்காவது தலைமுறையைப் பேணும் வாய்ப்பு தனக்குக் கிடைத்ததாகவும் அவர் தெரிவித்தார்.

மாவைக்கந்தன், நல்லூர்க்கந்தன், யாழ். சிவன் உட்பட குடாநாட்டின் பல்வேறு ஆலயங்களிலும் நாகசுரக் கலைஞர் ஞான சுந்தரம் நாதமழை பொழிந்திருக்கின்றார். தற்போது மாதகல் நுணசை முருகமூர்த்தி ஆலயம், குப்பிளான் கற்கரை விநாயகர் ஆலயம்ஆகியவற்றில் ஆதீன வித்துவானா கவும் விளங்கி வருகின்றார்.

வடலியடைப்பு நாகசுரவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை, யாழ்ப்பாணம் நாகசுர வித்துவான் அப்புலிங்கம்பிள்ளை ஆகியோர் கலாபூஷணம் ஞானசுந்தரத்துடன் இணைந்து நாதமழை பொழிந்த மூத்த கலை ஞர்களில் சிலராவர்.

'நாகசுரக் கலையை விரும்பிக் கற்போரின் எண்ணிக்கை குறைந்து வருகிறது. எதிர் காலத்தில் நாகசுரக் கலைஞர்களைக் காண் பது மிகவும் அரிதாகவே இருக்கும் என்ற ஐயப்பாடும் உருவாகி வருவதை மறக்க முடியாது.

'நாகசுரக் கலையைக் கற்பதை விரும் பாத பெற்றோர்கள் பலர் தமது பிள்ளைகளை உயர் கல்வியைத் தொடர்வதிலும் உத்தி யோகங்களைப் பெற்றுக் கொள்வதிலும் அதி கவனம் செலுத்துமாறு வழிப்படுத்துகின்றனர்.

இதற்குக் காரணமும் இல்லாமலில்லை. நாகசுரக் கலைஞர்களுக்கு வழங்கப்படும் ஊதியம் போதாது. அத்துடன் ஒவ்வோர் வருட மும் பங்குனி முதல் ஆவணி வரையிலான ஆறு மாதகாலமே ஆலயங்களில் உற்சவங் கள், திருமண வைபவங்கள் அதிகளவில் இடம்பெறுகின்றன. இதனால் ஏனைய மாதங் கள் தொழிலின்றி இருக்கும் நிலையும் உள் ளது. எனவே இத்தகைய நிலையை வளரும் சந்ததியினர் பெரிதும் விரும்பவில்லைப் போலும்' என்று நாகசுரக் கலை பற்றிய இன் றைய உலகக் கண்ணோட்டத்தை விவரித்தார் ஞானசுந்தரம்.

நாகசுரக் கலையை வளர்க்க இளம் தலை முறையினர் முன்வரவேண்டுமெனக் குறிப் பிடும் அவர் இந்துசமயம் சார்ந்த அமைச் சர்கள், திணைக்களங்கள் இளம் கலைஞர் களை ஊக்குவிக்கும் வகையில் பல்வேறு திட்டங் களை முன்னெடுக்கவேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

இலங்கை இசை வேளாளர் சங்கத்தில் சுமார் 40 வருட காலமாகத் தலைவராகவும் செயலாளராகவும் பதவி வகித்த கலாபூஷ ணம் ஞானசுந்தரம், அந்தச் சங்கத்தின் மூலமாகப் பல்வேறு ஆக்கபூர்வமான செயற் றிட்டங்களை முன்னெடுத்தும் உள்ளார்.

மாவிட்டபுரத்தில் நிறுவப்பட்ட நாகசுரப் பயிற்சிப் பாடசாலை, தெல்லிப்பழையில் நிறுவப்பட்ட பயிற்சிப் பாடசாலை, இணு விலில் நிறுவப்பட்ட பயிற்சிப் பாடசாலை என்பன நாகசுர இசைமணி எஸ்.ஆர். ஞானசுந்தரத்தின் பெருமுயற்சிகளால் தோற் றம் பெற்றவை.

மேற்படி மூன்று பாடசாலைகளும் இன்று செயலிழந்த நிலையில் இருப்பதை வேத னையுடன் சுட்டிக்காட்டினார்.

மேலே கூறப்பட்ட மூன்று பாடசாலை களும் பல்வேறு மாணவர்களைப் பயிற்று வித்து, நாகசுரக் கலையின் வளர்ச்சிக்குப் பங்காற்றியதை நினைவுகூர்ந்த ஞானசுந் தரம், கலைஞர்கள் மத்தியில் காணப்படும் 'வித்துவக் காய்ச்சல்' அகற்றப்பட வேண்டி யது என்றும் மனந்திறந்து தெரிவித்தார்.

கலாபூஷணம் ஞானசுந்தரம் சிறந்த நாகசுரக் கலைஞர் மட்டுமல்ல, சிறந்த சமூக சேவையாளரும் கூட. மாவிட்டபுரத்தில் இயங்கிய கிராம அபிவிருத்திச் சங்கங்கள், சனசமூக நிலையங்கள் ஊடாக இவர் பல்வேறு சேவைகளை ஆற்றியுள்ளார். இவரது சமூக சேவையைப் புகழ்ந்து யாழ். முன்னாள் அரசாங்க அதிபர் லால் விஜயபாலா 'கலாபூஷணம்' ஞானசுந்த ரத்துக்கு 'சமூகத் தொண்டன்' என்ற பட் டத்தை வழங்கினார்.

முன்னொருகாலத்தில் அமைச்சர்கள், பிரதமர் முதலியோர் அடிக்கடி விமானம் மூலம் யாழ்ப்பாணம் வருவதுண்டு, இவ்வாறு வருவோருக்குப் பலாலி விமானத் தளத்தில் நாகசுர இசை முழங்க வரவேற்பு அளிக்கப் படும். இந்த நாகசுர முழக்கம் கலாபூஷணம் ஞானசுந்தரத்தின் தலைமையில் இடம் பெறும்.

நாகசுரக் கலைஞரான ஞானசுந்தரம் 'தினபதி', 'ஈழநாடு', 'வீரகேசரி', 'உதயன்' ஆகிய பத்திரிகைகளுக்கான பிரதேசச் செய்தியாளராகவும் கடமையாற்றியுள்ளார்.

நாகசுரக் கலைஞர்களில் சிலர் இன்று மதுவுக்கும் மாமிசத்துக்கும் அடிமையாகி விட்டதை மனம் நொந்து கூறிய ஞானசுந்தரம் சம்பந்தப்பட்டவர்கள் மனம் திரும்பி மீண்டும் கலையுலகில் பிரவேசிக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

ஆனந்தன்

## உதயன் மக்கள் முகம் பகுதியில்...

பாரம்பரியமான நாதசுர, தவில் கலை களை அழியாது பாதுகாக்க வேண்டும். அவற்றைப் பேணும் இசைவேளாளர் சமூகம் கலை, சமூக, பொருளாதார அபிவிருத்தியில் மேலோங்க வேண்டும் என்ற நோக்கில் 40 ஆண்டு காலம் எஸ்.ஆர். ஞானசுந்தரம் ஆற் றிய பணிக்குரிய கௌரவமாக 'கலாபூஷணம்' விருது கிடைத்துள்ளது. சரித்திரப் பிரசித்தி பெற்ற மாவிட்டபுரம் கிராமத்தில் புகழ்பூத்த இசைவேளாளர் மரபில் பக்கிரிசாமி இராம நாதன், உருத்திராபதி, நடராஜா ஆகிய இசை விற்பன்னர்களின் குடும்பத்தில் மூத்த ஆண்மகனாகவும் இராமநாதன் அவர்களின் மகனாகவும் பிறந்து சிறு வயதி லிருந்தே நாதஸ்வரத்தை பெரிய தந்தை, சிறிய தந்தையர்களிடமும் பின்னர் வண்ணை சிவன் கோயில் ஆதீன வித்துவான் கந்த சாமிப்பிள்ளையிடமும் பயின்று இந்தியா சென்று பல வித்துவான்களிடம் மேலும் கலையை விருத்தி செய்து இன்றுவரை நாதஸ்வரத்தைக் கையாண்டு வருகிறார். இவற்றை விட வட இலங்கைச் சங்கீத சபைப் பரீட்சையில் புல்லாங்குழல் பாடத்தில் 5ஆம் தரம் வரை சித்தியடைந்துள்ளார்.

இசைவேளாளர் சமூக மறுமலர்ச்சிக் காக இசைவேளாளர் சங்கத்தைப் புனர மைத்துக் கடந்த 40 ஆண்டுகளாகத் தலைவ ராகவும் செயலாளராகவும் இருந்து பல்வேறு பணிகளை ஆற்றியுள்ளார். 'இசையாளன்' என்னும் பத்திரிகை ஒன்றையும் நடத்திவந் துள்ளார். யாழ். அரசாங்கச் செயலக கலா சார பேரவையால் தெல்லிப்பழை துர்க்கா தேவி ஆலயத்தில் நடத்தப்பட்டு வந்த நாத சுர, தவில் பயிற்சிப் பாடசாலையில் இரண்டு ஆண்டுகள் நாதசுரத்திற்கான ஆசிரியராகக் கடமையாற்றியுள்ளார். அவரது இசைப் பணியைக் கௌர வித்து துர்க்காதேவி தேவஸ்தானம் பொன் னாடை போர்த்திக் கௌரவம் அளித்தது.

இசைப்பணியுடன் சமூகப் பணிகள் பல வற்றில் சிறப்புடன் ஈடுபட்டமைக்காக மாவை கொல்லங்கலட்டி கிராம அபிவிருத்திச் சங் கக்கட்டடத் திறப்பு விழாவில் வைத்து யாழ் அரச அதிபரால் "சமூகத் தொண்டன்" என்னும் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். சபைத் தலைவராகவும் விளங்கியுள்ளார். மேலும் கிராம அபிவிருத்திச் சங்கம், சனசமூக நிலையம், கம்பன் கழகம், மக்கள் குழு, தெ.ப.நோ.கூ. சங்கம் உட்பட பல பொது அமைப்புகளில் பதவிவகித்துப் பணிகளை ஆற்றி வருகிறார்.

வீரகேசரி, தினகரன் போன்ற பத்திரிகைகளில் அன்னாரின் இசை ஆராய்ச்சிக் கட்டு ரைகள் பல வெளிவந்துள்ளன. ஈழநாடு, தினபதி, சிந்தாமணி ஆகிய பத்திரிகைகளில் நிருபராகப் பணியாற்றிச் செய்திகள், கட்டுரைகள், ஆக்கங்கள் என்பவற்றை எழுதியுள்ளார். உதயன் - சஞ்சீவி பத்திரிகைகளின் காங்கேசந்துறைச் செய்தியாளராகச் சிறப்பாகப் பணியாற்றியவர். மொத்தத்தில் நாடு பெருமைப்படக்கூடிய கலைஞர்.

– செம்பியன்.

# ஞானம் அவர்கள் உதிர்ந்த கருத்துக்கள்

## உங்கள் முன் சமர்ப்பிக்கிறோம்

> ஞானத்தின் 'இசையாளன்'
> பத்திரிகையின் ஆசிரிய தலையங்கம்

இன்றைய இலங்கை எத்துறையில் தேய்ந் திருந்தாலும் பத்திரிகைத்துறையைப் பொறுத்தள வில் அது முற்றிலும் வளர்ந்த முழுநிலாவாகும். மற் றைய சமூகங்கள் கனவிலும் எட்டிப் பிடிக்க முடியாத அளவிற்குச் சீரும் சிறப்பும் மிகுந்த ஈழத்தில் பழம் பெரும் ஏடுகள் எண்ணத் திலும் வண்ணத்திலும் - சிறந்து வளரும் நேரத்தில் நாமும் ஏதோ எடுத்தோம் தொடுத்தோம் என இவ்விதழை உங்கள் முன் சமர்ப்பிக்கின்றோம்.

மணல் வீடு கட்டியது போன்று, இதழ் வெளியிடக்கூடியவர்களுக்கிடையே - மண்வீடு கட்டும் சிறுவர்களைப் போல - நாம் இருக்கின்றோம். ஈழத்துப் பெரும் எழுத்தாளர் களின் படைப்புக் களிடையே சிறு குழந்தை ஒன்று தன் பிஞ்சு விரல்களால் குறுக்கும் நெடுக்குமாகக் கீறிய கோடுகள் இடம்பெற்றது போல் அறிவுமிக்க பெரியார்களின் கண்கவரும் இதழ்களுக்கிடையே நாமும் எமது இசையாளர்களின் மறுமலர்ச்சிக்காக சிறியோராகிய எமது சிறு சஞ்சிகையை இசைப் பெரும் குடிமக்கள் முன் படைக்கின்றோம்.

இசையாளர் சமூகத்தை வளர்க்க வேண்டும் என்ற இலட்சியத்தை முன்வைத்துத் தமிழர் பெருநாளாம் பொங்கல் திருநாளை அடுத்து இந்த இதழ் மலரவேண்டும் என்ற பேராவலால் எத்தனையோ துன்பங்களுக்கிடையே இவ்விதழை வெளியிடுகின்றோம். இதனால் இவ்விதழில் எதிர்பாராது ஏற்படும் குறைகுற்றங்களை இசையாளர்களின் அன்பு உள்ளம் மன்னிக்கும் என்ற நம்பிக்கை எமக்குண்டு. இந்த நற்பணியை ஆரம்பித்தபோது நாம் எதிர்கொண்ட இடையூறுகள் பல. ஒவ்வொன்றையும் சகித்துக்கொண்டு நடக்க வேண்டியிருந்தது. நிதி நிலைமை பயமுறுத்தியது. அதனையும் எமது தளராத முயற்சியால் தகர்த்து எறிய வேண்டியிருந்தது.

இந்த இதழ் வளரத் தங்கள் விளம்பரங்களாலும் பொருளாதாரத்தாலும் உதவிசெய்து உடனிருந்து ஒத்துழைக்க முன்வரும் எமது சமூகத்தினருக்கு எமது இதயம் கனிந்த நன்றி உரித்தாகுக.

வசதிவாய்ப்புகள் ஏதுமற்ற சிறுவர்களின் படைப்பாதலால் இதில் குற்றம் குறைகள் இருப்பின் அவற்றைப் பொருட்படுத்தாது நல்லவற்றைச் சுவைத்துத் தீயவற்றைத் அகற்றி எமக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்கும்படி அன்புடன் வேண்டுகின்றோம்.

இக்காணிக்கையை முடிப்பதற்கு முன் இசையாளர்களின் பொருளாதார சமூக கலை வளர்ச்சியே எமது கொள்கை என்பதையும், இக்கொள்கைக்குக் குறுக்கே நிற்பவர்கள் வடமேரு போன்ற புகழ்மிக்கவர்களாக இருந்தாலும் அவர்களை எதிர்க்கவும், அதேநேரத்தில் இக்கொள்கைக்கு ஆக்கம் அளிப்பவர்கள் எவ்வளவு குறைந்தவர்களாக இருந்தாலும் அவர்களை உச்சி மீது வைத்துப் போற்றவும் 'இசையாளன்' தயங்கான் என்பதையும் பணிவுடன் - உறுதியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

## வலி வடக்கு மக்கள் பற்றி ஞானம் கூறியவை...

'அநீதியும் அக்கிரமமும் அதிகநாள் நீடித் ததாக வரலாறு இல்லை. ஆகவே, வலி. வடக்குமக்களும் மனம் தளர்ந்துவிடக்கூடாது. எமது பாரம்பரிய பூமியில் நாம் மீண்டும் குடியமரும் நாள் வெகுதொலைவில் இல்லை என்ற மனோதிடத்துடன் செயற்படவேண்டும்'.

இவ்வாறு வலி. வடக்கு பளை, கூத்திய வத்தை சனசமூக நிலையத்தின் விசேட பொதுக்கூட்டத்திற்கு தலைமை வகித்து உரையாற்றிய நிலையத் தலைவர் எஸ்.ஆர். ஞானசுந்தரம் கூறினார்.

இணுவில் மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது.

பாரதக் கதையைப் பார்க்கும் போது அநீதியாக, நயவஞ்சகமாக துரியோதனன் 12 ஆண்டுகள் பாண்டவர்களை வனவாசம் அனுப்பினான். அதேபோல் இந்த அரசும் வலி. வடக்கு மக்களை 1990 ஆம் ஆண்டு தொடக்கம் இடம்பெயர வைத்து சொல் லொணாத் துன்பத்திற்கு ஆளாக்கி விட்டது. வலி.வடக்கு மக்கள் இடம்பெயர்ந்து 11 ஆண்டுகள் சென்றுவிட்டன. இன்னும் ஓராண்டு அதாவது பாண்டவர்களுக்கு விதிக் கப்பட்டது போல் 12 வருடம் முடிய எமக்கு விமோசனம் கிடைக்கும் என எதிர்பார்க் கின்றோம்.

இச்சமயத்தில் தேர்தல் ஒன்று நமக்கு முன் வந்து நிற்கின்றது. இத் தேர்தலில் நான்கு தமிழ்க்கட்சிகள் ஒன்று சேர்ந்ததும் நல்லதொரு சகுணமாகவும் எமக்கு விமோச னம் கிடைக்கும் என்ற அறிகுறியாகவும் உ ள் ளது. எது எப்படி இருந்தாலும் வலி. வடக்கு மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு ஒன்று விரை வில் எட்டப்படவேண்டும். தவறினால் சாத்வீக வழியிலான போராட்டங்களை நாம் முன் னெடுக்க வேண்டும் - என்றார்.

**செயலாளர் வை. சந்திரபாலன் பேசுகையில்:-**

எமது சனசமூக நிலையம் பாரம்பரியமாக சமுதாயத்திற்கும் சமயத்திற்கும் பெரும் பணியாற்றி வந்தது. சிலகாலம் இந் நிலையம் இயங்க முடியாத நிலையில் இருந்தது. சிதறி வாழும் மக்களை ஒன்றுபடுத்தி, எதிர்கால சுபீட்சத்திற்கான வழி வகைகளை மேற்கொள்ள வேண்டும் என்றார்.

இதனையடுத்து நடப்பு வருட நிர்வாகிகள் தெரிவில் தலைவராக எஸ்.ஆர். ஞானசுந்தர மும் செயலாளராக வை. சந்திரபாலனும் பொருளாளராக வி. தவராசாவும் தெரிவாகினர்.

# 'கலாபூஷணம்' எஸ். ஆர். ஞானசுந்தரம்

**கலாபூசனம் பட்டம் பெற்றபோது பத்திரிகையின் கண்ணோட்டம்**

பாரம்பரியமான நாகசுர, தவில் கலை களை அழியாது பாதுகாக்கவேண்டும், அவற்றை பேணும் இசைவேளாளர் சமூகம் கலை, சமூக, பொருளாதார அபிவிருத்தியில் மேலோங்க வேண்டும் என்ற நோக்கில் 40 ஆண்டு காலம் எஸ்.ஆர். ஞானசுந்தரம் ஆற்றிய பணிக்குரிய கௌரவமாக 'கலா பூஷணம்' விருது கிடைத்துள்ளது.

சரித்திர பிரசித்திபெற்ற மாவிட்டபுரம் கிராமத்தில் புகழ்பூத்த இசை வேளாளர் மரபில் பக்கிரிசாமி, இராமநாதன், உருத்திராபதி, நடராசா ஆகிய இசை விற்பன்னர்களின் குடும்பத் தில் மூத்த ஆண் மகனாகவும், இராமநாதன் அவர்களின் மகனாகவும் பிறந்து சிறு வயதி லிருந்தே நாதஸ்வரத்தை பெரிய தந்தை, சிறிய தந்தையர்களிடமும், பின்னர் வண்ணை சிவன்கோவில் ஆதீன வித்துவான் கந்தசாமிப்பிள்ளையிடமும் பயின்று, இந்தியா சென்று பல வித்துவான்களிடம் மேலும் கலையை விருத்திசெய்து இன்றுவரை நாதஸ் வரத்தைக் கையாண்டு வருகிறார். இவற்றை விட வட இலங்கைச் சங்கீதசபைப் பரீட்சை யில் புல்லாங் குழல் பாடத்தில் 5 ஆம் தரம் வரை சித்தியடைந்துள்ளார்.

இசை வேளாளர் சமூக மறுமலர்ச்சிக் காக இசைவேளாளர் சங்கத்தைப் புனர மைத்துக் கடந்த 40 ஆண்டுகளாகத் தலைவ ராகவும், செயலாளராகவும் இருந்து பல்வேறு பணிகளை ஆற்றியுள்ளார். 'இசையாளன்' என்னும் பத்திரிகை ஒன்றையும் நடத்தி வந்துள்ளார்.

யாழ். அரசாங்கச் செயலகக் கலாசார பேரவையால் தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்தில் நடத்தப்பட்டு வந்த நாகசுர - தவில் பயிற்சி பாடசாலையில் இரண்டு ஆண்டுகள் நாகசுரத்திற்கான ஆசிரியராக கடமையாற்றியுள்ளார். அவரது இசைப் பணியைக் கௌரவித்து, துர்க்காதேவி தேவஸ்தானம் பொன்னாடை போர்த்திக் கௌரவம் அளித்தது.

இசைப்பணியுடன் சமூகப் பணிகள் பல வற்றில் சிறப்புடன் ஈடுபட்டமைக்காக மாவை - கொல்லங்கலட்டி கிராம அபிவிருத்திச் சங்கக் கட்டிடத் திறப்பு விழாவில் வைத்து யாழ் அரச அதிபரால் "சமூகத் தொண்டன்" என்னும் பட்டம் வழங்கிக் கௌர விக்கப்பட் டார். பழைய வீமன்காமம் கிரா மோதய சபைத்தவைராகவும் விளங்கியுள்ளார். மேலும் கிராம அபிவிருத்திச் சங்கம், சன சமூக நிலையம், கம்பன் கழகம், மக்கள் குழு, தெ.ப.நோ.கூ சங்கம் உட்பட பல பொது அமைப்புகளில் பதவி வகித்துப் பணிகளை ஆற்றிவருகிறார்.

வீரகேசரி, தினகரன் போன்ற பத்திரிகை களில் அன்னாரின் இசை ஆராய்ச்சிக் கட்டு ரைகள் பல வெளிவந்துள்ளன. ஈழநாடு, தினபதி, சிந்தாமணி ஆகிய பத்திரிகைகளின் நிருபராகப் பணியாற்றிச் செய்திகள், கட்டுரைகள், ஆக்கங்கள் என்பவற்றை எழுதியுள்ளார்.

மொத்தத்தில் நாடு பெருமைப்படக்கூடிய கலைஞர்.

–செம்பியன்

# இசை வேளாளர் பற்றி பேராசிரியர் வித்தியானந்தன்

ஈழத்து இசை உலகிலே இன்று ஒரு தனியிடம் வகிப்பவர் யாழ்ப்பாணத்து இசை வேளாளர். ஏனைய கலைஞருக்குக் கிடைக் காத புகழையும் பெருமையையும் பெற்றவர்கள் இவர்கள். தமிழ் நாட்டிற்கும் ஈழத் திற்குமிடையே ஒரு கலைப்பிணைப்பை ஏற் படுத்தியவர்களும் இசை வேளாளர்களாகும். தமிழ் நாட்டிலுள்ள நாதசுர வித்துவான்களும் தவில் வித்துவான்களும் ஈழத்திற்கு வந்து சேவகம் செய்வதைப் பெரும் பேறாகக் கொள்கின்றனர்.

இங்கு மூன்று மாதங்களுக்கு மேல் தங்கியிருந்து சேவகம் செய்த வித்துவான் கள் பலர். மேலும் ஈழத்துக் கலைஞரிடம் பாடம் கேட்பதற்காகப் பலர் தமிழகத்தி லிருந்து வந்திருக்கின்றனர். மாவிட்டபுரம் சோமசுந்தரம், மாவிட்டபுரம் பக்கிரிசாமி, அளவெட்டி தர்பார் கந்தையா போன்ற வர்களிடம் தமிழகத்திலிருந்து பலர் நாத சுரப்பாடம் கேட்க வந்திருந்தனர். தவில் கற்பதற்காக இணுவில் சின்னத்துரை முளாய் ஆ. வை. ஆறுமுகம் போன்றவரிடம் தமிழ் நாட்டு இளைஞர் வந்தனர்.

இவ்வாறு சிறந்து விளங்கிய யாழ்ப் பாணத்து இசைவேளாளர் கோயிலை மைய மாக வைத்து இம் மங்கல இசையை வளர்த்தனர். கோயில் நித்திய நைவேத்திய பூசைகளில் நாதசுர இசை முக்கிய இடம் பெறுகின்றன. ஒருகாலப் பூசை தொடக்கம் ஆறு காலப் பூசை நடக்கும் கோயில்களில் நித்திய மேளச்சேவை இடம்பெறும். கோயில் திருவிழாக் காலங்களில் நாள்தோறும் நாத சுர, தவில் நிகழ்ச்சிகள் இடம்பெறும். மேலும் திருமண விழா, கலைவிழா, பட்டமளிப்பு விழா, வரவேற்பு விழா, ஊர்வலம் எனப் பல விழாக் களிலும் நாதசுர, தவில் நிகழ்ச்சிகள் இடம் பெறுகின்றன.

இவ்வாறு வாழ்க்கையின் சமய சமூக நிகழ்ச்சிகள் யாவற்றிலும் நாதசுரம் முக்கிய இடம்பெற்று வருகின்றது. இந்தவகையில் பல துறைகளில் இசையை வளர்த்துவரும் இசைவேளாளரின் தொண்டு மகத்தானது. இவர்கள் இன்றும் குருகுல வாசக் கல்வி யையே பெரிதும் பின்பற்றுகின்றனர். இவர் களுட் பலர் இசையையே தமது தொழிலாகக் கொண்டவர்கள். இவர்களுக்கும் பொது மக்களுக்குமிடையே நெருங்கிய தொடர்புண்டு.

மக்களோடு தொடர்புடைய பல வைபவங் களில் இவர்கள் இன்று இசை முழங்கு வதினால் இவர்களுக்கு மக்கள் ஆதரவு நிறைய உண்டு. பொது மக்களின் ஆதரவில் நாதஸ்வரக் கச்சேரியும் தவில் கச்சேரியும் இடம்பெறுவது இங்கு சாதாரணமாகி விட்டது.

முன்பெல்லாம் தமிழரைத் தமிழ் மன்னர் ஆண்ட காலத்திலே கலைஞரை மன்னர் ஆதரித்தனர். இதற்கு ஓர் உதாரணம் தருகின் றேன். பாண்டி நாட்டிலே ஒரு சிற்பி கோயி லிலேயே சிற்ப வேலைகள் செய்து கொண்டு இருக்கின்றான். அவனுக்குப் பின்னால் அவ னின் பணியாளர் வெற்றிலை மடித்துக் கொடுத்துக் கொண்டு நிற்கின்றான். அந் நேரம் பாண்டிய மன்னன் அங்கு வருகின் றான். பணியாளைப் போகும்படி சைகை காட்டிவிட்டுத் தானே சிற்பியின் பின் நின்று வெற்றிலை மடித்துக் கொடுக்கின்றான். வேலையில் ஆழ்ந்த சிற்பி சிறிது நேரத்திற் குப் பின் வெற்றிலையின் நறுமணம் வீசுவதை உணர்ந்து திரும்பிப் பார்க்கின்றான். தனக்கு வெற்றிலை மடித்துத் தந்தவன் நாட்டு மன் னன் என்பதைக் கண்டதும் அவன் காலடியில் விழுந்து தன்னை மன்னிக்குமாறு வேண்டு கின்றான். அதற்கு மன்னன், ' நான் இந்நாட் டுக்கு மட்டும் மன்னன்: நீ கலைகளுக்கு மன்னன்: உன்னோடு நோக்கும் போது நான் சிறுவன்' என்று தட்டிக்கொடுக்கின்றான். இவ் வளவு மதிப்பு அன்று கலைஞருக்கு இருந்தது.

இன்று கலைஞர்களை மக்கள் போற்று கின்றார்கள். பாராட்டுகின்றார்கள். அவர் களுக்குப் பட்டங்கள் அளிக்கின்றார்கள். பொற்கிழி வழங்குகின்றார்கள். பொன்னாடை போர்த்துகின்றார்கள்.

அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு.

அன்பகத் தில்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்
வற்றல் மரந்தளிர்த் தற்று.

## அமரர் ஞானசுந்தரம் ஆற்றினார் அரிய தொண்டு

அன்பினில் அடக்கம் தன்னில்
ஆன்மீக நெறியில் வாழ்ந்து
கண்ணென கலைகள் தம்மை
காத்ததோர் கர்ம வீரன்
மண்மிசை மாவைக் கந்தன்
மலரடி தொழுத ஞானி

பண்பினன் பழக என்றும்
பாகென இனிக்கும் மேலோன்
கண்களில் கருணை பொங்க
தன் கருத்தினை எடுத் துரைத்து
மண் மிசை தமிழற் குற்ற
மா செலாம் களைந்து நின்றான்

பண்ணிசை பாடிப் பாடி
பரமனை நினைந்து உருகி
மண்மிசை இறைவன் மாட்சி
மனமுருகியே பேசி நிற்பான்
மாவைக் கந்தனை மனத்திருத்தி
மாண்புற வாழ்ந்தான் நீடு

குழலினைக் கையில் ஏந்தி
குழைந்துளம் உருகும் வண்ணம்
அளப் பெருகும் இராகத்தோடு

அரங்கினை அழகு செய்வான்
பழம் பெரும் கலைகள் யாழின்
பாழாகும் தமிழர் வாழ்வு என்பான்

எழுத்தினில் வல்லோன் ஆகி
ஏடெலாம் வியக்கம் வண்ணம்
பழுத்த பேர் அறிவு கொண்டு
பயன்தர எழுதி நின்றான்
முழுதுமாய் எழுத்துலகில் இவன்
முத்திரை குத்திச் சென்றான்

சொந்த நலம் தனைத் துறந்து
சுதந்திரம் வேண்டி நின்று
தந்தை செல்வா உடனிருந்து
தவவேள்வி காத்து நின்றான்
நந் தமிழ் தாய் மீது கொண்ட
நற் பெரும் அன்பினாலே
செந்தமிழ் தளைத்து ஓங்க
சேவைகள் செய்து வாழ்ந்தான்.

விடுதலை பெற்றின் நாடு
விமோசனம் காணும் வேளை
தொடுத்த போர் முடிவுற்று
சுமுகமாய் வாழும் போது
அடுத் தொரு தமிழ் மேதையாக
அவதாரம் பெற்று இங்கே
அடுத்ததோர் தமிழர் ஆட்சி
அவனி வியப்புற அமைக்க வாரீர்

**'விகடகவி'**
**மு. திருநாவுக்கரசு**
**இளைப்பாறிய மாவட்ட நீதிபதி**
**சட்டத்தரணியும் பிரசித்தநொத்தாரிசும்**
**127 / 7ஏ, கோயில் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

# நன்றி நவில்கின்றோம்



எமது குடும்பத் தலைவர் **எஸ். ஆர். ஞானசுந்தரம்**

சுகவீனமுற்ற நிலையில் இருந்தபோது வீடு தேடி வந்து எமக்கு ஆறுதல் கூறிய அன்புள்ளங்களுக்கும், அவரது இறுதிக் கிரியைகளில் பங்கேற்று அவருக்கு அஞ்சலி செலுத்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள், புத்திஜீவிகள் மற்றும் அன்பர்கள், உறவினர்கள், சகலருக்கும், கண்ணீர் அஞ்சலிகளை வெளியிட்டவர்களுக்கும், உள்நாட்டில் இருந்தும் வெளிநாடுகளில் இருந்தும் தந்தி, தொலைபேசி வாயிலாக ஆறுதல் கூறியவர்களுக்கும் அன்னாரின் இறுதிக் கிரியைகளை நடத்த உதவிய உறவினர்கள், நண்பர்கள், அன்பர்கள் ஆகியோருக்கும், ஞானம் மலரை வெளியிட ஆக்கங்களை தந்தவர்களுக்கும். ஞானம் மலரை சிறப்புற அச்சேற்றிய பாரதி அச்சகத்துக்கும். முகப்புப் பக்கத்தை அச்சேற்றிய ஹரிகனன் அச்சகத்துக்கும் எமது சிரம் தாழ்த்திய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

நன்றி

**செட்டிவளவு ஒழுங்கை,**
**இணுவில் மேற்கு,**
**இணுவில்.**

குடும்பத்தினர்.













இசையியலில் மட்டுமன்றி இயற் தமிழிலும் வல்லவராகத் திகழ்ந்தவர். சூழமையின் நெருக்கடிகளிடையே ஊரைத் தொலைத்து அலையும் வாழ்விடையே உடல் தளர்ந்து போனபோதும் உள்ளத்து உறுதியும் பண்பாட்டு உணர்வும் குன்றியதில்லை அவரிடம். தன் வாழ்வின் ஒவ்வொரு கணங்களினையும் சுருதி பிசகாத ஸ்வரங்களால் நிறைத்து அர்த்தமுள்ள வாழ்வு வாழ்ந்தவர் ஞானக் கலைஞன் ஞானசுந்தரம்.

– பேராசிரியர் நா.சண்முகலிங்கன், துணைவேந்தர், யாழ். பல்கலைக்கழகம்

விடுதலை பெற்றின் நாடு
விமோசனம் காணும் வேளை
தொடுத்த போர் முடிவுற்று
சுமுகமாய் வாழும் போது
அடுத் தொரு தமிழ் மேதையாக
அவதாரம் பெற்று இங்கே
அடுத்ததோர் தமிழர் ஆட்சி
அவனி வியப்புற அமைக்க வாரீர்

- விகடகவி